மூன்று சோதிட நூல்கள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 549

மூன்று சோதிட நூல்கள்

(சாதக கணிதாமிர்தம், சந்திர காவியம், சர்வார்த்த சிந்தாமணி -திசைவிளக்கம்)

சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்
மற்றும் உரையாசிரியர் :

முனைவர் **சத்தியபாமா காமேஸ்வரன்,**
எம்.ஏ, எம்.ஃபில்., எம்.எட்., பி.எச்.டி.
சோதிடவியல் பட்டயம்
சுவடியியல் பட்டயம்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும்

ஆய்வு மையம்

தஞ்சாவூர்.

2013] [விலை : ரூ. 150-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	மூன்று சோதிட நூல்கள்
பதிப்பாசிரியர்	:	முனைவர் கா. சத்தியபாமா
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	549
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2013
தாள்	:	TNPL 18.6 kgs.
நூல் அளவு	:	21 x 14 c.m.
பக்கங்கள்	:	204
படிகள்	:	500
எழுத்து	:	12
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	சோதிடம்
விலை	:	ரூ. 150-00

வெளியீட்டாளர் முகவுரை

கலைகள் அனைத்திற்கும் கருவூலமாகத் திகழும் தஞ்சை மாநகரகத்தில் அறிவுக் களஞ்சியமாய் விளங்கும் சரசுவதி மகால் நூலகம் தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் பல ஆயிரக்கணக்கான சுவடிகளைப் பாதுகாத்து வருவதுடன் அவற்றில் அரிய சுவடிகளை உரிய வல்லுநர்களைக்கொண்டு நூலாகப் பதிப்பித்து அச்சிட்டு வெளியிடும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

சரசுவதி மகால் நூலக தமிழ்ப்பிரிவில் பதிவாகி இதுவரை வெளிவராத சிறிய ஆனால் அரிய செய்திகளைக்கொண்ட சாதக கணிதாமிர்தம், சந்திர காவியம், சர்வார்த்த சிந்தாமணி-திசை விளக்கம் என்ற மூன்று சுவடிகளும் 'மூன்று சோதிட நூல்கள்' என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

* சாதக கணிதாமிர்தம் - பன்னிரு பாவங்களின் பலன்கைள 129 அறுசீர் விருத்தப் பாக்களின் மூலம் உரையுடன் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

** சந்திர காவியம் - 104 வெண்பாக்களின் மூலம் ஒருவனுடைய வாழ்வில் ஏற்படக்கூடிய யோகம், திசாபலன், பன்னிரு லக்கின பலன், கிரகங்களின் உறவு முறை, மாரகம் போன்ற செய்திகளை எடுத்தியம்புவதாக உள்ளது. சோதிடவியலில் மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்கள் மறைவிடங்களாகவும், பாவஸ்தானமாகவும் கொள்ளப்படும். ஆனால் சந்திர காவியம் என்னும் இந்நூல் பன்னிரண்டாம் இடத்திற்குப் பதிலாக பதினோராமிடத்தை மறைவிடமாகவும், பாவஸ்தானமாகவும் எடுத்தியம்புகிறது. இந்நூலில் உள்ள வெண்பாக்களுக்கு உரை சுவடியில் இல்லாத காரணத்தால் பதிப்பாசிரியர் உரை எழுதியுள்ளார்.

✱✱✱ சர்வார்த்த சிந்தாமணி - திசைவிளக்கம் - சர்வார்த்த சிந்தாமணி என்ற பெரிய சோதிட நூலில் இடம்பெற்றுள்ள திசைகளின் பலன்களை எடுத்துரைக்கும் பகுதி மட்டும் 67 எழுசீர் விருத்தப் பாக்களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 67 பாடல்களுக்கும் சுவடியில் உரை இல்லாத காரணத்தால் உரை எழுதியுள்ளார். இந்த மூன்று சோதிட நூல்களையும் தொகுத்துப் பதிப்பித்துள்ள நூலக சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர் முனைவர் சத்தியபாமா காமேஸ்வரன் அவர்களுக்கு எனது பாராட்டுகள். இந்நூல் சோதிட ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர உதவிய மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. ச. நடராஜன்,B.Sc., அவர்களுக்கும், இந்நூலக நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit., M.L.I.S., Ph.D., அவர்களுக்கும் இந்நூல் அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணிபுரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. பாஸ்கரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
01-07-2013

பதிப்புரை

நம் முன்னோர்கள் தங்களுடைய எண்ணங்களைத் தங்கள் சந்ததியினருக்கு உணர்த்தும் வண்ணம் இலக்கணம், இலக்கியம், மருத்துவம், சோதிடம், சிற்பம் போன்ற பல்துறைத் தொடர்பான நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றுள் சோதிடம் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற கலையாக விளங்குகிறது. எதிர்காலத்தைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புவது மனிதனின் எண்ணங்களுள் ஒன்றாக விளங்குகின்ற காரணத்தால், பரவலாக மக்களிடையே நிலைத்து நிற்கிறது எனலாம்.

மக்களின் பண்பாட்டோடு இயைந்து விளங்கும் இச்சோதிடக் கலைக்கு ஆதாரமான நூல்கள் பலவும் நம் முன்னோரால் இயற்றப்பட்டன. கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டவை போக, எஞ்சியுள்ள நூல்கள் பல ஓலைச் சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப் பட்டு அச்சு நூல்களாக வெளிவந்துகொண்டு இருக்கின்றன. இன்னும் சில நூல்கள், ஓலைச் சுவடிகளிலேயே உறங்கிக் கொண்டிருக்கின்றன.

இன்று பல்கலைக் கழகங்கள் பலவும் சோதிடக் கலையை அறிவியலாக ஏற்றுக் கொண்டுள்ளன. சான்றிதழ், பட்டய, இளங்கலை, முதுகலை நிலையில் அங்குச் சோதிடம் பயிற்றுவிக்கப்படுகின்றது. மேலும், சோதிடக் கலையைக் குறித்து அறிந்துகொள்ளவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் விரும்புகின்றனர். இத்தகையோர்க்குப் பெரிதும் உதவக்கூடிய நூல்களைக் கலைக் கருவூலங்கள் என்றுணர்ந்து பல நிறுவனங்கள் இவற்றைப் பாதுகாத்துத் தக்கவர்களைக்கொண்டு பதிப்பித்து வெளியிட்டு வருகின்றன.

இத்தகைய நூல் வெளியீட்டு நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஓலைச்சுவடிகளில் உள்ள சோதிட நூல்கள் பலவற்றையும் வெளியிட்டு வருகின்றது. அதிகமான சோதிடச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம் என்ற சிறப்பினை உடையதாகவும் இருந்து வருகின்றது. தமிழ் மொழியில் மட்டுமின்றி வடமொழியில் உள்ள சோதிட நூல்களையும் அச்சிட்டு வெளியிடுவது இந்நூலகத்தின் தனிச்சிறப்பாகும்.

இந்நூலகத்தில் வராகர் ஓரா சாத்திரம், காலச்சக்கரம், சினேந்திரமாலை, சாதகாலங்காரம், சகாதேவ நிமித்த சூடாமணி, நட்சத்திர சிந்தாமணி, பஞ்சபட்சி சாஸ்திரம், குமாரசுவாமியம், சூடாமணி உள்ளமுடையான், சாதக பாரிஜாதம், சர்வார்த்த சிந்தாமணி, சாதகநூல், சாதக சிந்தாமணி முதலான தமிழ் சோதிட நூல்கள், ஓலைச் சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவையன்றி, வடமொழியில் உள்ள சாதக சந்திரிகை காலப்பிரகாசிகை, காலவிதான பத்ததி, பூர்வபாராசார்யம் முதலான நூல்களும் இந்நூலகத்தினரால் பதிப்பிக்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன. தமிழ் விளக்கங்களுடனும் தமிழ் மொழிபெயர்ப்புடனும் இவை அமைந்துள்ளன என்பது இந்நூல்களின் தனிச்சிறப்பாகும்.

மூன்று சோதிட நூல்கள்:

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இருநூற்றிற்கும் மேற்பட்ட சோதிட நூல்கள் ஓலைச் சுவடிகளில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. பொதுவாகச் சுவடிகளில் அமைந்துள்ள நூல்கள் அனைத்தும் முழுமையாக உள்ளன என்று சொல்ல இயலாது. சில சுவடிகள் முழுமையானவையாகவும் சில முழுமை

யற்றவையாகவும் காணப்படும். பல சுவடிகள் பூச்சிகளால் பாதிப்படைந்தவைகளாக இருக்கும். படிப்பதற்கு இயலாத நிலையில் இருக்கும்.

நல்ல பதிப்பு நூலைத் தருவதற்கு நல்ல நிலையில் உள்ள முழுமையான சோதிட நூல்கள் தேர்ந்தெடுக்கப்படும். தமிழில் அமைந்துள்ள சோதிட நூல்கள் பலவும் இவ்வாறு பதிப்பிக்கப்பட்டுவிட்டன எனலாம். எனவே, எஞ்சியுள்ள சுவடிகளில் உள்ள அளவில் சிறிதாக அமைந்த நூல்கள் பலவும் பதிப்பிக்கப்படாமல் உள்ளன. அளவில் சிறியனவாகக் குறைந்த பாடல்களைக் கொண்ட இந்நூல்கள் நல்ல சோதிட நூல்களாகவும் அரிய சோதிட நூல்களாகவும் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தனி நூலாக அச்சிட இயலாது. ஆதலின் இந்நூலகத்தில் உள்ள சிறிய சோதிட நூல்களை ஒன்றாகச் சேர்த்துப் பதிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் வெளிப்பாடாக மூன்று சோதிட நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ள சுவடிகளுள், சாதக கணிதாமிர்தம், சந்திர காவியம், சர்வார்த்த சிந்தாமணி - திசை விளக்கம் ஆகிய மூன்று நூல்களையும் ஒருங்கிணைத்து, மூன்று சோதிட நூல்கள், என்ற தலைப்பில் பதிப்புப்பணி மேற்கொள்ளப்பட்டது. இது போன்றுள்ள பல்வேறு நூல்களையும் பதிப்பிக்கும்பணி எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.

'மூன்று சோதிட நூல்கள்' என்ற இந்த நூலின் பதிப்புப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களில் சாதக கணிதாமிர்தம் என்ற தலைப்பில் இரண்டு சுவடிகள் (சுவடிஎண் 1887, சுவடி எண் 1976 a) கிடைத்தன. அவற்றில் சுவடி எண் 1976 a -இல் அமைந்த நூல்,

பதிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள சுவடி எண் 1887 - இல் அமைந்த நூல் ஒப்பீட்டிற்குப் ன்படுத்திக் கொள்ளப்பட்டது.

'சந்திர காவியம்' என்ற தலைப்பில் இரண்டு சுவடிகள் (சுவடி எண் 1921, சுவடி எண் 1946 c) கிடைத்தன. இவற்றுள், மிகுதியாக பாடல்களைக் கொண்ட 1946 c என்ற எண்ணுள்ள சுவடி, பதிப்பிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது. குறைந்த பாடல்களைக் கொண்ட சுவடி எண் 1921-இல் அமைந்த நூல், ஒப்பீட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. 'சர்வார்த்த சிந்தாமணி - திசைவிளக்கம்' என்ற தலைப்பில் இரண்டு சுவடிகள் (சுவடிண் 2104, 2105 i) கிடைத்தன. இவற்றுள், மிகுதியானப் பாடல்களைக் கொண் சுவடி எண். 2104 இல் அமைந்த சுவடி, பதிப்பி தேர்ந்தெடுக்கப்பட்டது. குறைந்த பாடல்க க் கொண்ட சுவடி எண் 2105 i இல் அமைந்த நூல், ஒப்பீட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

சாதக கணிதாமிர்தம்

'சாதக கணிதாமிர்தம்' இரத்தினச் சுருக்கமாகச் சோதிடப் பன்னிரு பாவங்களின் பலன்களையும் 129 அறுசீர் விருத்தப் பாக்களால் எடுத்துரைக்கும் சிறிய அரிய நூலாகும். இந்நூல் மூலமும் உரையுமாக அமைந்துள்ளது. இந்நூலின் முதல் பாவத்தில் 4 பாடல்களும், இரண்டாம் பாவத்தில் 12 பாடல்களும், மூன்றாம் பாவத்தில் 5 பாடல்களும், நான்காம் பாவத்தில் 13 பாடல்களும், ஐந்தாம் பாவத்தில் 14 பாடல்களும், ஆறாம் பாவத்தில் 5 பாடல்களும், ஏழாம் பாவத்தில் 20 பாடல்களும், எட்டாம் பாவத்தில் 24 பாடல்களும், ஒன்பதாம் பாவத்தில் 14 பாடல்களும், பத்தாம் பாவத்தில் 13 பாடல்களும், பதினோராம்

பாவத்தில் 2 பாடல்களும், பன்னிரண்டாம் பாவத்தில் 3 பாடல்களும் அமைந்துள்ளன். இவற்றுள் எட்டாம் பாவத்தில் மற்ற பாவங்களைக் காட்டிலும் அதிகமாக 24 பாடல்கள் உள்ளன. பதினோராம் பாவத்தில் மற்ற பாவங்களைக் காட்டிலும் குறைவாக 2 பாடல்கள் மட்டுமே உள்ளன என்பது இங்குச் சுட்டத் தகுந்த செய்தியாகும்.

இந்நூலின் ஆசிரியர் குறித்த செய்திகள் எதுவும் நூலில் கூறப்படவில்லை. இருப்பினும், கணபதி, கந்தன், கலைமகள் வணக்கப் பாடல்கள் செய்யுள்களாக விளங்குவதால், இந்நூலின் ஆசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதை நன்குணரலாம்.

பதிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டச் சுவடியில் 126 பாடல்கள் இருந்தன. அச்சு நூலில் கடவுள் வாழ்த்துப் பாடல்களைத் தவிர 129 பாடல்களும் இருந்தன. முழுமை கருதி, அவை இந்நூலில் சேர்க்கப் பட்டுள்ளன.அச்சு நூலில் இருந்து எடுக்கப்பட்ட பாடல்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இந்த அச்சு நூல் 1905 ஆம் ஆண்டு (104 ஆண்டுகளுக்கு முன்னால்) பதிப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

சந்திர காவியம் :

சந்திர காவியம் சோதிடவியல் செய்திகளை 104 வெண்பாக்களில் எடுத்துரைக்கும் சோதிட நூலாகும். பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்திர காவியம் சுவடியில் 81 பாடல்கள் இருந்தன. ஒப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சுவடியில் 78 பாடல்கள் இருந்தன. இவ்விரு சுவடிகளிலும் கடவுள் வாழ்த்துப் பாடல் காணப்படவில்லை. ஆதலின், கிடைத்த அச்சு நூலின் காப்புப் பாடல் பதிப்பிக்கப்பட்ட நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், சுவடிகளில் இடம்

பெறாமல் அச்சு நூலில் காணப்படும் இருபத்து இரண்டு பாடல்கள், ஒப்பீட்டில் கிடைத்த ஒரு பாடல் ஆகியவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை சேர்க்கப் பட்டுள்ள இடங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலின் மூலச் சுவடியிலும் ஒப்பீட்டிற்குக் கிடைத்த சுவடியிலும் மூலம் மட்டுமே அமைந்திருந்தது. இந்நூலுக்குப் பதிப்பாசிரியரால் உரை எழுதப்பட்டுள்ளது.

நூலாசிரியர்:

சந்திர காவியத்தின் ஆசிரியரின் பெயர் சதாசிவன் என்பதாகும். இதனை இந்நூலின் இறுதியிலமைந்த இரு பாடல்களின் வழி அறியலாம்.

"பேசுமதி ராசிதனில் பெம்மான்ச தாசிவன்சொல்
வாச மெனுங்கவிதை வையகத்தில்-நாசமில்லை
என்றெவரும் போற்றி ஈசன் அருள்பெறுவர்
மன்றதனில் மெய்யாம் மதி." -(பா.எண் - 103)
"ஆதிவை ராசிமதி யைந்திற் சதாசிவனுஞ்
சோதிடத்தை வெண்பாவாய்ச் சொல்லினான்-நீதிவள
கேசனென வாழ்ந்திடுவர் கீர்த்திமிகுங் கற்றவர்க்கு
ஈசனருள் உண்டென இயம்பு." -(பா.எண். 104)

என்ற இரு பாடல்களிலும் ஈசனருள் பெறுவர் என்று சுட்டப்பட்டிருப்பதாலும் இந்த ஆசிரியரின் பெயர் சதாசிவன் என்று சிவனின் பெயராக அமைந்திருப்ப தாலும் இந்த ஆசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதை அறியலாம்.

நூல்

சந்திரகாவியம், ஒருவனுக்கு வாழ்வில் ஏற்படக்கூடிய மாரகம், யோகம் திசாபலன், பன்னிரு இலக்கின பலன்கள், கிரகங்களின் உறவு போன்ற பல்வேறு செய்திகளை எடுத்துரைக்கும் நூலாக அமைந்துள்ளது.

பொதுவாக எல்லாச் சோதிட நூல்களிலும் மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களே மறைவிடங்களாகவும் பாவஸ்தானங்களாகவும் குறிக்கப்படுகின்றன. ஆனால் சந்திரகாவியம் பன்னிரண்டாம் இடத்திற்குப் பதிலாகப் பதினோராமிடத்தை மறைவிடமாகவும் பாவஸ்தானமாகவும் குறித்துள்ளது. இது நூல் முழுவதும் காணப்படுகிறது. எனவே நூலாசிரியர் கருத்தும் இதுவாகவே இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பொதுவாகப் பதினோராம் இடம் மூத்த சகோதரர் மற்றும் லாபஸ்தானமாகவே குறிக்கப்படுகிறது. இந்த இடம் பாவஸ்தானமாக வேறு எந்த நூலிலும் குறிக்கப்படவில்லை.

சர்வார்த்த சிந்தாமணி -திசைவிளக்கம்

சர்வார்த்த சிந்தாமணி என்ற பெரிய சோதிட நூலில் திசைகளின் பலன்களை எடுத்துரைக்கும் பகுதி மட்டும் அமைந்த தனி நூலாகும். அறுபத்து ஏழு, எழுசீர் விருத்தப் பாக்களால் இந்நூல் அமைந்துள்ளது. பன்னிரு பாவாதிபர்களான இராகு, கேதுக்கள் தவிர ஏழு கிரகங்களின் திசைகளில் பாவங்களின் இடத்திற்கேற்ப திசா பலன்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், இராகு, கேது உள்ளிட்ட ஒன்பது கிரகங்களின் திசைகளின் பலன்களும், கிரகங்கள் அமர்ந்துள்ள இராசிகளின் அடிப்படையில் திசா பலன்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் ஆசிரியர் யார் என்ற விபரம் தெரியவில்லை. எனினும் முருகன் மீது காப்புச் செய்யுள் அமைந்திருப்பதைக் கருத்தில் கொண்டு இவர் சைவ சமயத்தவர் என்பதை அறியலாம். இந்நூலின் முப்பத்து எட்டாவது பாடலின் இறுதியில், ‘விடனூர் சிறந்திடு முனிவரன் றானே’ என்பதால், இந்நூலின் ஆசிரியர் விடனூர் என்ற ஊரினைச் சார்ந்தவர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இம்மூன்று நூல்களில், சாதக கனிதாமிர்த நூலைத் தவிர, 'சந்திர காவியம், சர்வார்த்த சிந்தாமணி-திசைவிளக்கம் ஆகிய இரு நூல்களில் மூலம் மட்டுமே அமைந்திருக்கின்றன. எனவே, படிப்போருக்கு எளிமை பயக்கும் வண்ணம், பதிப்பாசிரியரால் இவ்விரு நூல்களும் உரையெழுதப்பட்டுள்ளது.

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, மூன்று சோதிட நூல்கள் என்னும் இந்நூலைப் பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு எம். எஸ். சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் நல்ல முறையில் வெளிவர துணைநின்ற தற்போதய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு கா. பாஸ்கரன் இ.ஆ.ப. அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் இந்நூலக நிருவாக அலுவலர்(பொறுப்பு) திரு. ஆர் முத்துக்குமரசாமி அவர்களுக்கும், இந்நூலக நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன் அவர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த நூலகக் கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் உரித்தாக்குகிறேன்.

இந்நூல் குறித்த கருத்துக்கள் இருப்பின், தெரிவிக்க வேண்டுகிறேன்.

கா. சத்தியபாமா
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

நூல்	1
காப்பு	
இலக்கன பாவம்	
மேம்பாடு உடையவன்	3
வறுமை உடையவன்	4
இரண்டாம் பாவம்	
நல்ல பார்வை	6
கண்பார்வைக் குறைபாடு	6
நற்சொல் பேசுபவன்	7
கடும்வாக்கு உடையவன்	8
நல்வழியில் சேரும் செல்வம் உடையவன்	9
தீய வழியில் சேரும் செல்வம் உடையவன்	9
செல்வத்தின் வரவு	$0
செல்வம் சேருதல்	11
வறியவன்	11
செல்வன்	12
குடும்பம் அழிவு	13
மூன்றாம் பாவம்	
சகோதர நன்மை	14
செவிடு, ஊமை	15
இரட்டைச் சகோதரர்கள்	16
வலிமையுடைய சகோதரர்	17
நான்காம் பாவம்	
வாகன யோகம்	18
வாகனம் இல்லாதவன்	19
பூமியால் நன்மை	20
பூமியால் நன்மை, அழிவு	21
தாயையும் உறவினர்களையும் போற்றுபவன்	22
தாய், உறவினர்களைப் போற்றாதவன்	23
சுகம் பெறுபவன்	24
எந்நேரமும் துக்கம் அடைபவன்	24

எந்நேரமும் கனவு காண்பவன் 25
குளம் வெட்டுதல் 26
தாய், குழந்தை மரணம் 26

ஐந்தாம் பாவம்

தூய்மையான உள்ளம் 28
புத்திரர்கள் இல்லாதவன் 28
அதிக புத்திரர் 29
தத்து புத்திரர் 30
புத்திரப் பேறு 30
ஆண், பெண் பிள்ளைகள் 32
விரோத புத்திரர் 32
அறிவாளி 33
நரகம் அடைபவன் 33
கருச்சிதைவு 34
சில புத்திரர் அழிவு 34
கருச்சிதைவு 35
புத்திரர்கள் உருவாகும் மாதங்கள் 35

ஆறாம் பாவம்

பகைவரால் துன்பம் 36
நோய் உள்ளவன் 37
உடலில் நோய் உள்ளவன், சித்திரவதைப்படுபவன் 38
ஆயுதங்களால் காயம் அடைபவன் 38

ஏழாம் பாவம்

மன்மதன் போன்றவன் 40
களத்திரம் இல்லாதவன் 41
களத்திரம் இன்மையும் யோக பலனும் 41
பிற பெண்களுடன் உறவு 42
மனைவியின் கற்பு 43
களத்திர இராசி நாள் 43
திருமணம் நடைபெறும் காலம் 44
களத்திரத்துடன் மனவேறுபாடு 45
இரண்டு களத்திரம் 45
களத்திர எண்ணிக்கை 46
உணவில் விருப்பம் 46

இரண்டு களத்திரம் 47
மிருக போகி 47
காமவெள்ளம் உடையவள் 48
நோயாளி மனைவி 49
நோயாளி, துக்கி, இளமையில் மரணம் 49
திருமணக் காலம் 50

எட்டாம் பாவம்

தீர்க்காயுள், அற்பாயுள் 51
மரணத்திற்கான் காரணம் 51
மரணக் காலம் 52
தீர்க்காயுள், சுகஜீவனம் 53
உடல் வெட்டுண்டு மரணம் 53
மரணத்திற்கான காரணம் 54
தீர்க்காயுள் 59
அற்பாயுள் 59
மரணக்காலம் 60
மரணக்காலம் கணக்கிடல் 60

ஒன்பதாம் பாவம்

சுக ஜீவனம் உடையவன் 63
சுக ஜீவனம், தந்தையிடம் அன்பும் அன்பின்மையும் 63
சௌபாக்கியம் உடையவன் 64
சகலரையும் நிந்திப்பவன் 64
நோயாளி தந்தை 65
பாக்கியவான் 65
தந்தையின் மரணக் காலம் 66
தந்தைக்கு உதவாப்பிள்ளை 67
தந்தைக்கு பகைவன் 67
தந்தையின் நோய் 68
வாக்கிய பரிபாலனம் 69

பத்தாம் பாவம்

நல்ல தொழில் 71
நல்ல தொழில், தீய தொழில் 72

புண்ணிய தீர்த்தம் ஆடுபவன்,
அட்டாங்க யோகம் முடிப்பவன் 73

சன்னியாசி 74

தொழில் 75

பதினோராம் பாவம்

அதிக இலாபங்களை அடைபவன் 78

பன்னிரண்டாம் பாவம்

அதிக செலவு உடையவன், பாக்கியவான் 79

செலவு செய்யும் வழி 79

சாதக கணிதாமிர்தம்

(மூலமும் உரையும்)

நூல்

காப்பு

விநாயகன் வணக்கம்

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் செவ்வந்தி பிள்ளையைப் பேணுவாம்

(இ.ள்) செல்வமும் கல்வியும் சிறப்பும் மேன்மேலும் வளரவும், உலகில் எங்கும் அருள் விளங்கி தீயவை அற்றுப் போகவும், நம்மனம் கனியவும் செவ்வந்திப் பிள்ளையாரைப் போற்றி வணங்குவோம்.

முருகன் வணக்கம்

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன்மா மயிலோய் போற்றி
முன்னிய கருணை யாறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி

பதிப்பிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுவடியிலும் ஒப்பீட்டுக்குப் பயன்படுத்தியச் சுவடியிலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இல்லை. எனவே, நூல் முழுமையின் பொருட்டு அச்சு நூலில் காணப்படும் மூன்று கடவுள் வாழ்த்துப் பாடல்கள், நூலின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ளன.

(இ.ள்) பன்னிரு கரங்களையுடையவனே வாழ்க ! பசுமைப் பொன்போல் ஒளிரக்கூடிய தோகை களையுடைய மயில் வாகனத்தவனே வாழ்க ! அருள் பொழியும் ஆறு முகங்களைக் கொண்ட பரம்பொருளே வாழ்க ! வள்ளி, தெய்வானை இருவரையும் நீங்காத கருணைக் கடலே வாழ்க! என்னுடைய இரு கண்களாக விளங்குபவனே வாழ்க ! கண்ணுள் இருக்கும் பாவையாய் நிற்பவனே வாழ்க !

கலைமகள் வணக்கம்

விளங்குதண்டி முதலோராற் சேவிக்கப் படுவோன்
விமலன்முத னாற்சிங்க பதாசனத்தின் மேலோன்
களங்ககலா தித்தைமுதற் சந்திகன் சதிகன்
கருதருண மணியெளிய கடோற்கா னம்மூர்த்தி
துலங்கவிர ணங்கந்தன் அங்கமெனும் கிரகந்
தொடுமுடுவா தியர்சூழச் சுவேதகஞ்சத் திவர்த்தோள்
வளங்கொள்சுவே தாம்புசத்தோட் கலனிருநல் விழியோள்
வருசிவசூ ரியன்காக்க மகிழ்ந்தடிஎங் களையே !

நூல் விவரம்

சொல்நோக்கும் பொருள்நோக் கும் தூயகணிதா மிர்தாமென்ற
சுவையின் நோக்கும்
தன்நோக்கும் நவக்கிரக பலாபலத்தின் அருநோக்கும்
சார்பு நோக்கும்
முன்நோக்கும் பகைநீசம் முழுநோக்கும் கேந்திரத்ரி
கோண நோக்கும்
பின்னோக்கும் துவாதசபா வகநோக்கும் பலனையும்
பேசுங் காலே.

1. இலக்கன பாவம்
மேம்பாடு உடையவன்

இலக்கனம் உதயம் கீர்த்தி
மூர்த்திமான் என்ப தாகும்
இலக்கனத் ததிபன் ஆட்சி
உச்சநட் பேறி நிற்கில்
இலக்கனத் ததிப னானோன்
கேந்திரதிரி கோணம் எய்த
இலக்கனம் தந்னை அந்த
அதிபனை எழில்கோள் நோக்க 1

(இ.ள்) ஜன்மித்த வேளை இலக்கனமாம். அந்த இலக்கனத்தின் பலன் 'கீர்த்தி ஸ்தானம்' என்றும் 'மூர்த்தி ஸ்தானம்' என்றும் பெயர். ஆகவே, இந்தப் பலன்கள் இந்த பாவத்தைக்கொண்டு சொல்லுமிடத்தில் இலக்கனாதிபதி, தனம், இலாபம், கேந்திரம், திரிகோணம் இவைகளில் இருக்கினும், மேற்படி இலக்கனத்தையும் இலக்கனாதிபதி யையும் சுபகிரகம் கூடினும் அல்லது நோக்கினும் நோக்கினும் (நன்மையாகும்)

கேந்திர திரிகோணம் எனவே தனம், இலாபம் எனவும் நோக்கினும் எனவும் கூடினும் எனவும் வருவித்து உரைக்கப்பட்டது. மூர்த்தி சரீரம் என்பதே யாம். வருவன வற்றுள்ளும் மற்றெல்லாவற்றையும் இப்படியே ஊகித்துக் கொள்க.

குறிப்பு: 'கேந்திரம்' என்பது சென்ம இலக்கனம், சென்ம இலக்கனத் திற்கு நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவை. 'திரிகோணம்' என்பது சென்ம இலக்கனம், சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவை.

இதுவுமது

2. கீர்த்திமேம் பாடும் உண்டாம்
கிளர்வலி உடைய னாவன்
வார்த்தையில் வழக்கி யாகும்
மதித்திட வல்ல னாகும்
தோத்திரப் பிரிய னாவன்
துலங்கிய வடிவ னாவன்
பார்த்திபர் போற்ற வாழ்வன்
பண்பினன் ஆவ னன்றே

(இ.ள்) இந்த ஜாதகன் சிறப்புற்றோங்கிய மேம்பாடு உடைமை, மகாவல்லமை, வழக்காடுகை, யாவராலும் மதிக்கப்படுகை, ஸ்தோத்திரப்பிரியம், கட்டழகுடைமை, இராஜபூசிதம், பேரறிவுடைமை இவை முதலிய கீர்த்தி, மூர்த்திகளை உடையவனவாம்.

வறுமை உடையவன்

3. சென்மதா னத்தோன் தீய
பகை நீசம் சேர வன்றேல்
வன்மத்தா னத்தை ெட்டை
ஈராறை மருவ அன்னோன்
தன்னைத்தான் தனத்தைத் தான
தண்ணிய கோள்கள் நோக்கப்
பின்னைத்தான் கூட நற்கோள்
பெட்புற நோக்கா தாக.

(இ.ள்) இலக்கனாதிபதி பகை நீச இராசிகளில் இருக்கினும், சஷ்டாஷ்ட வியங்களில் இருந்து இவனையாதல், தனத்தானத்தையாதல், சுபக்கிரகங்களது கூடுகையும் நோக்குகையும் இன்றிப் பாபக்கிரகங்கள் கூடினும் நோக்கினும் தீய பலன்களாகும்.

குறிப்பு: சஷ்டி-ஆறு; அஷ்டம்-எட்டு; வியம் -பன்னிரண்டு இப்பாடலில் சஷ்டாஷ்டவியம் என்பது சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களைக் குறிக்கிறது.

விளக்கம்: இலக்கனாதிபதி பகை, நீச இராசிகளில் இருந்தாலும், சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் ஒன்றில் இலக்கனாதிபதி இருந்தாலும், இலக்கனாதிபதி பாவக் கிரகங்களோடு கூடி இருந்தாலும், இலக்கனாதிபதியைப் பார்த்து இருப்பினும் தனத்தானத்தில் பாவக்கிரகங்கள் இருந்தாலும் அல்லது அந்தத் தானத்தைப் பார்த்தாலும் தீய பலன்களாகும்

இதுவுமது

4. **வசைசொல்ல இருந்து வாழ்வன்**
வலியின்றி மெலிவன் தேகம்
இசையெனும் பொருளுண் டாக
இறையவன் தானென் றாலும்
பகையில்லை யென்னச் சொல்வர்
பண்பொடும் எவர்க்கீந் தாலும்
அசைவிலா தவனா னாலும்
சபையினில் அஞ்சு வானாம்

(இ.ள்) ***யாவராலும் அவமதிக்கப்படுமை, மெலிந்த சரீரம் உடைமை, தாரித்திரியப்படுகை, சபைக் கோழையாதல் இவைகளை உடையவனாம்.***

குறிப்பு: தாரித்திரியப்படுகை - வறுமையை அடைதல்.

இலக்கன பாவம் முற்றிற்று

2. இரண்டாம் பாவம்

நல்ல பார்வை

5. இரண்டுநேத் திரமே வாக்கு
தனமியற் குடும்ப மாகும்
இரண்டினோன் மதியம் வெய்யோன்
நட்பாட்சி உச்சம் ஏற
இரண்டினோன் மதியம் வெய்யோன்
கேந்திரதிரி கோணம் எய்த
இரண்டினில் நற்கோள் நிற்கில்
இலங்குநேத் திரமாம் என்னே.

(இ.ள்) துதிய ஸ்தானத்திற்கு 'நேத்திர ஸ்தானம்' என்றும், 'வாக்கு ஸ்தானம்' என்றும், 'தன ஸ்தானம்' என்றும், 'குடும்ப ஸ்தானம்' என்றும் பெயர். அதுவே துதியாதிபதியும் சந்திரனும் சூரியனும் உச்ச, ஸ்வக்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் இருந்து அல்லது கேந்திர, திரிகோணங்களில் இருந்து, துதியஸ்தானத்தில் சுபக்கிரகங்கள் இருக்க நல்ல நேத்திரனாம்.

குறிப்பு: துதியஸ்தானம் - இரண்டாமிடம்; ஸ்வக்ஷேத்திரம் - சொந்தவீடு அல்லது ஆட்சி வீடு; மித்துரு க்ஷேத்திரம் - நட்பு வீடு ; நேத்திரம்-கண்கள்

விளக்கம் சென்ம இலக்கனத்திர்கு இரண்டாம் வீட்டிற்கு அதிபதியும், சந்திரனும் சூரியனும் உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் அல்லது கேந்திர திரிகோண வீடுகளில் இருக்க அல்லது இரண்டாமிடத்தில் சுபக்கிரகங்கள் இருக்க, சாதகன் நல்ல கண்களைப் பெற்றவனாக இருப்பான்.

கண் பார்வை குறைபாடு

6. இரண்டினோன் நீசம் வெய்ய
பகையெய்தப் பாவ ரோடு
மருண்டவர் எட்டீ ராறில்
மருவுறில் மருளும் கண்கள்

அருண்டவீ ராறு சிங்க
மாய்மதி வெய்யோன் நிற்கிற்
சுருண்டிடும் விழிகள் தானும்
குருடனாய்ச் சுழலு வானே.

(இ.ள்) துதியாதிபதி சத்துரு, நீச இராசிகளில் பாவக்கிரகங்களுடனே கூடி சஷ்டாடஷ்டம வியங்களில் இருக்க, மருண்ட நேத்திரனாம். வியஸ்தானம் சிம்மமாய் அதில் சூரிய, சந்திரன் இருக்கில் அந்தகனாம்.

குறிப்பு: சத்துரு - பகைவன்; அந்தகன் - பார்வையற்றவன்

விளக்கம்: சென்ம இலக்கினத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதி நீசம், பகை பெற்று இருந்தாலும் பாவக்கிரகங்களோடு கூடி இருந்தாலும், ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருந்தாலும் இச்சாதகன், மருண்ட கண்களை உடைவன். சென்ம இலக்கனத்திற்குப் பன்னிரண்டா மிடத்தில் சூரிய, சந்திரர்கள் இருக்க இச்சாதகன், பார்வையற்றவனாய் விளங்குவான்.

நற்சொல் பேசுபவன்

2. வாக்கினுக் கதிபன் சுங்கன்
நட்பாட்சி உச்ச மாக
தூக்கிய அத்தா னத்தோன்
கேந்திரத்திரி கோணம் தோன்ற
வாக்கிய அத்தா னத்தை
அதிபனை யடைய நற்கோள்
நோக்கினாற் சொல்வ தெல்லாம்
யாவரும் நயப்பர் மாதோ!

(இ.ள்) துதியாதிபதியும் சுக்கிரனும் உச்ச ஸ்வக்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்க, அந்த ஸ்தானாதிபதிகள் கேந்திர, திரிகோணங்களில் இருக்க, துதிய ஸ்தானத்தையும் துதியாதிபதியையும் சுப கிரகங்கள் கூடில் நல்ல வாக்கியன்.

குறிப்பு: துதியாதிபதி - இரண்டாமிடத்திற்கு அதிபதி
வாக்கியன் - மொழியை உடையவன்

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதியும் சுக்கிரனும் ஆட்சி, உச்ச, நட்பு வீடுகளில் இருந்தாலும், இரண்டாமிடத்திற்கு அதிபதி கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், இரண்டாமிடத்தில் சுபக்கிரகம் நின்றாலும், இரண்டாமிடத்திற்கு அதிபதி நல்ல கிரகங்களோடு கூடி இருந்தாலும், இச்சாதகன் நல்ல மொழிகயையே பேசக் கூடியவனாக இருப்பான்.

கடும்வாக்கு உடையவன்

8. தாக்கிய பகைநீ சத்தில்
சட்டாட்ட வியத்தா னத்தில்
வாக்கினுக் குடையோன் நிற்கில்
வாக்கினால் தோடம் உண்டாம்
நீக்கிய பாவக் கோட்கள்
வாக்குத்தா னத்தே நிற்கிற்
போக்குவார்த் தைகளே சொல்வன்
குறளையும் புகல்வ னன்றே.

(இ.ள்) சத்துரு, நீச இராசிகளில், சஷ்டாஷ்டம வியஸ்தானத்தில் துதியாதிபதி நிற்கில் தோஷ வாக்கியன். துதியஸ்தானத்தில் பாபக் கிரகங்கள் நிற்கில் துர்வாக்கும் கோள் சொல்லுகையும் உடையவன்.

குறிப்பு: வாக்குஸ்தானம் - இரண்டாமிடம்

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதி, பகை, நீச இராசிகளில் இருந்தாலும், ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் நின்றாலும், இரண்டாம் இடத்தில் பாவக் கோள்கள் இருந்தாலும், அச்சாதகன் தீமையான கடுமையான வார்த்தைகளைப் பேசக்கூடிய வனாகவும் கோள் சொல்பவனாகவும் இருப்பான்

குறிப்பு: துதியாதிபதி - இரண்டாமிடத்திற்கு அதிபதி
வாக்கியன் - மொழியை உடையவன்

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதியும் சுக்கிரனும் ஆட்சி, உச்ச, நட்பு வீடுகளில் இருந்தாலும், இரண்டாமிடத்திற்கு அதிபதி கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், இரண்டாமிடத்தில் சுபக்கிரகம் நின்றாலும், இரண்டாமிடத்திற்கு அதிபதி நல்ல கிரகங்களோடு கூடி இருந்தாலும், இச்சாதகன் நல்ல மொழிகயையே பேசக் கூடியவனாக இருப்பான்.

கடும்வாக்கு உடையவன்

8. தாக்கிய பகைநீ சத்தில்
சட்டாட்ட வியத்தா னத்தில்
வாக்கினுக் குடையோன் நிற்கில்
வாக்கினால் தோடம் உண்டாம்
நீக்கிய பாவக் கோட்கள்
வாக்குத்தா னத்தே நிற்கிற்
போக்குவார்த் தைகளே சொல்வன்
குறளையும் புகல்வ னன்றே.

(இ.ள்) சத்துரு, நீச இராசிகளில், சஷ்டாஷ்டம வியஸ்தானத்தில் துதியாதிபதி நிற்கில் தோஷ வாக்கியன். துதியஸ்தானத்தில் பாபக் கிரகங்கள் நிற்கில் துர்வாக்கும் கோள் சொல்லுகையும் உடையவன்.

குறிப்பு: வாக்குஸ்தானம் - இரண்டாமிடம்

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதி, பகை, நீச இராசிகளில் இருந்தாலும், ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் நின்றாலும், இரண்டாம் இடத்தில் பாவக் கோள்கள் இருந்தாலும், அச்சாதகன் தீமையான கடுமையான வார்த்தைகளைப் பேசக்கூடிய வனாகவும் கோள் சொல்பவனாகவும் இருப்பான்

நல்வழியில் சேரும் செல்வம் உடையவன்

9. தனத்தினுக் கதிபன் சீவன்
நட்பாட்சி உச்சம் தங்க
தனத்தினுக் கதிபன் சீவன்
கேந்திரதிரி கோணத் தாக
தனத்தினுக் கதிபன் தன்னைச்
சீவனை நற்கோள் நோக்க
தனத்தினுக் கிவனே யாகத்
தரணியில் வாழ்வன் தானே.

(இ.ள்) துதியாதிபதி, குரு இவர்கள் உச்ச ஸ்வக்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும், துதியாதிபதியையும் குருவையும் சுபக்கிரகங்கள் கூடினும் நோக்கினும் தனவானாம்.

விளக்கம்: இரண்டாமிடத்திற்கதிபதி, குரு ஆகிய இருவரும் ஆட்சி, உச்ச, நட்பு வீடுகளில் இருந்தாலும், இரண்டாமிடத்தின் அதிபதி யையும் குருவையும் சுபக்கிரகங்கள் பார்த்தாலும் இவற்றோடு கூடி இருந்தாலும், இச்சாதகன் செல்வனாக இருப்பான்.

தீய வழியில் சேரும் செல்வம்

10. நாடிய தனத்தா னத்தான்
பாவியாய் வலிய நண்ணில்
தேடிய பொருட்கள் எல்லாம்
தீதினால் சேரும் என்க
நீடிய அதிபன்தா னந்தனை
தீக்கோள் இருக்கில் நோக்கிற்
கூடிய பொருளை யுண்டு
கொடியவெண் ணரகில் வீழ்வான்

(இ.ள்) துதியாதிபதி பாவியாகப் பலவந்தனாக இருக்கில், இவன் சம்பாதித்த பொருள்களெல்லாம் பாப விஷயத்தில் சேரும். துதியாதிபதியையும் துதிய

ஸ்தானத்தையும் பாபக் கிரகங்கள் கூடினும் நோக்கினும் சிநேகிதாள் தனங்களை அபகரிப்பன்.

விளக்கம்: இரண்டாமிடத்திற்கு அதிபதி பாவியாக பலம் பெற்று இருந்தால், இவனுக்குத் தீய வழியில் பொருள் சேரும். இரண்டாமிடத்திற்கு அதிபதியையும் இரண்டா மிடத்தையும் பாவக் கோள்கள் பார்த்தாலும் அல்லது இரண்டாமிடத்தில் பாவக்கோள் நின்றாலும் இரண்டா மிடத்திற்கு அதிபதியோடு பாவக்கோள்கள் சேர்ந்து இருந்தாலும் இச்சாதகன், நண்பர் களின் செல்வங்களை அபகரிப்பவனாகே இருப்பான்.

செல்வத்தின் வரவு

12. **சிதைவிலாக் கர்மத் தோனும்**
திரவிய தானத் தோனும்
அதிகநட் புடைய ராகி
ஆனதோர் உலகில் தானே
நிதியமும தானே தேடும்
அதிப்னை நிதிதா னத்தை
பொதியும்கா ரக்கோள் தன்னாற்
தனம்வரல் புகலு வீரே!

(இ.ள்) கர்மாதிபதியும் துதியைதிபதியும் மித்துருவாக இருப்பினும், மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும் தனம் சேரும். துதியாதிபதியையும், துதியஸ்தானத்தையும், தனகாரகனையும்கொண்டு தனவரத்துச் சொல்வது.

குறிப்பு: கர்மாதிபதி - பத்தாம் இடத்திற்கு அதிபதி

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்குப் பத்தாம் இடத்திற்கு அதிபதியும் இரண்டாமிடத்திற்கு அதிபதியும் நட்பாக இருந்தாலும், இவர்கள் இருவரும் நட்பு வீடுகளில் இருந்தாலும், இச்சாதகன், தன் முயற்சியால் பணத்தைத் தேடுவான். ஒரு சாதகத்தில் இரண்டாமிடத்தையும், இரண்டாமிடத்திற்கு அதிபதியையும் இரண்டா மிடதிற்குக் காரகனான குருவையும் கொண்டு, அச்சாதகனின் பணவரவைக் குறித்துக் கூறவேண்டும்.

செல்வம் சேருதல்

13. இருந்தனத் தானத் தோனும்
இலாபத்தான் கருமத் தோனும்
பொருந்தநட் பாட்சி உச்சம்
கேந்திரதிரி கோணம் போத
நிறந்தா ராறில் உள்ளோன்
வலியின்றி முறிந்து போகில்
வருந்தனம் வந்த தெல்லாம்
சஞ்சிதம் ஆகும் தானே.

(இ.ள்) துதியாதிபதியும் இலாபாதிபதியும் கர்மாதிபதியும் உச்ச, ஸ்வக்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திர, கேந்திர திரிகோணங்களில் இருந்து வியஸ்தானாதிபதி பலகீனனாகில், இவன் சம்பாதித்த தனம் வளரும்.

குறிப்பு: இலாபாதிபதி - பதினோராமிடத்திற்கு அதிபதி
வியஸ்தானாதிபதி - பன்னிரண்டாமிடத்திற்கு அதிபதி

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் அதிபதியும், பதினோரா மிடத்திற்கு அதிபதியும் பத்தாமிடத்திற்கு அதிபதியும் ஆட்சி, உச்ச, நட்பு வீடுகளில் இருந்து கேந்திர திரிகோண வீடுகளில் இருந்து பன்னிரண்டாம் வீட்டிற்கு அதிபதி பலவீனம் பெற்று இருந்தால், இவன் சம்பாதித்த செல்வம் நிலைக்கும்.

வறியவன்

14. விளங்கிய தனத்தா னத்தோன்
வியத்துற வியத்தா னத்தோன்
களங்கமில் தனத்தைச் சாரத்
தனத்துளோன் கலந்தா றெட்டிற்
துலங்கியே பாவ ரோடும்
பகைநீசம் தன்னிற் றோய
உளங்கொள வறுமை நோயால்
உலைந்துலைந் தொடுங்கு வாரால்.

(இ.ள்) துதியாதிபதி வியத்திலிருக்க, விய ஸ்தானாதிபதி துதியத்தில் இருக்கினும் துதியாதிபதி சஷ்டாஷ்டம வியத்தில் பாப சகிதனாய் சத்துரு நீசமாகினும் தாரித்திரியன்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதி பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, பன்னிரண்டா மிடத்திற்கு அதிபதி இரண்டாமிடத்தில் இருந்தாலும். இரண்டாமிடத்திற்கு அதிபதி சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடங்களில் இருந்தாலும், பாவக் கோள்களோடு சேர்ந்து இருந்தாலும் பகை, நீச இராசிகளில் இருந்தாலும், இச்சாதகன் வறுமையுடையவனாக இருப்பான்.

செல்வன்

15. குடும்பதா னத்தோன் நற்கோள்
ஆகிநட் பாட்சி உச்சம்
தடங்கிகேந் திரத்தி லேனும்
திரிகோணத் தோனு மாக
நடம்புகழ் கோள்கள் தானத்
ததிபனைத் தானே நண்ணத்
திடம்படு குடும்ப வானாம்
செல்வவான் தானு மாவன்.

(இ.ள்) துதியாதிபதி சுபக்கிரமாய் உச்ச ஸ்வ க்ஷேத்திரம் பெற்று கேந்திரத்திலாதல், திரிகோணத்தி லாதல் இருக்க, இந்த ஸ்தானங்களையாதல் ஸ்தானாதிபதிகளையாதல், சுபக்கிரகங்கள் கூடினும் நோக்கினும் மகா குடும்பியும் செல்வனுமாம்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்திற்கு அதிபதி, சுபக்கிரகமாக இருந்து ஆட்சி அல்லது உச்சம் பெற்று இருக்க, கேந்திர ஸ்தானங்களில் அல்லது திரிகோண ஸ்தானங்களில் இருக்க, இரண்டாமிடத்ததிபதியோடு சுபக்கிரகங்கள் ஒன்று கூடி இருந்தாலும், இரண்டாமிடத்

ததிபதியைப் பார்த்தாலும், இரண்டாமிடத்தில் சுபக்கோள்கள் நின்றாலும் இரண்டாமிடத்தைச் சுபக்கோள்கள் பார்த்தாலும் இச்சாதகன் பெரிய குடும்பத்தையும் மிகுந்த செல்வத்தையும் உடையவனாக விளங்குவான்.

குடும்ப அழிவு

16. குடும்பதா னத்தான் பாவக்
 கோளாகப் பகைநீ சத்தால்
ஒடுங்கித்தான் ஆறெட் டீறா
 றாகிய வோரை சாரில்
இடும்பக்கோள் தானத் தன்னை
 அதிபனை எய்தி நோக்கில்
குடும்பத்துக் கழிவுண் டாகும்
 குலவரை கொங்கை மாதே!

(இ.ள்) துதியாதிபதி பாவக்கிரகமாய் சத்துரு, நீச க்ஷேத்திரங்களில் பெலவீனாய் சஷ்டாஷ்டம **வியங்களில் இருந்து பாவக்கிரகங்களுடனேயாதல் பாவ இராசிகளிலே யாதல் இருக்கினும் நோக்கினும் குடும்ப க்ஷயமாய்விடும்.**

குறிப்பு: ஓரை - இராசி
 க்ஷயம் - அழிவு

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் வீட்டிற்கதிபதி பாவகோளாக இருக்க அல்லது பகை, நீச வீடுகளில் இருக்க அல்லது சென்ம இலக்கனத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்க அல்லது பாவக்கிரகங்களுடன் ஒன்றுகூடி இருக்க அல்லது பாவக்கிரகங்களால் பார்க்கப்பட குடும்பம் அழிந்து போகும்.

இரண்டாம் பாவம் முற்றிற்று

3. மூன்றாம் பாவம்

சகோதர நன்மை

17. மூன்றுடன் பிறப்பு வெற்றி
முகிழ்தை ரியங்கா தென்ப
மூன்றினுக் கதிபன் செவ்வாய்
மூன்றிநட் பாட்சி உச்சம்
மூன்றினுக் கதிபன் செவ்வாய்
கேந்திரதிரி கோணம் உற்ற
மூன்றினை அதிபன் தன்னை
முரணொடு நற்கோள் நோக்க.

(இ.ள்) மூன்றாம் ஸ்தானத்திற்கு 'சகோதர ஸ்தானம்' என்றும், 'வீரிய ஸ்தானம்' என்றும், 'தைரிய ஸ்தானம்' என்றும், 'கர்ண ஸ்தானம்' என்றும் பெயர். ஆகவே, திரிதியாதிபதி, அங்காரகன், திரிதிய ஸ்தானத்தில் நின்ற கிரகம் இவர்கள் உச்ச ஸ்வக்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்க, திரிதியாதிபதி, அங்காரகன் இவர்கள் கேந்திர திரிகோணங்களில் இருக்க, திரிதிய ஸ்தானத்தையும் திரிதிய ஸ்தானாதிபதி யையும் சுபக்கிரகங்கள் பலவந்தாளாகத் திருட்டிக்க நன்மை உண்டாகும்.

குறிப்பு: திரிதியாதிபதி மூன்றாமிடத்திற்கு அதிபதி
திரிதிய ஸ்தானம் - மூன்றாமிடம்

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடத்திற்கு அதிபதி, செவ்வாய், மூன்றாமிடத்தில் இருந்த கிரகம், இவர்கள் உச்ச, ஆட்சி நட்பு வீடுகளில் இருக்க அல்லது மூன்றாமிடத்திற்கு அதிபதி, செவ்வாய் இவர்கள் கேந்திர திரிகோணங்களில் இருக்க அல்லது மூன்றாமிடத்தையும் மூன்றாமிடத்திற்கு அதிபதியையும் சுபக்கோள்கள் பலம்பெற்று பார்க்க நன்மையாகும்.

இதுவுமது

18. உடன்பிறப் புதவி உண்மை
உபகாரம் வெற்றி மற்ற
இடம்பொருள் ஏவல் உண்டாம்
எருள்வலி உடையோ னாவன்
அடர்ந்தசே யதிபன் ஆறெட்
டீராறில் பகைநீ சத்தில்
தடிந்ததீக் கோளோ டொன்றிற்
சகோதர நாசம் தானே.

(இ.ள்) சகோதராள் உதவி, உண்மை, உபகாரம், ஐயம், இடம், பொருள், ஏவல், வீரம் இவை முதலிய பலன்கள் உண்டாம். அங்காரகன் நின்ற இராசியாதிபதி சஷ்டாஷ்டம விய ஸ்தானங்களில், சத்துரு, நீச க்ஷேத்திரங்களில் பாபக்கிரக சகிதனாய் இருக்கில் சகோதர நாசம்.

குறிப்பு: தீக்கோள் - பாவக்கோள்

விளக்கம்: செவ்வாய் நின்ற இராசியாதிபதி, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் ஒன்றில் இருக்க அல்லது பகை, நீச இராசிகளில் இருக்க அல்லது பாவக்கிரகங்களோடு ஒன்றுகூடி இருக்கில் சகோதரருக்கு அழிவுண்டாகும்.

செவிடு, ஊமை

19. மூன்றுளோர் இரண்டில் உள்ளோர்
நீசமாய்ப் பகைமூ டத்தில்
ஆன்றவர் எட்டீ ராரில்
அடையினும் அதிபன் தன்னை
ஏன்றதா னங்கள் தன்னை
இயல்புடன் தீக்கோள் நோக்கத்
தோன்றுமுன் செவிடன் ஆவான்
சொற்சொலா ஊமை யாவான்.

(இ.ள்) திரிதியஸ்தானத்தில் நின்ற கிரகங்களும் துதிய ஸ்தானத்தில் நின்ற கிரகங்களும் சத்துரு, நீச க்ஷேத்திரங்களில் மூட அஸ்தமனங்களில் இருக்க, திரியஸ்தானாதிபதி சஷ்டாஷ்டம வியஸ்தானங்களில் இருக்க, திரியாதிபதி யையும், திரிதிய ஸ்தானத்தையும் பாவக்கிரகங்கள் திருஷ்டிக்க, செவிடனும் ஊமையுமாவான்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு இரண்டு, மூன்றாமிடங்களில் உள்ள கிரகங்கள், பகை, நீச இராசிகளில் இருக்க அல்லது பலம் குறைவு பெற்று இருக்க அல்லது மூன்றாமிடத்திற்கு அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்க, அல்லது மூன்றாமிடத்திற்கதிபதியும் மூன்றாம் இடத்தையும் பாவக் கோள்கள் பார்க்க, இச்சாதகன் **செவிடனும் ஊமையுமாவான்.**

இரட்டைச் சகோதரர்கள்

20. **உயர்சகோ தரத்தா னத்தோன்**
உபயத்தில் உபயக் காலா
அயர்விநற் கோளோ டொன்றில்
சகோதரம் இரட்டை யாமால்
அயலாவான் பெண்ணெண் கோளி
னால்வகுப் பாகச் செவ்வாய்
நயமுறு வலியாற் சொல்வர்
சகோதரம் சிந்தை நாடி.

(இ.ள்) திரிதியஸ்தானாதிபதி உபய இராசியில் உபய பாதத்தில் சுபர்களுடன் கூடில், உபய சகோதராளாம். அச்சகோதராளும் ஆணும் பெண்ணுமாம் அங்காரகன் பலவந்தனாய் இருப்பது கொண்டு சொல்வதாம்.

குறிப்பு: உபய இராசிகள் - மிதுனம், கன்னி, தனுசு, மீனம்
சகோதரம் - உடன்பிறப்பு (ஆண் அல்லது பெண்)

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடத்திற்கு அதிபதி, உபய இராசிகளில் ஒன்றில் இரட்டையான பாதங்களில் நின்று, சுபக்கிரகங்களுடன் ஒன்று கூடில் இச்சாதகனுக்கு இரட்டைச் சகோதரம் பிறப்பர். அச்சகோதரத்திலும் ஒன்று ஆணாகவும் ஒன்று பெண்ணாகவும் இருக்கும்.

மேலும் செவ்வாய் பலம் பெற்று இருப்பதைக் கொண்டு, உடன்பிறந்தவர்களைப் பற்றிக் கூற வேண்டும்.

வலிமையுடைய சகோதரர்

21. மூன்றினை உடையோன் ஆறில்
ஆறினை யுடையோன் மூன்றில்
தோன்றிட இந்தத் தான
அதிபர்கள் ஒன்றிற் சூழில்
சான்றவர் உரையும் கொள்ளார்
சகோதர தேவ ராவார்
ஏன்றிடும் மூன்றோ னெட்டின்
மூடமேல் ஈதே போல்வார்.

(இ.ள்) திரிதியஸ்தானாதிபதி சஷ்டும ஸ்தானத்திலும் சஷ்டும ஸ்தானாதிபதி திரிதியஸ்தானத்திலும் இருக்க, திரிதியஸ்தானாதிபதி நின்ற இராசியாதிபதியும், சஷ்டும இராசியாதிபதியும், ஷஷ்டும ஸ்தானாதிபதி நின்ற இராசியாதிபதியும் ஒரு இராசியில் இருக்க, பலவந்தாளான சகோதராளாம். திரிதியஸ்தானாதிபதி அஷ்டம ஸ்தானத்தில் மூடமாய் இருக்கினும் அதுவேயாம்.

குறிப்பு: சஷ்டும ஸ்தானம் - ஆறாமிடம்
சஷ்டும ஸ்தானாதிபதி - ஆறாமிடத்திற்கு அதிபதி

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடத்திற்கு அதிபதி, ஆறாம் இடத்திலும், ஆறாம் இடத்திற்கதிபதி மூன்றாம் இடத்திலும் இருக்க, அல்லது மூன்றாம் இடத்திற்கு அதிபதி நின்ற இராசியாதிபதியும், எட்டாமிடத்தின் ஸ்தானாதிபதியும் ஒரு இராசியில் இருக்க, இச்சாதகனுக் குடைய சகோதரர்கள் பலம் பெற்றவர்களாக விளங்குவர். மூன்றாம் இடத்திற்கு அதிபதி, எட்டா மிடத்தில் பலமின்றி இருந்தாலும் இந்தப் பலனேயாகும்.

மூன்றாம் பாவம் முற்றிற்று

---- ❀ ----

4. நான்காம் பாவம்

வாகன யோகம்

22. நான்கில்வா கனமே பூமி
 தாய்தமர் சுங்க னாம்நீர்
நான்கினுக் கதிபன் சுங்கன்
 கேந்திர திரி கோணம் நண்ண
நான்கினுக் கதிபன் சுங்கன்
 தங்களின் நட்போ ராக
நான்கினுக் கதிபன் சுங்கன்
 இவர்களை நட்போர் பார்க்க.

(இ.ள்) சதுர்த்த ஸ்தானத்திற்கு 'வாகனஸ்தானம்' என்றும், 'பூஸ்தானம்' என்றும், 'மாத்ரு ஸ்தானம்' என்றும், 'பந்து ஸ்தானம்' என்றும், 'சுகஸ்தானம்' என்றும், 'ஜலஸ்தானம்' என்றும் பெயராம். ஆகவே சதுர்த்த ஸ்தானாதிபதி, சுக்கிரன் இவர்கள் கேந்திர திரிகோண ஸ்தானங்களிலே இருக்க மித்துருக்களாய் இருக்க, மித்துருக் கிரகங்கள் பார்க்க. (நன்று)

குறிப்பு: சதுர்த்த ஸ்தானம் - நான்காமிடம்
 சதுர்த்த ஸ்தானாதிபதி - நான்காமிடத்திற்கு அதிபதி

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதி, சுக்கிரன் இவர்கள், கேந்திர திரிகோணங்களில் நட்பு இராசிகளில் இருக்க, இவர்களை நட்புக்கோள்கள் பார்க்க நன்மையாகும்.

இதுவுமது

23. நான்கினுக் கதிபன் சுங்கன்
 நாலுகா லோரை சார
நான்கினுக் கதிபன் சுங்கன்
 நாலுகாற் கோளே டெய்த

நான்கினில் வலிய தாகி
நாற்காற் கோள்கள் நண்ண
நான்குகால் ஊர்தி எய்தும்
நரபதி யாவ னாலும்.

(இ-ள்) சதுர்த்த ஸ்தானாதிபதி, சுக்கிரன் இவர்கள் நாற்கால் இராசிகளில் இருக்க, நாற்கால் கிரகங்களுடனே கூட, சதுர்த்த ஸ்தானத்தில் நாற்கால் கிரகங்கள் இருக்க நாற்கால் வாகனமும் நரவாகனமும் உண்டாம்.

குறிப்பு: நாற்கால் இராசிகள் - மேடம், இடபம், சிங்கம், தனுசு
நாற்கால் கிரகங்கள் - சூரியன், செவ்வாய், சனி
நரர் - மனிதர்

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதி, சுக்கிரன் இவர்கள், நாற்கால் இராசிகளான மேடம், இடபம், சிங்கம், தனுசு, ஆகிய இராசிகளில் ஒன்றில் இருக்க, அல்லது நாற்கால் கிரகங்களான, சூரியன், செவ்வாய், சனி ஆகிய கோள்களில் ஒன்றோடு கூடி இருக்க, இச்சாதகனுக்கு நாற்கால் விலங்குகளான யானை, குதிரை முதலான வாகனங்களும் உயர்ந்த வாகனமாகக் கருதப்படும் மனிதர் சுமந்து செல்லும் பல்லக்கு வாகனமும் உண்டாகும். இக்காலத்திற்கு ஏற்றவாறு இதனைக் கார் எனக் கொல்ளலாம.

வாகனம் இல்லாதவன்

25. வாகனத் தானம் அந்த
கோள்புகர் தன்னை மாறா
மாகுல கோள்கள் சேரில்
வல்லதாம் எட்டீ ராறில்
பாகுறில் அதிபன் சுங்கன்
பகைநீசம் எய்தி நிற்கில்
தோகையாய்! இவனுக் கூர்தி
ஒருநாளும் உற்றி டாதால்.

(இ.ள்) சதுர்த்த ஸ்தானத்தையும் சதுர்த்த ஸ்தானாதிபதியையும் சுக்கிரனையும் பாபக்கிரகங்கள் கூடி இருக்கினும் சதுர்த்த ஸ்தானாதிபதியையும் சுக்கிரனும் சஷ்டாஷ்டம வியஸ்தானங்களில் இருக்கினும் சத்துரு நீச க்ஷேத்திரங்களில் இருக்கினும் வாகனம் இல்லையாம்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதியும் சுக்கிரனும் பாவக்கிரகங்களோடு கூடி இருந்தாலும் நான்காமிடத்தில் பாவக்கிரகம் நின்றாலும், நான்காமிடத்திற்கு அதிபதியும் சுக்கிரனும் ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் இருந்தாலும் அல்லது இவையிரண்டும் பகை மற்றும் நீச வீடுகளில் இருந்தாலும் இந்தச் சாதகனுக்கு வாகனம் இருக்காது.

பூமியால் நன்மை

26. பூமிதா னக்கோள் செவ்வாய்
    பொருந்தநட் பாட்சி உச்சம்
பூமிதா னக்கோள் செவ்வாய்
    கேந்திரதிரி கோணம் போந்த
பூமிதா னக்கோள் செவ்வாய்
    இலக்கனன் புணர்நட் பாகப்
பூமிதா னத்தைச் சேயைப்
    புகழ்கோள்கள் பொருந்த நோக்க.

(இ.ள்) சதுர்த்த ஸ்தானாதிபதி, அங்காரகன் இவர்கள் உச்ச, ஸ்வ க்ஷேத்திர மித்துரு க்ஷேத்திங்களில் இருக்கினும், கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும், இலக்கனாதிபதியுடனே மித்துருவாகக் கூடினும், சுபக்கிரகங்கள் கூடினும், நோக்கினும் (நன்றாகும்).

குறிப்பு: அங்காரகன் -செவ்வாய்

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதி, செவ்வாய் இருவரும் உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் இருந்தாலும், கேந்திர திரிகோண வீடுகளில்

இருந்தாலும், இலக்கனாதிபதியுடன் நட்புடன் விளங்கினாலும், நான்காம் இடத்தையும், நான்கா மிடத்திற்கு அதிபதியையும், செவ்வாயையும் சுபக்கிரகங்கள் பார்த்தாலும், நான்கா மிடத்தில் சுபக்கிரகம் இருந்தாலும், நான்காமிடத்து அதிபதி யுடனும், செவ்வாயுடனும் சுபக்கிரகங்கள் கூடி இருந்தாலும் நன்மைகள் (அடுத்த பாடலில் கூறப் பட்டுள்ளன).

பூமியால் நன்மை, அழிவு

27. பூமிதான் அவர்க்கே எய்தும்
பொசிப்பும்பூ மியினால் ஆகும்
காமிக வசதி யுண்டாம்
காசினி அவர்க்கே மிக்கும்
ஆமிது அன்றி ஆறெட்
டீறாறில் பகைநீ சத்தில்
நாமுரை செய்மீ மிக்கோள்
நண்ணிடில் பூமி நாசம்.

(இ.ள்) இவனுக்கு பூஸ்த்தியுண்டாம். இஷ்ட அன்ன போசனமும் விவசாய விருத்தியும் தேசாதிபத்தியமும் உண்டாம். சதுர்த்த ஸ்தானாதிபதியும், அங்காரகனும் சஷ்டாஷ்ட வியஸ்தானங்களில் சத்துரு நீச க்ஷேத்திரங்களில் இருக்கவே பூமி நாசமாம்.

குறிப்பு: பூஸ்த்தி - பூமி இலாபம்
இஷ்ட அன்ன போஜனம் - விருப்பமான உணவு
தேசாதிபத்தியம் - நாட்டை ஆட்சி செய்தல்

விளக்கம்: இவனுக்கு பூமி இலாபம் கிட்டும்; விருப்பமான உணவினைப் பெறுவான்; பயிர்த்தொழிலில் இலாபம் கிடைக்கும். நாட்டை ஆளும் வாய்ப்பினைப் பெறுவான். சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதியும் செவ்வாயும் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருந்தாலும், பகை, நீச வீடுகளில் இருந்தாலும் பூமி நாசமாகும்.

தாயையும் உறவினரையும் போற்றுபவன்

28. தாயினுக் கதிபன் சோமன்
நட்பாட்சி உச்சம் சாரத்
தாயினுக் கதிபன் சோமன்
கேந்திரத்ரி கோணத் தாகத்
தாயினுக் கதிபன் சோமன்
சௌமியக் கோளோ டெய்த
தாயினைத் தமரைப் பேணும்
அவர்களும் தழைத்து வாழ்வர்.

(இ.ள்) சதுர்த்த ஸ்தானாதிபதியும், சந்திரனும் உச்ச, ஸ்வ, க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும் கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும், சுபக்கிரகங்களுடனே கூடினும், இவன் மாதுருவையும், பந்துக்களையும் ஆதரிப்பான். அவர்களும் விருத்தி யடைவார்கள்.

குறிப்பு: சௌமியக் கோள் - நல்ல கோள்கள்,
வளர்பிறைச்சந்திரன்,
சுக்கிரன், குரு, புதன்

மாதுரு - தாய்; பந்து - உறவினர்; விருத்தி - வளர்ச்சி

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதியும், சந்திரனும் உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் இருந்தாலும், கேந்திர, திரிகோண வீடுகளில் இருந்தாலும், நான்காமிடத்தில் நல்ல கிரகங்கள் இருந்தாலும், நான்காமிடத்திற்கு அதிபதியும், சந்திரனும், சுபக்கிரகங்களோடு கூடியிருந்தாலும் இவன் தாயையும் உறவினர்களையும் ஆதரிப்பான். அவர்களும் வளர்ச்சி யடைவார்கள்.

தாய், உறவினர்களைப் போற்றாதவன்

29. தாயினுக் கதிபன் சோமன்
    சட்டாட்ட வியத்தைச் சாரத்
தாயினுக் கதிபன் சோமன்
    தங்கிடப் பகைநீ சத்தில்
தாயிடத் தான சோமன்
    தனைப்பாவர் சார நோக்கத்
தாயினைத் தமரைப் பேணான்
    அவர்களும் துயரில் தாழ்வார்.

(இ.ள்) சதுர்த்த ஸ்தானாதிபதி, சந்திரன் இவர்கள் சஷ்டாஷ்டம வியஸ்தானங்களில் இருக்கினும், சத்துரு, நீச க்ஷேத்திரங்களில் இருக்கினும், சுபக்கிரகங்களுடனே கூடினும் அவர்களாலே பார்க்கப்படினும் இவன் மாதுருவையும் பந்துக்களையும் ஆதரியான். அவர்களும் விருத்தியடையார்கள்.

குறிப்பு: இப்பாடலில் வரும் பாவர் சார நோக்க என்பதற்கு சுபக்கிரகங்களுடனே கூடினும் அவர்களாலே பார்க்கப் படினும் என்று தவறாக உரை அமைந்துள்ளது.

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு நான்காம் இடத்திற்கு அதிபதி, சந்திரன் இவர்கள் ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் இருந்தாலும், பகை, நீச இராசிகளில் இருந்தாலும், நான்காமிடத்திற்கதிபதி, சந்திரன் ஆகியோரோடு பாவக் கிரகங்கள் சேர்ந்து இருந்தாலும் அல்லது இவர்களைப் பார்த்தாலும், இச்சாதகன், தாயையும் உறவினர்களையும் ஆதரிக்க மாட்டான். அவர்களும் இவனால் நன்மையடையார்.

சுகம் பெற்று வாழ்பவன்

30. சுகத்தினுக்கதிபன் சுங்கன்
நட்பாட்சி உச்சம் தோயிற்
சுகத்தினுக்கதிபன் சுங்கன்
இலக்கனா திபனும் கூடிச்
சுகத்தினைத் தருநட் பாகிற்
கேந்திரத்திரி கோணம் தோன்றி
சுகத்தினுக் கொருவ னாகச்
சுகமெலாந் துய்ப்பன் மாதே !

(இ.ள்) சதுர்த்தஸ்தானாதிபதி, சுக்கிரன் இவர்கள் உச்ச, ஸ்வ க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும் இலக்கனாதிபதியுடனே கூடினும் கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும் இவன் சகல சுகமும் பெற்று வாழ்வான்.

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதி, சுக்கிரன் இவர்கள் உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் இருந்தாலும் இலக்கனாதிபதியுடன் கூடி இருந்தாலும் கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருந்தாலும், இச்சாதகன் சகல சுகங்களையும் பெற்று வாழ்வான்.

எந்நேரமும் துக்கம் அடைபவன்

31. சுகத்தினுக் கதிபன் சுங்கன்
தனைப்பாவர் தோய நோக்கச்
சுகத்தினுக் கதிபன் சுங்கன்
சட்டாட்ட வியத்தைச் சூழ
சுகத்தினுக் கதிபன் சுங்கன்
பகைநீசம் தோன்றி நிற்க
சுகத்தினுள் பொருத்தான் என்றும்
துன்பமே அவர்க்கே எய்தும்.

(இ.ள்) சதுர்த்த ஸ்தானாதிபதி, சுக்கிரன் இவர்களைப் பாபக்கிரகங்கள் கூடினும் நோக்கினும்,

சதுர்த்த ஸ்தானாதிபதி, சுக்கிரனும் சட்டாட்டம வியஸ்தாநங்களில் இருக்கினும், சத்துரு, நீச க்ஷேத்திரங் களில் இருக்கினும் இவன் சதா துக்கியாய் இருப்பான்.

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு நான்காம் இடதகிற்கு அதிபதி, சுக்கிரன் இவர்களோடு பாவக்கிரகங்கள் கூடி இருந்தாலும் இவர்களைப் பார்த்தாலும், நான்கா மிடத்திற்கு *அதிபதி சுக்கிரன் இவர்கள் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருந்தாலும், இவர்கள் பகை, நீச இராசிகளில் இருந்தாலும் இச்சாதகன் எப்பொழுதும் துக்கத்தையுடையவனாக இருப்பான்.*

எந்நேரமும் கனவு காண்பவன்

32. கண்டத்தா னத்தில் தீக்கோள்
கலந்திடில் அதிபன் நீசம்
தண்டித்தான் பகையி லெய்தச்
சட்டாட்ட வியத்தில் சார
வண்டத்தார் எனினும் நீங்கா
வசதியுற் றுயர்ந்து தானே
அண்டத்தாற் கனவு காண்பன்
அரும்பகல் இரவு தானே.

(இ.ள்) சதுர்த்தஸ்தானத்தில் பாபக்கிரகங்கள் இருக்கினும் சதுர்த்த ஸ்தானாதிபதி சத்துரு நீச க்ஷேத்திரங்களில் இருக்கினும் சஷ்டாஷ்டம விய ஸ்தானங்களில் இருக்கினும் இவன் இரவும் பகலுமாக எப்போதும் கனவு காண்பன்.

குறிப்பு: கண்டத்தானம் - நான்காமிடம்

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்தில் பாவக் கோள்கள் இருந்தாலும், நான்காமிடத்திற்கு, அதிபதி பகை, நீச வீடுகளில் இருந்தாலும், ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருந்தாலும் இச்சாதகன் இரவு பகல் பாராமல் எப்பொழுதும் கனவு காண்பவனாக இருப்பான்.

குளம் வெட்டுதல்

33. நீரினுக் கதிபன் சுங்கன்
நிறைமதி இராகு வென்போர்
சாரநட் பாட்சி யுச்சம்
சலத்தில்ரா சியிற்கண் டத்தில்
சீரிய திரிகோ ணத்திற்
கேதுநற் கோளோ டெய்தில்
வாரிநீ ருண்டா மீது
மாறிநீர் இல்லை மாதே!

(இ-ள்) சதுர்த்த ஸ்தானாதிபதி, சுக்கிரன், சந்திரன், இராகு இவர்கள் உச்ச, ஸ்வக்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் ஜல இராசியில், கேந்திர திரிகோணங்களில் இருக்கினும், கேது, சுபக்கிரகங்களுடே கூடினும் ஜல பிராப்தியுண்டாம். இவ்வடைவு மாறி இருக்கில் ஜலபிராப்தி இல்லையாம்.

குறிப்பு: ஜல இராசி, கடகம், கும்பம், மகரம், மீனம், விருட்சிகம்.

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடத்திற்கு அதிபதி, சுக்கிரன், சந்திரன், இராகு ஆகியோர் உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் வீடுகளில் இருந்தாலும், இவர்கள் ஜல இராசிகளில் இருந்தாலும், கேந்திர திரிகோண இராசிகளில் இருந்தாலும், கேது, சுக்கிரகங்களுடன் கூடி இருந்தாலும் குளம் வெட்ட நீர் கிடைக்கும். இந்நிலை மாறி இருந்தால், நீர் கிடைக்காது வறண்டிருக்கும்.

தாய், குழந்தை மரணம்

34. இலக்கனம் தனக்கு மூன்றில்
பதினொன்றில் இருந்தே எய்த
சொலத்தகு உதயன் சோமன்
தனக்குமுன் பின்னும் எட்டும்

விலக்கிய தீக்கோள் மேவி
　　இலக்கனன் மதியோ டேழோன்
இலக்கனுற் றிடுவா ராகில்
　　அழிந்திடும் மகவும் தாயும்.

(இ.ள்) இலக்கனத்திற்கு திரிதியஸ்தானத்திலும் ஏகாதச ஸ்தானத்திலும் இலக்கனாதிபதி, சந்திரன் இவர்களுக்கு முன்பின்களிலும் அட்டம ஸ்தானத்திலும் பாவக்கிரகங்கள் கூடியிருந்து இலக்கனாதிபதி, சந்திரன் இவர்களுடன் சப்தம ஸ்தானாதிபதி ஜீரண, மூட, அஸ்தமனமாகக் கூடி இருக்கினும் மாதா அனுமரணமாம்.

விளக்கம்: ஜென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடத்திலும், பதினோராமிடத்திலும், இலக்கனாதிபதி, சந்திரன் இவர்களுக்கு முன், பின் இராசிகளிலும் எட்டாம் இடத்திலும் பாவக்கிரகங்கள் சேர்ந்திருந்து அல்லது இலக்கனாதிபதி சந்திரன் இவர்களுடன் பலவீன மடைந்த ஏழாமிடத்திற்கு அதிபதி கூடி இருந்தாலும், இச்சாதகனின் தாய் தினமும் செத்துச் செத்துப் பிழைப்பாள்.

நான்காம் பாவம் முற்றிற்று

5. ஐந்தாம் பாவம்

தூய்மையான உள்ளம்

35. ஐந்தினில் புதல்வர் புத்தி
முத்திவித் தார மாகும்
ஐந்தினுக்கதிபன் ஆட்சி
உச்சநட் பாக நிற்க
ஐந்தினுக் கதிபன் தானும்
கேந்திரதிரி கோணம் மேவ
ஐந்தினுள் நற்கோள் நிற்கில்
அவன்உளந் தூய்மை யாமால்

(இ.ள்) பஞ்சம ஸ்தானத்திற்கு 'புத்திர ஸ்தானம்' என்றும், 'புத்தி ஸ்தானம்' என்றும், 'ஞான ஸ்தானம்' என்றும், 'விஸ்தார ஸ்தானம்' என்றும் பெயராம். ஆகவே இந்தப் பலன்களை இந்தப் பாவத்தால் சொல்லுமிடத்து பஞ்சம ஸ்தானாதிபதி, உச்ச, ஸ்வ க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும், கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும், பஞ்சம ஸ்தானத்தில் சுபக்கிரகங்கள் இருக்கினும் இவன் புத்திமான்.

குறிப்பு: பஞ்சம ஸ்தானம் - இலக்கனத்திற்கு ஐந்தாமிடம்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடத்திற்கு அதிபதி, உச்ச, சொந்த, நட்பு வீடுகளில் இருந்தாலும், கேந்திர, திரிகோணங்களில் இருந்தாலும், ஐந்தாமிடத்தில் சுபக்கோள்கள் இருந்தாலும், இந்தச் சாதகன் மிகுந்த அறிவாளியாக விளங்குவான்.

அதிக புத்திரர்கள்

36. புத்திரற் கதிபன் செம்பொன்
பொருந்தநட் பாட்சி உச்சம்
புத்திரற் கதிபன் செம்பொன்
கேந்திரதிரி கோணம் எய்தப்

புத்திரா திபனைப் பொன்னை
ஐந்தினைப் புகழ்க்கோள் நோக்கப்
புத்திரர் மிகவுண் டாகும்
புரிகுழல் பைங்கொம் பன்னாய் !

(இ.ள்) பஞ்சம ஸ்தானாதிபதி, குரு இவர்கள் உச்ச, ஸ்வ க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும், கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும், பஞ்சம ஸ்தானாதிபதி, குரு இவர்களையும், பஞ்சம ஸ்தானத்தையும், சுபக்கிரகங்கள் திருஷ்டி செய்யினும் வெகு புத்திரர்களைப் பெறுவான்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடத்திற்கு அதிபதி குரு ஆகியோர் உச்ச ஆட்சி, நட்பு இராசிகளில் இருந்தாலும், கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், ஐந்தாமிடத்திற்கு அதிபதி, குரு ஆகியவர்களையும், ஐந்தாமிடத்தையும் சுபக்கிரகங்கள் பார்த்தாலும், இச்சாதகன் அதிகமான பிள்ளைகளைப் பெறுவான்..

அதிக புத்திரர்கள் இல்லாதவன்

37. புத்திரற் கதிபன் செம்பொன்
சட்டாட்ட வியத்தைப் பூணப்
புத்திரற் கதிபன் செம்பொன்
பகைநீசம் பொருந்தி வாழப்
புத்திரா திபன்செம் பொன்னை
ஐந்தினைத் தீக்கோள் நோக்க
புத்திரர் அவர்க்கே என்றும்
பூத்திடா தொருகா லத்தும்

(இ.ள்) பஞ்சம ஸ்தானாதிபதி, குரு இவர்கள் சட்டாட்டம, விய ஸ்தானங்களில் இருக்கினும், சத்துரு, நீச க்ஷேத்திரங்களில் இருக்கினும், பஞ்சம ஸ்தானாதிபதி யையும் குருவையும் பஞ்சம ஸ்தானத்தையும் பாவக் கிரகங்கள் திருஷ்டி செய்யினும் புத்திரர் இல்லையாம்.

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடத்திற்கு அதிபதி, குரு இவர்கள் ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் இருந்தாலும், பகை, நீச இராசிகளில் நின்றாலும் ஐந்தாமிடத்திற்கு அதிபதியையும், குருவையும், ஐந்தாம் இடத்தையும் பாவக்கோள்கள் பார்த்தாலும் இச்சாதக னுக்குக் குழந்தைப் பேறு கிடைக்காது.

தத்து புத்திரர்

38. புத்திரத் தானம் கும்பம்
பூங்கொடி கலையா ழாகப்
புத்திரர் குளிகன் நிற்கில்
சட்டாட்ட வியக்கோள் நோக்கத்
தெத்திடும் பிள்ளை யுண்டாஞ்
செப்பினர் ஏழு கோளும்
உத்தம திரிகோ ணத்தில்
உலாவினும் புதல்வர் உண்டாம்.

(இ.ள்) பஞ்சம ஸ்தானம் கும்பம், கன்னியாக அதில் புத்திர ஸ்தானாதிபதி, குளிகன் இவர்கள் நிற்கிலும், பஞ்சம ஸ்தானத்தை சஷ்டாஷ்ட வியஸ்தானாதிபதிகள் திருஷ்டிக்கினும் தத்து புத்திரர் உண்டாம்.

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடம் கும்பம் அல்லது கன்னியாக இருக்க, அவ்விடங்களில் புத்திர ஸ்தானாதிபதி, குளிகன் ஆகியோர் நின்றாலும், ஐந்தாம் இடத்தை ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடத்ததிபதிகள் பார்த்தாலும் இந்தச் சாதகனுக்குத் தத்து புத்திரர்கள் இருப்பார்கள்.

புத்திரப்பேறு

39. சந்திரன் நின்ற ஓரை
தகுதியாம் சென்ம ஓரை
மைந்தர்தா னத்துக் குள்ளோன்
வந்திடும் ஓரை நாதன்

சொந்தமாம் ஓரை செம்பொன்
தோன்றிய ஓரை அன்னோன்
அந்தமாங் காலின் ஓரை
பாலருண் டாகும் ஓரை.

(இ.ள்) சந்திரனிருந்த இராசி, இலக்கனம், பஞ்சம ஸ்தானாதிபதி இவன் இருந்த இராசி, பஞ்சம ஸ்தானம், குரு, இவன் இருந்த இராசி, இராசியாதிபதி இவற்றைக் கொண்டு புத்திரப்பேறு சொல்வதாம்.

குறிப்பு: உரை எளிமையானதாக இருப்பதால், விளக்கம் தரப்படவில்லை.

இதுவுமது

40. பொன்னவன் தன்னை ஐந்தைப்
பொருந்துகோள் அளவை யாலும்
மன்னுமைந் தினில்கோள் செம்பொன்
மருவுங்கால் அளவை யாலும்
மன்னமே புதல்வ ருண்டாம்
வளமையை அறிய லாகும்
சொன்னகோ ளிரண்டின் மீதும்
வலியகோள் கொண்டு சொல்லே.

(இ.ள்) குரு, பஞ்சம ஸ்தானாதிபதி, பஞ்சம ஸ்தானத்தில் நின்ற கிரகங்கள் இவற்றின் அளவையாலும், பஞ்சம ஸ்தானத்தில் நின்ற கிரகங்கள், குரு இவர்கள் நின்ற கால்களின் அளவையாலும் புத்திரசங்கை சொல்லப்படும். உபய கிரகங்களாயின் கிரக வலிது கொண்டு சொல்வதாம்.

குறிப்பு: உரை எளிமையாக உள்ளதால் விளக்கம் சொல்லப்படவில்லை.

ஆண், பெண் பிள்ளைகள்

41. மகவுடைத் தானம் அக்கோள்
ஆணெனின் மகவும் ஆணாம்
தகவுடை பெண்ணே யாகில்
சாற்றரும் பெண்ணாம் என்றே
புகலுமிவ் வடைவு மாறிற்
பூத்திடும் மகவு மாறும்
மிகமரத் தானம் நன்றாய்
அதில்வேற்றன் மேவிற் பெண்ணே!

(இ.ள்) பஞ்சம ஸ்தானமும், பஞ்சம் ஸ்தானாதிபதியும், பஞ்சம ஸ்தானத்தில் நின்ற கிரகமும் ஆணாகில் ஆண் சந்ததியும், பெண்ணாகில் பெண் சந்ததியும் இவ்வடைவு மாறில் ஆணும் பெண்ணுமாகத் சந்ததிகள். இரவியும் பஞ்சம ஸ்தானம் சுபமாய் அதில் குரு வலிது பெறில் பெண் சந்ததியுண்டாம்.

குறிப்பு: இரவி - சூரியன்.

விரோத புத்திரர்

42. புத்திரா திபனும் பொன்னும்
இலக்கனே சனுக்குப் போத
மித்திர ராக அன்னோர்
கருமதா னத்தை மேவ
பத்தியாம் பிள்ளை அன்னோர்
பகையாகப் பாவர் சேர
சத்துரு வாகும் என்றே
தாவுதற் கருது மாதே.

(இ.ள்) பஞ்சம ஸ்தானாதிபதியும் குருவும் இலக்கனேசனுக்கு மித்துரு கிரகங்களாயிருந்து பஞ்சம ஸ்தானாதிபதியும் குருவும் கரும ஸ்தானத்தில் இருக்கில் இவனுக்குச் சத்புத்திரன் சத்புத்திரன் உண்டாம். பஞ்சம

ஸ்தானாதிபதி குருவும் இலக்கனேசனுக்குச் சத்துரு கிரகங்களாயிருந்து தசம ஸ்தானத்தில் இருக்கில், இவனுக்கு விரோத புத்திரனுண்டாம்.

அறிவாளி

43. புந்தியும் மாதுர் கோளும்
இலக்கனா திபனும் பொன்னும்
ஐந்துடைத் தாகி நின்று
கேந்திரதிரி கோணம் மன்னிற்
சிந்தையால் ஒருவர்க் கெட்டாச்
சிந்தனைக் கொருவ னாகி
முந்திய கால மூன்றின்
முறைதெரி அமைச்ச னாவான்.

(இ.ள்) புதன், சதுர்த்த ஸ்தானாதிபதி, இலக்கனாதிபதி, குரு இவர்களுக்குப் பஞ்சம ஸ்தானாதிபத்தியம் கிடைத்துக் கேந்திர திரிகோணங் களிலே நிற்கில், மகா யூகியாவன்.

குறிப்பு: மகாயூகி - மிகுந்த அறிவாளி.

நரகம் அடைபவன்

44. பத்தினுக் குடைய கோளும்
இலக்கனத் தவனும் பண்பால்
ஒத்தவைந் துடைய கோளும்
மூறிலா வலிய ராகி
வித்தநற் கோட்க ளோடும்
கேந்திரதிரி கோணம் மேவில்
முத்தியிற் புகுவன் சொன்ன
முறைமாறில் பாவி யாவான்.

(இ.ள்) தச ஸ்தானாதிபதி, இலக்கனாதிபதி, பஞ்சம ஸ்தானாதிபதி இவர்கள் பலவந்தர்களாய் சுபக்கிரகங்களுடனே கூடி, கேந்திர திரிகோண

ஸ்தானங்களில் இருக்கில் முக்தி சேர்குவன். இம்முறை மாறில் நரகம் எய்துவன்.

குறிப்பு: தச ஸ்தானாதிபதி - பத்தாமிடத்திற்கதிபதி.

கருச்சிதைவு

45. அங்கா ரகன்மகத் தான
மோடதி பன்தனைக்குருவைத்
தங்கா தலினுட னோக்குறில்
அவர்தங் களையும் சாரில்
இங்கா சையின் உதயம்
சேய்உரு வாகும் முன்போல்
செங்கார் குருசேய் சேர
சிதையும் கருவும் தேய்ந்தே.

(இ.ள்) பஞ்சம ஸ்தானத்தையும் பஞ்சம ஸ்தானாதிபதி, குரு இவர்களையும் அங்காரகன் கூடினும், நோக்கினும் இவனுடைய மனைவி கர்ப்ப மடைந்து, குழந்தை கருவாக இருக்கும்பொழுதே வயிற்றிலேயே அழிந்துவிடும்.

சில புத்திரர் அழிவு

46. மகத்தான மதுக்கு யையோன்
குருவென் போன்தமின் மணந்து
மிகத்தான வலியின் மீறினும்
வெங்கோ ளோடு கூடிற்
சுகத்தாற் பெறுமக விற்சில
தேயுமது என்றே சொல்வார்
முகத்தான் முழுவெண் திங்களை
முனியும் செழுங்கனி மொழியே.

(இ.ள்) பஞ்சம ஸ்தானாதிபதி, குரு இவர்கள் தமக்குள்ளே மித்திரர்களாகப் கேந்திர திரிகோண ஸ்தானங்களிலே உச்ச ஸ்வ க்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங் களைப் பெற்று வலிபெறினும் பாபக்கிரகங்களுடன் கூடி நிற்கில் சிறிது புத்திரர் நாசமாம்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடத்திற்கு அதிபதி, குரு இவர்கள் தங்களுக்குள்ளே நட்புறவாக கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் வலிமை பெற்று இருந்தாலும், பாவக் கோள்களோடு சேர்ந்து இருந்தாலும், இச்சாதகனுக்கு பிறந்த பிள்ளைகளில் ஓரிருவர் இறந்து போவார்கள்.

கருச்சிதவு

47. சுகத்தான மேனதி பன்குரு துடர்கின்ற வந்நாளில்
பதித்தார் பனமறை யோனதில் பயினாண் மகப்பயக்கும்
மதிற்றான் சனிசெவ் வாயமர் நாளில் கருவழியும்
விதத்தான் மகமெலி வும்வரும் விரையார் கருங்குழலே !

(இ.ள்) பஞ்சம ஸ்தானாதிபதி, குரு இவர்கள் நின்ற நட்சத்திரக் கால்களிலே குரு வருகின்ற நாளில் புத்திரோத்பத்தியாம். சனி, அங்காரகன் இவர்கள் வருகின்ற நாளில் குரு அழியும்.

புத்திரர்கள் உருவாகும் மாதங்கள்

48. உரவுபொன் னின்ற வோரை
அன்னவன் உச்ச நீசத்
தரமிகு வோரை ஐந்துக்
குடையகோள் சாரும் வோரை
மரவுமைந் துடைய ஓரை
மாதங்கள் பவளச் செவ்வாய்
மருவுபூங் கோதை மாதே !
மைந்தர்கள் உதிக்கும் மாதம்.

(இ.ள்) குரு நின்ற இராசி, குரு நின்ற இராசியாதிபதி உச்ச, நீசமாக நின்ற இராசி, பஞ்சம ஸ்தானாதிபதி நின்ற இராசி, பஞ்சம ஸ்தானம் ஆகிய இவற்றின் மாதங்கள் புத்திரோத்பத்தி மாதங்கள்.

குறிப்பு: புத்திரோத்பத்தி - புத்திரர்கள் உருவாதல்.

ஐந்தாம் பாவம் முற்றிற்று

6. ஆறாம் பாவம்

பகைவரால் துன்பம்

49. ஆறுசத் துருவே ரோகம்
சத்திரம் சோர மாகும்
ஆறினுக் கதிபன் ஆட்சி
உச்சநட் பதனை ஆள
ஆறினுக் கதிப னானோன்
கேந்திரதிரி கோணத் தாக்க
ஆறைஆ றுடையான் கோளை
அடையநற் கோள்கள் நோக்க.

(இ-ள்) சஷ்டும பாவத்திற்கு 'ரோக ஸ்தானம்' என்றும், 'சத்திர ஸ்தானம்' என்றும், 'சோர ஸ்தானம்' என்றும் பெயராம். ஆகவே இந்தப் பாவத்தால் இப்பலன்களைச் சொல்லுமிடத்து சஷ்டும ஸ்தானாதிபதி உச்ச, ஸ்வ க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங் களில் இருக்கினும், கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும், சஷ்டும ஸ்தானத்தையும் சஷ்டும ஸ்தானாதிபதியையும் சுபக்கிரகங்கள் பார்க்கினும் (தீமையாகும்).

குறிப்பு: சஷ்டும ஸ்தானம் - ஆறாமிடம்
சஷ்டும ஸ்தானாதிபதி - ஆறாமிடத்திற்கு அதிபதி

விளக்கம் : சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடத்திற்கு அதிபதி உச்ச. ஆட்சி, நட்பு வீடுகளில் இருந்தாலும், கேந்திர திரிகோண வீடுகளில் இருந்தாலும், ஆறாமிடத்தையும் ஆறாமிடத்திற்கு அதிபதியையும் சுபக்கிரகங்கள் பார்த்தாலும், (தீமையாகும்)

இதுவுமது

50. ஆறினுக் கதிபன் தானும்
இலக்கனத்துக் கதிபன் தானும்
மாறுடைத் தவர்க ளாக
நாலிற்கோள் வதிந்த தாகத்

தேறிலக் கனகோட் காலில்
கோட்சிறப் புடைய தாக
வேறுசத் துருவான் நீங்காச்
சிறையினான் மெலிந்து வீழ்வான்.

(இ-ள்) சஷ்டும ஸ்தானாதிபதி, இலக்கனாதிபதி இவர்கள் சஷ்டும ஸ்தானத்தில் இருக்கினும், சதுர்த்த ஸ்தானாதிபதி இருக்கினும், இலக்கனாதிபதிக்குச் சஷ்டும ஸ்தானத்தில் சுபக்கிரகங்கள் இருக்கினும் இவன் சத்துருவால் வாதைப்படுவன்.

விளக்கம்: ஆறாமிடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி இவர்கள் ஆறாமிடத்தில் இருந்தாலும், நான்காமிடத்தில் இருந்தாலும், இலக்கனத்திற்கு ஆறாமிடத்தில் சுபக்கிரகங்கள் இருந்தாலும், இச்சாதகன் பகைவர்களால் வருந்துவான்

நோய் உள்ளவன்

51\. பிணிநாதன் ஆட்சி உச்சம்
நட்பினில் பெட்புறத் தேங்கி
அணியர கேந்தி ரத்தில்
எனுந் திரி கோணத் தேனும்
தணியிலக் கனநா லிற்கோள்
சந்திரன் அவர்க்குத் தாழில்
குணியநோய் நலிய வாழ்வன்
குலைந்துடல் உலைந்து லைந்தே.

(இ-ள்) சஷ்டும ஸ்தானாதிபதி உச்ச, ஸ்வ க்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும், கேந்திரத் திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும், சதுர்த்த ஸ்தானாதிபதி சந்திரனுக்குப் பலயீனமாய் இருக்கினும், மகத்தாகிய ரோகங்களால் பீடிக்கப்படுவன்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஆறாம் இடத்திற்கு அதிபதி, உச்ச, ஆட்சி, நட்பு வீடுகளில் இருந்தாலும், ஆறாமிடத்திற்கு அதிபதி சந்திரனைக் காட்டிலும் பலயீனமாக இருந்தாலும் இச்சாதகன் நோயினால் துன்புறுவான்.

உடலில் காயம் உடையவன், சித்திரவதைப்படுபவன்

52. சத்திரத்தா னக்கோள் செவ்வாய்
சந்திரன் வெய்யோன் தானும்
ஒத்தொரு காலில் கூடில்
உறுப்பினில் அறுப்புண் பானால்
கத்திய வெள்ளி யோடும்
கன்னியில் அன்னோர் கூடில்
சித்திர வதையுண் பானாற்
தேன்மொழிக் கோதை மாதே!

(இ.ள்) சஷ்டும ஸ்தானாதிபதி, அங்காரகன், சந்திரன், சூரியன் இவர்கள் நட்சத்திரக்கால் ஒன்றிலே இருக்கில் அவயவங்களில் ஒன்று அறுபடுவன். அந்தக் கிரகங்கள் சுக்கிரனுடனே கூடி கன்னி ராசியில் இருக்க, சித்திரவதைப் படுவான்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஆறாம் இடத்திற்கதிபதி, செவ்வாய், சந்திரன், சூரியன் இவர்களின் நட்சத்திரக் கால்களில் ஒன்றில் இருந்தால், இச்சாதகன் தன் உடல் உறுப்புகளில் ஒன்று அறுபடுவான். அந்தக் கிரகங்கள், சுக்கிரனுடனே கூடி கன்னி இராசியில் இருக்க, இச்சாதகன் சித்திரவதைப் படுவான்.

ஆயுதங்களால் காயம் அடைபவன்

53. செவ்வாயின் ஆட்சி சென்ம
இலக்கன மாகச் செவ்வாய்
வெவ்வாயா வரும்வெய் யோனும்
வெண்மதி அதனில் கூடி
வவ்வாய வாளால் மாய்வர்
வருஞ்சனி யுடன்சேய் வெய்யோன்
தவ்வாத மதியைச் சாரில்
சந்திர விரணம் உண்டாம்.

(இ.ள்) அங்காரகனுடைய ஸ்வக்ஷேத்திரமான மேஷ விருச்சிக இராசிகள் இலக்கனமாய் அதில் அங்காரகன், சூரியன், சந்திரன் இவர்கள் கூடியிருக்கில், வாளினால் வெட்டுண்ணுவன். அங்காரகன், சூரியன் இவர்கள் சனியுடன் கூடில் சத்திர விரணம் உண்டாம்.

குறிப்பு: சத்திர (சஸ்த்திரம்) - ஆயுதம்

விரணம் - காயம்

ஆறாம் பாவம் முற்றிற்று

7. ஏழாம் பாவம்

மன்மதன் போன்றவன்

54. ஏழிடம் மனைவி காமம்
எனஇரு கூற தாகும்
ஏழினுக் கதிபன் சுங்கன்
நட்பாட்சி உச்சம் ஏற
ஏழினுக் கதிபன் சுங்கன்
கேந்திரதிரி கோணம் எய்த
ஏழினை அதிபன் தன்னைச்
சுங்கனை எழில்கோள் நோக்க.

(இ.ள்) சப்தமஸ்தானம், 'களஸ்திரஸ்தானம்' என்றும் 'காமஸ்தானம்' என்றும் பெயராம். ஆகவே இப்பலன்களை இந்தப் பாவத்தாற் சொல்லுமிடத்து சப்தமஸ்தானாதிபதி சுக்கிரன் இவர்கள் உச்ச, ஸ்வ க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் இருக்கினும், கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருக்கினும் சப்தம ஸ்தானத்தையும் ஸப்தம ஸ்தானாதிபதி, சுக்கிரன் இவர்களையும் சுபக்கிரகங்கள் பார்க்கினும் (நன்மையாகும்),

இதுவுமது

55. மனையவள் அவர்க்குண் டாகும்
மன்மதன் அவனே என்ன
மனையவ ளிடத்தில் இன்பத்
தமுதுண்டு அவள்தன் னோடும்
நனைமலர் புனுகு சாந்தம்
கத்தூரி நறும்பொன் னாடை
புனைகலன் அமளி யுண்டாம்
புரந்தரன் என்ன வாழ்வான்.

(இ.ள்) இந்த ஜாதகன் நல்ல களத்திரம் கிடைத்து மன்மதனைப் போல் கஸ்தூரி முதலிய சுகந்த பரிமளங்கள் அணிந்து லீலா வினோதங்களிலே களித்திருப்பான்.

களத்திரம் இல்லாதவன்

56. தாரத்தா னத்தோன் சுங்கன்
பகைநீசம் சார்ந்து நிற்பத்
தாரத்தா னத்தோன் சுங்கன்
சட்டாட்ட வியத்தைச் சார
தாரத்தா னத்தைச் சுங்கன்
தனையதி பனைத்தீக் கோள்கள்
சேரத்தான் வெய்ய வன்னோர்
செருக்கினால் வலுத்து நோக்க.

(இ.ள்) சப்தம ஸ்தானாதிபதி, சுக்கிரன் இவர்கள் சத்துரு, நீச க்ஷேத்திரத்தில் இருக்கினும், சஷ்டாஷ்டம வியஸ்தானங்களில் இருக்கினும், பாபக்கிரகங்களுடனே கூடினும் அவர்களால் பார்க்கப்படினும் (தீமையாகும்).

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஏழாம் இடத்திற்கு அதிபதி, சுக்கிரன் இவர்கள் பகை, நீச வீடுகளில் இருந்தாலும், ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருந்தாலும், பாவக் கோள்களுடனும் கூடி இருந்தாலும், பாவக் கோள்களால் பார்க்கப்பட்டாலும் (தீமையாகும்).

களத்திரம் இன்மையும் யோகப்பலனும்

57. தாரமும் அவர்க்கு வாராள்
தரணியில் உதயம் செய்த
மாரவே ளொடுஏ ழோனும்
வாஞ்சையேன் மகளிர் வாய்க்கும்
வாரமே முதலா யுள்ள
வரும்பெரு மமளி தூசும்
சீரிய பலன்கள் ஈனம்
சேர்கிலோ சிதையு மன்றே.

(இ.ள்) இந்த ஜாதகனுக்குக் களத்திர பிராப்தி இல்லை. சப்த ஸ்தானத்தில் மித்துரு கிரகம் இருந்து சப்தமாதியும் மித்துரு கிரகங்களுடன் கூடில் களத்திரப் பிராப்தி உண்டு. அன்றியும் சந்தோஷகரமான அமளி, வஸ்திராபரணம் முதலிய போகங்கள் உண்டாம். சத்ருத்துவம் சேரில் பலன்கள் சிதையுமாம் என்றவாறு.:

பிற பெண்களுடன் உறவு

58. போகதா னத்தோன் சுங்கன்
வலியினிற் பொலியச் செவ்வாய்
வேகத்தோ டவர்கள் கூடில்
விரும்புவன் விதவை இன்பம்
நாகத்தோ டவர்கள் கூடி
நச்சுவான் பிறரில் காரி
யாகித்தா னவனும் இராசி
ஆகினும் அருந்தும் போகம்.

(இ.ள்) சப்தமாதிபதியும் சுக்கிரனும் வலிதுபெற இவர்களை அங்காரகன் கூடில், விதவையைச் சேர்வான். இராகு, கேதுக்கள் கூடில், பரஸ்திரீயைச் சேர்வான். சனி கூடினும் அவர்கள் நின்ற இராசி மகர, கும்பங்க ளாயினும் போக ஸ்திரீயைச் சேர்வன்.

குறிப்பு: ஸ்திரீ - பெண்.

இதுவுமது

59. சந்திரன் வலியின் றாகி
அன்னவன் சாரில் கன்னி
அந்தணர் தனக்கு மேலாம்
அரசரில் வாழ்வன் வெய்யோன்
புந்தியேல் வேசை மாதர்
பூத்திடும் மகளிர் கேது
செந்தவிழ் குழலாய்! இன்னோர்
குணத்தள வறிந்து கூறே.

(இ.ள்) சந்திரன் பலயீனனாய் கன்னியில் நிற்கில், இராஜ ஸ்திரீயைச் சேர்வான். சூரியன், புதன் இவர்கள் பலயீனர்களாய்ச் கன்னியில் நிற்கில், வேசையைச் சேர்வன். இவர்களது குணாநுபவங்களை அந்தநதக் கிரகங்களைக் கொண்டு சொல்க.

மனைவியின் கற்பு

60. சொல்லிய வலிய ராகில்
அதிபனும் சுங்கன் தானும்
மல்லரி மனைவி கற்புக்
கருந்ததி தானும் தாழ்வள்
புல்லிலக் கனத்துக் காறில்
கோளவர் பொருந்து மாயின்
மெல்லியாள் பலர்தம் மோடு
மேவுவாள் வேட்கை கூர.

(இ.ள்) சப்தமாதிபதியும் சுக்கிரனும் வலிது பெறில், இவன் மனையாள் கற்புடையவளாம். இவர்கள் இலக்கனத்திற்கு ஆறாமிடத்தில் நிற்கில், இவன் மனையாள் பரஸ்திரீயாம்.

குறிப்பு: பரஸ்திரீ - பலரோடு உறவு கொள்பவள்.

களத்திர இராசி நாள்

61. களத்திரத் ததிபன் நின்ற
இராசிநா தன்சீ ருச்சம்
களத்திரத் தான வோரை
காரகன் நின்ற நாளும்
களத்திர இராசி நாளாய்க்
கணித்தனர் செவ்வாய்க் கேழும்
களத்திர இராசி நாளாய்க்
கருதுவர் கணித நூலோர்.

(இ-ள்) சப்தமாதிபதி நின்ற இராசி நாதன் உச்ச ராசியில் இருக்கில், அவ்விராசி நாளும் சப்தம ஸ்தானாதிபதி நின்ற இராசி நாளும், களத்திர இராசி நாளாம். அங்காரகனுக்கு ஏழாமிடமாகிய இராசி நாளை களத்திர இராசி நாளாய்க் கூறுவாரும் உளர்.

திருமணம் நடைபெறும் காலம்

62. காரகன் அதிபன் ஏழில்
கலந்திடும் கோள்க ளோடு
வாரமாய் நோக்குங் கோளும்
வகுத்தநல் திசைகள் ஊணில்
தாரமுண் டாகும் அன்னோர்
சாதியும் திருவும் ஓர்ந்து
சீரிய வலிய கோளின்
திசையூணில் சேர்தல் கூறே.

(இ-ள்) சுக்கிரன், சப்தம ஸ்தானாதிபதி, சப்தம ஸ்தானத்தில் நின்ற கிரகம், அதனை நோக்கின கிரகம் இவர்களின் திசை, பொசிப்பில் களத்திரம் உண்டாகும். களத்திரன் சாதி, செல்வம் இவை முதலியன அக்கிரகங் களின் பலாபலன் அறிந்து கூறுவதாம்.

இதுவுமது

63. அதிபன்கா ரகக்கோள் தானும்
எனும்மூன்றில் வலியை ஆய்ந்து
மதுகைய இராசி திக்கே
மணஞ்செயும் மகளிர் திக்காம்
முதியகா ரகன்தா னக்கோள்
அதிபனை முரணி னோடும்
புதியபொன் சேரில் நோக்கில்
பொலிந்திடும் மணம்செய் வேள்வி.

(இ.ள்) சப்தம ஸ்தானாதிபதி, சுக்கிரன், சப்தம ஸ்தானம் இவற்றின் வலி அறிந்து இவற்றிற் கிடைத்த திசைகளால் களத்திரம் ஜன்மித்த திக்கு சொல்வதாம். சப்தம ஸ்தானாதிபதி, சப்தம ஸ்தானத்தில் நின்ற கிரகம், சுக்கிரன் இவர்களைக் குரு கூடினும் நோக்கினும் இவர்களின் திசையே விவாக திசையாம்.

குறிப்பு: ஜன்மித்தல் - பிறத்தல், திக்கு - திசை,
விவாகம் - திருமணம்

களத்திரத்துடன் மனவேறுபாடு

64. ஆறினை உடைய அக்கோள்
அதிபன் ரகந்தா னத்தை
ஆறொடும் சேரில் நோக்கில்
வழக்கினால் வலிய நோயால்
வேறென வகைக்கும் அல்லால்
மெல்லியல் பலரைக் கூடித்
தேறுதல் செய்யும் அன்னோன்
தீக்கோளேல் சிறையுண் டாக்கும்.

(இ.ள்) சப்தம ஸ்தானத்தையாதல், ஸப்தம ஸ்தானாதிபதியாதல், சுக்கிரனையாதல் சஷ்டும ஸ்தானாதிபதி கூடினும் நோக்கினும் வழக்கு, நோய் இவற்றால் களத்திரத்தை வேறுபடுத்தும். அல்லது பரஸ்திரீயாவாள். அந்த சஷ்டும ஸ்தானாதிபதி பாபியாகில் சிறை இருப்பாள்.

இரண்டு களத்திரம்

65. இரண்டைந்தே ழெட்டில் தீக்கோள்
இருந்திட அதனை நோக்க
தெருண்டகா ரகத்தா னக்கோள்
மறைந்தாட்சி உச்சம் சேரில்

இரண்டரு மனைவி ரண்டாம்
கேந்திரத் தவலம் எய்தில்
புரண்டபின் ஒரி ரண்டாம்
புரிகுழல் மகளிர் தானே.

(இ.ள்) பாபக் கிரகங்கள் இரண்டு, ஐந்து, ஏழு, எட்டு இவ்விடங்களில் இருக்கினும் சுக்கிரன், சப்தம ஸ்தானாதிபதி இவர்கள் பதனமடைந்து உச்ச ஸ்வக்ஷேத்திரங்களில் இருக்கில், துவய களத்திரமாம். கேந்திரங்களில் இருக்கினும் அதுவேயாம்.

குறிப்பு: பதனம் - மறைதல்

களத்திர எண்ணிக்கை

66. வெள்ளியோ டதிப னோடும்
விரவுங்கோள் அளவை தன்னாற்
கள்ளவிழ் கோதை மாதர்
அளவையும் கணிக்க லாகும்
தெள்ளுலக் கனத்தின் கோளும்
சிறந்தஏ ழிடத்தின் கோளும்
தள்ளுற நட்ப தாகில்
தையலும் தானும் நட்பாம்.

(இ.ள்) சுக்கிரன், சப்தம ஸ்தானாதிபதி இவர்களுடன் கூடின கிரகங்கள் எத்தனையோ அத்தனை களத்திரமாம். இலக்கனாதிபதியும், சப்தமாதிபதியும் மித்துருவாகில் களத்திரமும் மித்துருவாம். சத்துருவாகில் சத்துருவாம்.

உணவில் விருப்பம்

67. ஏழினுக் கதிபன் ஆட்சி
உச்சநற் கோளோ டெய்தில்
தாழ்வில்கேந் திரத்தி லேனும்
திரிகோணத் தேனும் சாரில்

ஆழியார் அமிர்தம் என்னச்
சிற்றுண்டி தயிர்நெய் யும்பால்
வீழ்கனி யோடும் உண்பன்
காரிகை விருப்பி னோடும்.

(இ.ள்) சப்தமாதிபதி உச்ச ஸ்வ க்ஷேத்திரங்களில் இருக்கிற் சுபக்கிரகங்களுடனே கூடி கேந்திரத்திரி கோணங்களில் இருக்கில், சிற்றுண்டி, தயிர், நெய், பால், பழம் இவற்றை விருப்பமாய் உண்பான்.

இரண்டு களத்திரம்

68. வெவ்விய புகரை ஏழாம்
தானத்தைக் கோளைத் தீய
வெவ்விய கோள்கள் மேவில்
விளங்கிய மனைவி ரெண்டாம்
தன்வலி நற்கோள் தீக்கோள்
சமன்வலி யாக மேவில்
எவ்வமில் லாது மாதர்
இருவரும் இருந்து வாழ்வார்.

(இ.ள்) சுக்கிரனைச் சப்தமத்தை, சப்தமாதிபதி யைப் பாபக்கிரகங்கள் கூடில், துவய களத்திரமாம். சுபக்கிரகங்களும் பாவக்கிரகங்களும் சமனாக வலிது பெறின், துவய களத்திரமும் தீர்க்க களத்திரமாக வாழ்வார்கள்.

குறிப்பு: துவயம் - இரண்டு

மிருகபோகி

69. நண்ணிய மதனத் தானம்
நாலுகால் ஓரை யாக
வண்ணிய அதிபன் தானும்
அப்பதி உடையோ னாகக்

கண்ணிய அதிபன் தானம்
தனையெய்த நான்கு கால்கோல்
உண்ணுமேன் மிருக போகம்
உயர்தவ விரதி யேனும்.

(இ.ள்) சப்தமம் நாற்கால் இராசியாய் சப்தமாதிபதி நாற்கால் இராசியில் இருக்க, சனி கூட, சப்தமத்தில் நாற்கால் கிரகமும் இருக்கின் இவன் முனிந்திரனாகிலும் மிருக போகியாம்.

குறிப்பு: நாற்கால் இராசிகள் - மேஷம், ரிஷபம், சிம்மம், தனுசு
நாற்கால் கிரகங்கள் - சூரியன், செவ்வாய், சனி.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஏழாமிடம் நாற்கால் இராசியாக இருக்க, ஏழாமிடத்திற்கு அதிபதி நாற்கால் இராசியில் ஒன்றாக இருக்க, இவற்றுடன் சனி கூடி நிற்க, ஏழாமிடத்தில் நாற்கால் கிரகமும் இருக்க, இச்சாதகன் உயர்தவம் செய்யும் முனிவனாக இருந்தாலும் மிருக போகம் உடையவனாக இருப்பான்.

காமவெள்ளம் உடையவள்

70. மருவிய மதனத் தானம்
வருஞ்சல இராசி யாக
பொருவரு வதிபன் தானும்
புனல்பொழி கோள தாக
தருமதத் தானம் தன்னை
அதிபனைச் சலக்கோள் சாரத்
திருமகள் குய்யம் தன்னில்
தெளித்திடும் காம வெள்ளம்.

(இ.ள்) சப்தமம் ஜலராசியாகச் சப்தமாதிபதி ஜலக்கிரகமாய்ச் சப்தமம், சப்தமாதி இவற்றைச் ஜலகிரகங்கள் கூடுமாகில், இவன் களத்திரம் காமவெள்ளம் முடையவள்.

குறிப்பு: மதனத்தானம் - ஏழாமிடம்
சல இராசிகள் - கடகம், மகரம், மீனம், விருட்சிகம்
சலக் கோள்கள் - சுக்கிரன், சந்திரன், இராகு

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஏழாமிடம் கடகம், கும்பம், மகரம், மீனம், விருட்சிகம் ஆகியவற்றுள் ஒன்றாக இருக்க அல்லது ஏழாமிடத்திற்கு அதிபதி சுக்கிரன், சந்திரன், இராகு ஆகிய கோள்களுள் ஒன்றாக இருக்க அல்லது ஏழாமிடத்திற்கு அதிபதி சலக்கோள்களான சுக்கிரன், சந்திரன், இராகுவுடன் கூட அல்லது ஏழாமிடத்தில் சலக்கோள்கள் இருக்க, இச்சாதகனின் மனைவி காமவெள்ளம் மிக்கவளாக விளங்குவாள்.

நோயாளி மனைவி

71. மனையவள் தானத் தோனும்
வலியிலக் கனத்தோன் தானும்
நினையுமீ ரைந்துள் ளோனும்
நிகழ்பதி னொன்று ளோனும்
இனியவைந் துடைய கோளும்
மிகலுநா லுடைய கோளென்
றனைவரும் வலியி னொத்தால்
அனுமர ணத்தா ளாமே.

(இ.ள்) சப்தமாதிபதி, இலக்கனாதிபதி, கர்மாதிபதி, லாபாதிபதி, பஞ்சமாதிபதி, சுகாதிபதி இவர்கள் பெலாபெலங்களில் சரியொத்திருந்தால், இவன் களத்திரம் அநுமரணமாம்.

விளக்கம்: சென்ம இலக்கனத்திற்கு ஏழாமிடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி, பத்தாம் இடத்திற்கு அதிபதி பதினோராம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாமிடத்திற்கு அதிபதி, நான்காமிடத்திற்கு அதிபதி ஆகிய இந்த அறுவருடைய வலிமையும் ஒத்திருக்குமே யானால், இச்சாதகனின் மனைவி, நோயாளியாக விளங்குவாள்.

நோயாளி, துக்கி, இளமையில் மரணம் அடைபவள்

72. காரியும் கதிரோன் தானும்
களத்திரா திபர்க ளாகிச்
சீரிய கோள்கள் நோக்கில்
சேயிழை செவ்வி யாவள்

பூரிய கோள்கள் நோக்கில்
புண்களும் துயரும் உண்டாம்
பாரியும் மாய்வ ளென்னப்
பகர்ந்திரு நூல்க ளெல்லாம்.

(இ.ள்) சனி, சூரியன் சப்தமாதிகளாய் இவர்களைச் சுபக்கிரகங்கள் நோக்குமானால் இவன் களத்திரம் பாக்கியவதியாயிருப்பாள். பாபக்கிரகங்கள் நோக்குமானால் இவன் களத்திரம் பிணியாளியும் துக்கியுமாயிருப்பள். அன்றியும் பாலியத்திலே மரிப்பள்.

திருமணக் காலம்

73. ஏழினை உடையோன் அன்னோன்
இருந்திடும் ஓரை நாதன்
வாழுமைந் திரண்டிற் குள்ளோன்
வளர்புகர் இலக்க ணத்தோன்
சூழுமிக் கோள்கள் தன்னில்
வலியகோள் திசையில் கோதாய்
தாழ்விலக் கனக்கோள் சோமன்
வெள்ளியூண் மணம்தப் பாதே !

(இ.ள்) சப்தமாதி, சப்தமாதிபதி இருந்த இராசியாதிபதி, ஐந்து, இரண்டு இவற்றுக் குடையவர்கள். சுக்கிரன், இலக்கனாதிபதி இவர்களில் வலிதுபெற்ற கோட்களின் திசை, இலக்கனாதிபதி, சந்திரன், சுக்கிரன் இவர்களின் பொசிப்பில் விவாகம் நடக்கும்.

குறிப்பு: பொசிப்பு - புத்தி (காலம்)

ஏழாம் பாவம் முற்றிற்று

---- ❀ ----

8. எட்டாம் பாவம்

தீர்க்காயுள், அற்பாயுள்

74. எட்டினால் மரணம் வாழ்நாள்
அத்துகள் இயம்ப லாகும்
எட்டினுக்கதிபன் சோமன்
கேந்திரதிரி கோணத் தெய்த
எட்டினை அதிபர் தன்னை
சோமனை எழில்கோள் நோக்க
திட்டமாம் தீர்க்க ஆயுள்
சிதையுமேல் அற்ப மாமே.

(இ.ள்) எட்டாமிடத்திற்கு மரண ஸ்தானம் என்றும் ஆயுள் ஸ்தானம் என்றும் பெயர். ஆகவே இப்பலன் களை இந்த இடத்தைக்கொண்டு சொல்லுமிடத்து எட்டாமிடத்திற்கு உடையவன், சந்திரன் இவர்கள் கேந்திர திரிகோணங்களில் இருக்க, எட்டாமிடத்திற்கு உடையவனையும் சந்திரனையும் சுபக்கிரகங்கள் பார்க்க, தீர்க்காயுளாம். இவை மாறுபடில் அற்பாயுளாம்.

மரணத்திற்கான காரணம்

75. இயல்புறு மரண மெய்தும்
இதுவன்றி மரண நாதன்
இயலுறு பகையில் எய்தின்
மரணமும் பகையி னாமல்
செயலுறு நீசம் எய்தில்
தீயநோய் கொண்டு சாவான்
மயலுறு வாதை மேவில்
வாதையால் மரண மாவான்.

(இ.ள்) இந்த ஜாதகன் அற்பாயுளாய் மரணமாவான். அன்றியும் எட்டாமிடத்திற்குடையவன் பகை வீட்டில் இருக்கில், பகையினால் மரணம். நீசராய் இருக்கில், வியாதியால் மரணம். வாதை பெறில் வாதையால் மரணம்.

இதுவுமது

76. மரணநா யகனைச் சோமன்
தனைச்செவ்வாய் மருவில் நோக்கில்
விரணமாய்ங் கருவி சோரில்
குத்திரத் தாலும் வீவர்
அருனனத் தானங் கூடில்
அபவாதம் மற்றும் நோயால்
தருணமாம் புகரீ ராறில்
சனிவெட்டு மரணம் தன்னால்.

(இ.ள்) எட்டாமித்துற்குடையவன், சந்திரன் இவர்களை அங்காரகன் கூடினும் நோக்கினும், ஆயுதத் தாலும், இரத்த விரணத்தாலும் மரணமடைவான். எட்டாமிடத்தில் சூரியன் இருக்கில், அபவாதத்தாலும் நோயாலும் மரணமாவன். பனிரெண்டில் சுக்கிரன் இருக்க, எட்டில் சனி இருக்க, தன்னால் மரணமாவான்.

குறிப்பு: விரணம் - காயம், அபவாதம் - பழிபாவம்

மரணக்காலம்

77. எட்டினுக் கதிபன் நின்ற
வோறை அங் கிசக்கால் அன்றி
எட்டினும் இராசி மாதம்
மரணலக் கனங்க ளாகும்
எட்டினுக் கதிபன் வாரம்
அன்னவர் சேர்ந்தே நாளும்
திட்டமா மரணம் தீக்கோள்
சேர்திரி கோணத் தாமே.

(இ.ள்) எட்டாமிடத்திற்குடையவன் இருந்த ராசி அங்கிசக் காலன்றி, அந்த இராசி மாதம் மரண மாதமும் மரண இலக்கனமுமாகும். எட்டாமிடத்திற் குடையவன் வாரமும் இவனைச் சேர்ந்த கிரகங்களின் நாளும் இதற்குத் திரிகோணமும் பாவக் கிரகங்கள் சேரும் காலமே மரணக் காலமாம்.

தீர்க்காயுள், சுக ஜீவனம்

78. ஏற்றிலக் கனக்கோட் காறில்
எட்டின்கோள் பத்தின் ளோரும்
தேற்றுநட் பாட்சி உச்சம்
கேந்திரதிரி கோணம் சேரச்
சாற்றும்அக் கோள்கள் தானும்
நட்புறத் தம்மில் வாழ
நூற்றிலும் அழியா ராகி
நுவலும்போ கங்கள் துய்ப்பார்.

(இ.ள்) இலக்கனாதிபதிக்கு ஆறாமிடத்தில் எட்டாமிடம், பத்தாமிடங்கட்குடையவர்கள் உச்ச ஸ்வ க்ஷேத்திர, மித்திருக்ஷேத்திர, கேந்திர திரிகோணங்களில் இருக்க, இக்கிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்துரு கிரகங்களாகக் கூடியிருக்க, தீர்க்காயுள் பெற்றுச் சுக ஜீவியாக வாழ்ந்திருப்பான்.

உடல் வெட்டுண்டு மரணம்

79. செவ்வாயின் ஆட்சி சென்ம
இலக்கன மாகச் செவ்வாய்
வெவ்வாயாம் அரவம் வெய்யோன்
வெண்மதி அதனில் கூடில்
வவ்வாய வாளால் மாய்வன்
வருஞ்சனி ஆரல் வெய்யோன்
ஒவ்வாத மதியைச் சாரிற்
சரீரத்தில் பயங்கள் உண்டாம்.

(இ.ள்) மேஷ, விருச்சிகம் இலக்கனமாக, அதில் அங்காரகன், இராகு, சூரியன், சந்திரன் இவர்கள் கூடியிருக்கில் வாளால் மரணமாவான். சந்திரனைச் சனி, அங்காரகன், இராகு, சூரியன், இவர்கள் கூடியிருக்கில் திரேக பங்கங்களால் மரணமாவான்.

குறிப்பு: பாடலில் பயங்கள் என்பது பங்கம் என்று
இருந்திருக்க வேண்டும்.
திரேக பங்கம் - உடலில் குறைபாடு.

மரணத்திற்கான காரணம்

80. எட்டினில் வெய்யோன் நிற்கில்
எரியினால் மரணம் சோமன்
முட்டுநீர் கருவி செவ்வாய்
புதனிற்கின் முனியும் வெற்புத்
துட்டவஞ் சனைநோய் சுங்கன்
துயர்பசி தாகம் காரி
நெட்டரா விடநோய் செம்பொன்
இயல்புநோய் மரண நீரில்.

(இ.ள்) எட்டாமிடத்தில் சூரியன் நிற்கில், அக்கினியால் மரணமாவன். சந்திரன் நிற்கில் ஜலத்தால் மரணமாவான். செவ்வாய் நிற்கில், ஆயுதத்தால் மரணமாவன்.புதன் நிற்கில் முனியாலும், மலையாலும், வஞ்சனையினாலும், வியாதியினாலும் மரணமாவன். சுக்கிரன் நிற்கில் பசி தாகங்களால் மரணமாவன். பாம்பு, சனி நிற்கில், விஷத்தாலும் வியாதியாலும் மரணமாவன். குரு நிற்கில், வியாதியாலும் நீரினாலும் மரணமாவன்.

இதுவுமது

81. சனிகட கத்தே நிற்பச்
சசிமக ரத்திற் காரி
அனியறும் உதர நோய்நா
ராசத்தால் மரிப்பர் செவ்வாய்

முனிசனி நாலில் நிற்ப
மொய்கதிர் ஈரா றெட்டில்
வனிதைகேள் ! கிணற்றில் அன்றேல்
மலைவளத் தேனும் மாய்வான்.

(இ.ள்) சனி கடகத்திலும், சந்திரன் மகரத்திலும் நிற்கில் உதர நோயாலும் நாராசத்தாலும் மரணமாவான். அங்காரகன், சனி இவர்கள் நாலாமிடத்தில் நிற்க, சூரியன், எட்டு, பனிரெண்டில் நிற்கில், கிணற்றில் வீழ்ந்து மரணமாவான் அல்லது மலைகளிலேறி வீழ்ந்து மரணமாவான்.

குறிப்பு: நாராசம் - இரும்பாயுதம்

இதுவுமது

82. கதிர்மதி கன்னி மேலக்
கடியகோள் காணில் சேரில்
அதிகமாம் விடத்தால் அன்றேல்
அலகையால் மயக்கில் சாவான்
உதயலக் கனமீ னாக
அதில்சசி வெய்யோன் தோன்றக்
கொதிகொளுங் கோள்கள் கூடில்
குளிர்கய நீரில் சாவான்.

(இ.ள்) சூரியன், சந்திரன் இவர்கள் கன்னியில் நிற்க, இவர்களைப் பாபக்கிரகங்கள் பார்க்கிலும் கூடினும் விஷத்தினால் அல்லது அலகையால் மயக்கத்தால் மரணமாவன். இலக்கனம் மீனாமாக, அதில் சந்திரன், சூரியன் இவர்கள் நிற்க, இவர்களைப் பாபக் கிரகங்கள் கூடில், குளத்தில் வீழ்ந்து மரணமாவன்.

இதுவுமது

83. கன்னியின் மதிவெய் யோனைக்
கடுங்கோள்கள் முன்னும் பின்னும்
துன்னியே நெருக்கில் வாயால்
சோரிதான் சோர்ந்து சாவான்
மன்னிய சனியன் வீட்டில்
மதிநிற்ப மதிக்குப் பின்னும்
முன்னுமதிக் கோள்கள் நிற்பின்
முடிப்பின்றி பாசத் தாலும்.

(இ.ள்)கன்னியில் சந்திரன், சூரியன் இவர்கள் நின்று இவர்களுக்கு முன்னும் பின்னும் பாபக்கிரகங்கள் நெருக்கில், வாயினால் இரத்தம் கக்கி மரணமாவான். சந்திரன், மகர, கும்பங்களில் இருக்க, இவனைப் பாபக்கிரகங்கள் நெருங்க பாசத்தால் மரணமடைவான்

குறிப்பு: பாசம் - கயிறு

இதுவுமது

85. சந்திர னோடு மந்த
சசிநின்ற திரிகோ ணத்தும்
வெந்துயர் கோள்கள் எல்லாம்
மேவிடில் பிளக்க மாய்வான்
பந்துடன் கதிரோன் பத்திற்
பார்மகன் நாலில் நிற்பச்
சந்தவார் முலையாம்! சாவன்
வாகன நிமித்தம் தன்னால்.

(இ.ள்) சந்திரனுடனேயாதல், சந்திரனுக்குத் திரிகோணத்திலேயாதல் பாபக்கிரகங்கள் இருக்கில், உடல் பிளப்புண்டு மரணமாவன். சனி, சூரியன் இவர்கள் பத்தாமிடத்தில் இருக்க, அங்காரகன் நான்காமிடத்தில் இருக்கில், வாகனத்தால் மரணமாவான்.

இதுவுமது

86. நாலினில் வெய்யோன் நிற்ப
நளிர்மதி நோக்கி னாலும்
நீலனார் நோக்கச் செவ்வாய்
பத்தினில் நிற்கு மேனும்
சாலுநால் எட்டில் வெய்யோன்
சனிநிரை யாய்ச்சார்ந் தாலும்
ஆலசனி உதிப்ப சேய்பத்
தரவெனும் கடியில் சாவான்.

(இ.ள்) சூரியன், நாலாமிடத்தில் இருக்க, இவனைச் சந்திரன் அல்லது சனி பார்க்கிலும் அங்காரகன் பத்தாமிடத்தில் இருக்கினும், நாலாமிடத்தில் சூரியன், எட்டாமிடத்தில் சனி இப்படி இருக்கினும், இலக்கனத்தில் சனி இருக்க, இலக்கனத்திற்குப் பத்தாமிடத்தில் அங்காரகன் இருக்கினும் சர்ப்பத்தால் மரணமாவான்.

இதுவுமது

87. கரியவன் ஒருநா லெய்த
மதியைச்சேய் காணு மேனும்
எரிகதிர் மதிஈ ரைந்தில்
இரண்டுநான் கதனில் மேவில்
நிரைதரும் புழுக்கள் தானே
நெளிந்திடும் புண்ணால் மாய்வன்
இதயநால் ஏழில் பத்தில்
சேய்கதிர் செனிக்கும் அன்னோய்.

(இ.ள்) சனி, நாலாமிடத்தில் நிற்க, சந்திரனை அங்காரகன் பார்க்கினும், சூரியன், சந்திரன் இவர்கள் பத்தாமிடம், ரெண்டாமிடம், நாலாமிடம் இப்படி இருக்கில், புழுத்து மரணமாவன். ஐந்தாமிடம், ஏழாமிடம், நாலாமிடம் இவற்றில் அங்காரகன், சூரியன் இவர்கள் நிற்கில் வல்பிணியால் மரணமாவன்.

இதுவுமது

88. கதிர்மதி உதிப்பச் செவ்வாய்
ஏழினில் கலப்பத் தோன்றில்
சிதையவில் யந்திரங்க ளேற
வீழ்ந்துயிர் நசித்து வாணான்
முதுமக னாட்சி மேவ
மெய்கதிர்சேய் சேர வேணும்
மதிர்கதிர் சேய்பத் தேழ்நால்
எய்தினு மத்தின் மாய்வான்.

(இ.ள்) இலக்கனத்தில் சூரியன், சந்திரன் இவர்கள் இருக்க, ஏழாமிடத்தில் அங்காரகன் இருக்கில், தேரில் இருந்து வீழ்ந்து மரணமாவன். சனி, மகர, கும்பங்களில் இருக்க, இவனைச் சூரியன், சனி இவர்கள் கூடினும், சந்திரன், சூரியன், அங்காரகன் இவர்கள் பத்தாமிடம், ஏழாமிடம், நாலாமிடம் இப்படி இருக்கில் ஊமத்தையால் மரணமாவன்.

இதுவுமது

89. இரவிசேய் ஏழில் கூட
எட்டினில் காரி எய்தில்
கரைமதி நாலின் மேவிற்
பரவையால் கழிவன் வாழ்நாள்
பரவுமொன் றைந்தொன் பானில்
இரவிசேய் மதியம் பற்ற
விரவுமோர் எட்டில் காரி
மேவினும் இடியில் வீழ்வான்.

(இ.ள்) சூரியன், அங்காரகன் இவர்கள் ஏழாமிடத்திற் கூடி இருக்க, சனி எட்டாமிடத்தில் இருக்கினும் சந்திரன் நாலாமிடத்தில் இருக்கினும் சமுத்திரத்தில் வீழ்ந்து மரணமாவன். சூரியன், அங்காரகன், சந்திரன் இவர்கள் இலக்கனம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் இப்படி இருக்க, எட்டாமிடத்தில் சனி இருக்கினும் இடி வீழ்ந்து மரணமாவன்.

தீர்க்காயுள்

90. சொன்னலைக் கனக்கோள் பத்தின்
கோளெட்டின் கோளை நற்கோள்
நன்னய மோடு கூடி
நண்ணினும் நோக்கி னாலும்
முன்னைநூல் முழுதும் ஆய்ந்தோர்
மொழிவன் தீர்க் காயுள் யோகம்
துன்னிய இருபாற் கோளின்
வலியினைத் துணிந்து சொல்லே.

(இ.ள்) இலக்கனாதிபதி, பத்தாமிடத்ததிபதி, எட்டாமிடத்ததிபதி இவர்களைச் சுபக்கிரகங்கள் கூடினும் பார்க்கினும் தீர்க்காயுள் யோகமாம். இதனைக் கிரகங்களின் பெலாபெலம் அறிந்து சொல்வதாம்.

குறிப்பு: பெலாபெலம் - வலிமை

அற்பாயுள்

91. இலக்கனக் கோளைப் பத்தின்
கோளெட்டின் கோளென் போரை
விலக்கிய சனிசேய் வெய்யோன்
விடவரா குளிகன் பார்க்கில்
அழற்படு மற்பா யித்தே
என்பரன் னோரைத் தீயோர்
மலர்க்குழல் நல்லோர் கூடின்
மத்திம ஆயுள் யோகம்.

(இ.ள்) இலக்கனாதிபதி, பத்தாமிடத்ததிபதி, எட்டாமிடத்ததிபதி இவர்களைச் சனி, அங்காரகன், சூரியன், இராகு, குளிகன் இவர்கள் பார்க்கில், அற்பாயுளாம். பாபக் கிரகங்களும் சுபக்கிரகங்ரளும் பார்க்கில் மத்திம ஆயுளாம்.

மரணக்காலம்

92. குளிகன்செல் ஓரை நாதன்
 கொடியரா சனியன் காலோ
தெளிதரு சென்ம ஓரை
 திரேகாணத் தோழெட் டாக
ஒளிதரு திரேகா ணத்துக்
 குடையகோள் உலகை எல்லாம்
விழிதரும் மிருத்து நாதர்
 இவரிலும் பலமே வந்தோர்.

(இ.ள்) குளிகன் நின்ற இராசியாதிபதி, இராகு, சனி இவர்கள் நின்ற சாரக்கிரகங்கள், இலக்கனம், திரேகாணம் ஏழாமிடம், எட்டாமிடம், திரேகாணாதிபன், மாராகாதிபன் இவர்களால் பலாபலம் அறிந்து, (கொள்ளவேண்டும்)

இதுவுமது

93. ஆமிரன அறிந்தன் வோரால்
 இயம்புவர் மரண காலம்
சேருமம் மரணந் தன்தன்
 திசையூணும் செவ்வை தேர்ந்து
பாரினில் ஒருவர் வாழ்நாள்
 தீர்க்கமத் திமமாம் அற்பம்
கூரிதாய் உணர்ந்து கோளின்
 வலியறிந் தினிது கூரே.

(இ.ள்) அவரவர்களின் திசைபொசிப்பினால், தீர்க்காயுள், மத்திமாயுள் அற்பாயுளும் தேர்ந்து நிரியாண காலம் சொல்லப்படும்.

குறிப்பு: நிரியாண காலம் - மரண காலம்.

மரணக்காலம் கணக்கிடல்

94. மாந்தியும் சனியும் கூடி
 ஒன்பதால் அதனை மாறி
சேர்ந்தவோ ரையினில் காரி
 செல்லினில் செம்பொன் மாந்தி

பேர்ந்திடும் புடத்தை ஒன்ப
தாற்தாக்கும் ஓரை பொன்னாக்
கேய்ந்திடும் சனியைக் கூடி
இருந்தஓரை யிற்பொன் சாவே.

(இ.ள்) குளிகன், சனி இவர்கள் புடத்தை ஒன்றாகக் கூட்டி ஒன்பதில் பெருக்க வந்த இராசியில் சனி வரும் காலமும், குரு, குளிகன் இவர்கள் புடத்தை ஒன்றாகக் கூட்டி ஒன்பதில் பெருக்க, வந்த இராசியில் குரு வரும் காலமும், குரு, சனி புடங்களைக்கூட்ட வந்த ராசி நாளில் குரு வரும் காலமும் நிரியாண காலமாம்.

இதுவுமது

95. பரிதியில் குளிகன் சேர்ந்து
ஒன்பதாற் றாக்கிப் போட்டுக்
குரியபொன் புடத்தைக் கூட்டும்
ஓரைவெய் யவனில் சாவாம்
தருத்தி யோடு மாந்தி
தனைக்கூட்டி யொன்பாற் றாக்கி
மரணவெய் யவனைக் கூட்டும்
ஓரைநாள் அதனின் மாய்வார்.

(இ.ள்) சூரியன் புடத்துடன் குளிகன் புடத்தைக் கூட்டி ஒன்பதில் பெருக்கி, இத்துடன் சப்தமாதிபதி, குரு இவர்கள் புடத்தைக் கூட்டி, இந்த இராசியில் சூரியன் வரும் மாதத்திலே நிரியாணமாம். அஷ்டமாதிபன் புடத்துடன் குளிகன் புடத்தைக் கூட்டி, ஒன்பதில் பெருக்கி, இத்துடன் சூரியன் புடத்தைக் கூட்ட வந்த இராசி நாளில் நிரியாணமாம்.

இதுவுமது

96. காரகர் புடத்திற் செல்லும்
பாகையே மூன்றே முக்கால்
தாரக மாக வீந்த
பலமொன்றேற் சனியி ரண்டேற்
சீரிய செம்பொன் மூன்றேல்
செய்யநால் வெய்யோன் ஐந்தே
ஏர்புகர் ஆறேல் புந்தி
ஏழெனின் மதிஎன் பாரால்.

(இ.ள்)சனிபுடத்தில் சென்ற பாகையை மூன்றே முக்காலில் கழித்த வட்டம் ஒன்றாகில்-சனி, இரண்டாகில்-குரு, மூன்றாகில்-அங்காரகன், நான்காகில்-சூரியன், ஐந்தாகில் - சுக்கிரன், ஆறாகில்-புதன், ஏழாகில் சந்திரன்.

இதுவுமது

97. என்றறிந் தீந்த பேற்றின்
கிரகஞ்செல் நாளில் காரி
ஒன்றுநா ளில்திரி கோணத்
துயிர்விடு வனையோ ரொன்பான்
நற்றெழிற் குளிகன் செல்லும்
புடத்தையொன் பதினாற் றாக்கி
நன்னுற வெற்றி சோமன்
புடங்கூட்டு நாள்பொன் றாதை.

(இ.ள்)கழித்த வட்டத்தால் வந்த கிரகங்கள் வந்த நாட்களிலும் அதற்குத் திரிகோண நாட்களிலும் சனி வரும் நாட்கள் நிரியாண நாட்களாம். நாலுக் குடையவன், ஒன்பதுக் குடையவன் அல்லது குளிகன் இவர்கள் புடத்தை ஒன்பதிற் பெருக்கி, இத்துடன் சந்திரன் புடத்தைக் கூட்ட வந்த நாளில் சனி வருநாள் நிரியாணமாம்.

எட்டாம் பாவம் முற்றிற்று

****

9. ஒன்பதாம் பாவம்

சுகஜீவனம் உடையவன்

98. பிதுர்குரு தர்மம் செல்வம்
ஒன்பதால் பேச நாடும்
கதிரவன் பிதுர்த்தா னத்தோன்
கலப்பநட் பாட்சி உச்சம்
புதியகா ரகன்தா னக்கோள்
கேந்திரதிரி கோணம் ஊன
அதிபன்கா ரகன்தா னத்தை
அடைந்துநற் கோள்கள் நோக்க.

(இ.ள்) ஒன்பதாமிடம் 'பிதுரு ஸ்தானம்', 'தர்ம ஸ்தானம்' 'பாக்கியஸ்தானம்' என்று பெயராம். ஆகவே இப்பலன்களை இந்தப் பாவத்தைக் கொண்டு சொல்லு மிடத்துச் சூரியன், ஒன்பதாமிடத்துக்குடையவன் கூடி நட்பு, ஆட்சி, உச்சம் என்றும் சூரியன் நின்ற இராசியாதிபதி கேந்திரத் திரிகோணங்களில் இருக்க, ஒன்பதாமிடத்துக்குடையவன், சூரியன் இவர்களது ஸ்வக்ஷேத்திரங்களில் சுபக்கிரகங்கள் இருக்கினும் நோக்கினும். (நன்மையாகும்).

குறிப்பு: பிதுர்ஸ்தானம் - ஒன்பதாமிடம், தந்தைக்குரிய இடம்

சுக ஜீவனம், தந்தையிடம் அன்பும், அன்பின்மையும்

99. அப்பனும் ஊழி காலம்
அடைவன்செல் வத்தி னோடு
ஒப்பில்கா ரகன்தா னத்தோன்
உறஇலக் கனத்தோர்க் காகில்
தப்பற பிதாவும் தானும்
தங்களில் உறவுண் டாவர்
என்புற பகையே யாகில்
இருவரும் பகையே யாவர்.

(இ.ள்) இவனது பிதா வெகுபாக்கியவந்தனாய்த் தீர்க்காயுள் பெற்றுச் சுகஜீவியாய் வாழ்வன். சூரியன், ஒன்பதாம் இடத்திற்குடையவன் இவர்கள், இலக்கனாதிபதிக்கு மித்துரு கிரகங்களாகில் இவனும் பிதாவும் உறவுற்றிருப்பார்கள். சத்துரு கிரகங்களாகில், ஒருவருக்கொருவர் சத்துருக்களாய் இருப்பார்கள்.

சௌபாக்கியம்

100. குருவருள் அறிவு கல்வி
குணந்தவம் ஒழுக்கம் மற்றும்
தரும்நீள இனிய செல்வம்
தன்னதே என்ன வாழ்வன்
தெரியுநட் பாட்சி யுச்சம்
கேந்திரதிரி கோணம் தன்னில்
மருவுநற் கோள்க ளோடு
ஒன்பதுக்குடையவன் வாழில்.

(இ.ள்) ஒன்பதாமிடத்திற்கு உடையவன், சுபக்கிரகங்களுடனே கூடி, கேந்திர திரிகோணங்களிலே, நட்பாட்சி, உச்சம் பெற்றிருக்கில், குருகடாட்சம், ஞானம், கல்வி, குணம், தவம், ஒழுக்கம், தருமம், ஐஸ்வரியம் இவை முதலியவும் பெற்று வாழ்வான்.

சகலரையும் நிந்திப்பவன்

101. சரோருகன் பிதுர்த்தா னத்தோன்
பாகைநீசம் சார்ந்து நிற்க
புரோகிதன் நோக்கா னாகில்
புல்லர்கள் கூடி நோக்கின்
பரோபகா ரியர்தா னாகிப்
பண்பினின் மிகுந்தா னேனும்
துரோகியே யாவா னென்றே
நிந்தனை யேனும் சொல்வான்.

(இ.ள்) சூரியன் ஒன்பதாமிடத்திற்குடையவன் இவர்கள் பகை, நீச இராசிகளில் இருக்க, இவர்களுக்குக்

குரு திருஷ்டியின்றிப் பாபர் திருஷ்டி அல்லது பாபசையுத்தம் இருக்கின், துரோகியாம். அல்லது சகலரையும் நிந்திப்பவனாம்.

குறிப்பு: சரோருகன் -சூரியன்

பிதுர்த்தானத்தோன் - ஒன்பதமிடத்திற்கு அதிபதி

புரோகிதன் - குரு; புல்லர்கள் - பாவக்கோள்கள்

நோயாளித் தந்தை

102. சூரியன் பிதுர்த்தா னத்தோன்
பகைநீசம் தன்னில் தோயக்
காரகன் தானத் தோனும்
கலப்பவர் எட்டீ ராறில்
கூடிய தீக்கோள் தானும்
இவரொடுங் கூடில் நோக்கில்
நாரிகேள் ! வன்னோய் கொண்டு
தந்தையும் நொந்து சாவான்.

(இ.ள்) சூரியன், ஒன்பதாமிடத்திற்குடையவன் இவர்கள் பகை, நீச ராசிகளில் இருக்கினும் கூடினும், இவர்கள் பாபக்கிரகங்களுடனே கூடி அல்லது திருஷ்டி யாவதும் பெற்றுச் சஷ்டாஷ்ட வியஸ்தானங்களில் இருக்கினும் இவன் பிதா, வியாதியால் நொந்து சாவான்.

பாக்கியவான்

103. பாக்கிய தானத் தோனும்
வாக்கினா திபனும் பத்துக்
காக்கமாம் கோளிம் மூன்று
நட்பாட்சி உச்சம தாகி
நீக்கரும் திரிகோ ணத்தினில்
நிகரும்கேந் திரத்திற் நிற்பிற்
காக்குமன் னவர்க்கும் எய்தாத்
திருவொடுங் களித்து வாழ்வன்.

(இ.ள்) ஒன்பதாமிடத்திற்குடையவன், இரண்டாமிடத்திற்குடையவன், பத்தாமிடத்திற்குடையவன்,

இவர்கள் நட்பாட்சி உச்சம் பெற்று கேந்திர திரிகோணங்களில் இருக்கில், இராஜ யோகத்திற்கு அதிகமான பாக்கியவந்தனாய் வாழ்வன்.

தந்தையின் மரணக்காலம்

104. சூரியர்க் கெட்டி லுள்ளோர்
தோய்ந்திடும் ஓரை அன்னோன்
சாருமங் கிசதிரி கோணிற்
சனிவருங் காலந் தன்னில்
வீரிய சனியி னோடு
மேவும்கோள் திசைகள் ஊணில்
ஆருயிர் துறப்பன் தந்தை
என்பதற் கையம் இல்லை.

(இ.ள்) சூரியனுக்கு எட்டாமிடத்தில் இருக்கின்ற கிரகங்கள் எட்டாமிடத்து அதிபதி நின்ற இராசியாதிபதி ஏறிநின்ற அங்கிஷத்திலும், அதற்குத் திரிகோணங் களிலும் சனிவரும் காலம், சனியுடன் கூடிநின்ற கிரகங்களின் திசை பொசிப்பில் பிதுர்மரணம்.

இதுவுமது

105. ஒன்பதுக் கதிபன் வெய்யோன்
உடுபதி புடமும் ஒன்றாய்
இன்புறு இலக்க னத்தோன்
புடத்தொடு கூட்டி ஏற்றி
முன்புறு நாளில் காரி
வருநாளின் முடிவன் தந்தை
அன்புறு இலாப நாதன்
அங்கிசம் மரண மாதம்.

(இ.ள்) ஒன்பதாம் இடத்திற்கு உடையவன், சூரியன், சந்திரன் இவர்கள் புடங்களை ஒன்றாகக் கூட்டி, இலக்கனாதிபன் புடத்திலே மாறி வந்த நாளில் சனி வரும் நாள் பிதுர் மரணம். இலாபாதிபன் அங்கிசமான இராசி மாதமே திரியாண மாதமாம்.

தந்தைக்கு உதவாப் பிள்ளை

106. சரம்பிதுர்த் தான மாகி
அதிபதி சரத்தைச் சார
விருங்கதிர் இருபத் தோராம்
திரேக்காணம் சரமாய் எய்த
மரும்பிதுர்க் கதிபன் எட்டீர்
ஆறுளோன் சரக்கா லாக
வரும்பிதுர் மரண காலம்
கருமத்துக் குதவான் மைந்தன்.

(இ.ள்)ஒன்பதாமிடம் சரராசியாய், ஒன்பதாம் இடத்திற்கு உடையவன் சரராசியில் இருக்க, சூரியன் த்ரேக்காணம் சரராசியாக, ஒன்பதாமிடத்திற்கு உடையவனுக்குச் சட்டாட்டாதிபதிகள் சரக்காலாக, இவன் பிதாவின் மரண காலத்திற்கு உதவுவான்.

குறிப்பு: சரராசிகள் - மேஷம், கடகம், துலாம், மகரம்

தந்தைக்குப் பகைவன்

107. இவ்வகை திரமே யாகி
இருந்துதான் கருமஞ் செய்வன்
அவ்வகை உபய மாகில்
அன்னிதாய் வந்து செய்வன்
கவ்வையாய்ப் பிதுர்த்தா னத்தோன்
இருமூன்றில் எனினும் காயும்
தவ்வதி பதியாய்த் தீயோ
சாரில்சத் துருவாம் தந்தை.

(இ.ள்)மேற்கூறியவைகள் ஸ்திரமாகில் இவன் பிதா மரண காலத்திற்கு உதவுவான். உபயமாகில் மரண காலத்திற்கு உதவாமல் பின்வந்து கர்மம் செய்வன். ஒன்பதாம் இடத்திற்கு உடையவன், ஆறாமிடத்தில்

இருக்கினும் சனிநின்ற இராசியாதிபதி பாபக்கிரகங் களோடே கூடினும் இவன்பிதா சத்துருவாய் இருப்பன்.

குறிப்பு: ஸ்திர ராசிகள் - ரிஷபம், சிம்மம், விருட்சிகம், கும்பம்.

தந்தையின் நோய்

108. சூரியன் சுரநோய் பித்தம்
கலந்தநோய் சோம னாகி
நேரில்லா உதர ரோகம்
மதிசார நீரின் கோபம்
வீரிய செவ்வாய் சோரி
ஆயுதம் விரணம் வெப்பு
கூரிய புந்தி வாதம்
பயித்தியம் குருநோய் குன்மம்.

(இ.ள்) ஒன்பதாமிடத் திரேக்காணாதிபன் சூரியனாகில், இவன் பிதா, சுரரோகம், பித்தரோகம் இவற்றால் மரணம். சந்திரனாகில், உதரரோகம், அதிசாரம், ஜலதோஷம் இவற்றால் மரணம். அங்காரகனாகில் இரத்தரோகம். ஆயுதவிரணம், வெப்பு இவற்றால் மரணம். புதனாகில், வாதரோகம், பைத்தியரோகம் இவற்றால் மரணம்.

இதுவுமது

109. சுக்கிரன் சலவி யாதி
பலவிடம் சிலேட்ம ரோகம்
நோக்கிடும் காரி வாத
சூலைவன் நோயும் நீர்க்கால்
மிக்குநீர்த் தோணி மூழ்கும்
பேரரா விடநோய் குட்டம்
மிக்கபல் விடத்தால் வீயும்
தந்தையின் நோயைன் பானே.

(இ.ள்) சுக்கிரனாகில், நீர்ப்பாண்டு, விஷம், சிலேஷ்ம ரோகம் இவற்றால் மரணம். சனியாகில், வாதரோகம், சூலை, வல்பிணி, நீர்க்கால்கள், படகேறி மூழ்கல் இவற்றால் மரணம். இராகுவாகில் விஷரோகம், குஷ்டம், சர்ப்பாதிய விஷங்கள் இவற்றால் மரணம்.

இதுவுமது

110. விடத்திரே காணம் பாம்பாய்
ஒன்பதில் மேவில் பாம்பு
கடித்துயிர் துறப்பான் தாதை
ஒன்பதில் கலந்தோர் பன்றி
யுடைத்திரேக் காணம் மேவின்
மிருகத்தால் உயிர்ப்போம் மாந்தி
படைத்திரம் ஒன்பான் வெய்யோன்
பதித்துற மரணம் பாரே.

(இ.ள்) சர்ப்பத் திரேக்காணமாய் அதில் அல்லது ஒன்பதாமிடத்தில் இராகு இருக்கில், இவன்பிதா சர்ப்பந் தீண்டி மரணமாவான். ஒன்பதாமிடத்தில் இருந்த கிரகங்கள் மிருக திரேக்காணத்தில் இருக்கில் மிருகத்தால் மரணமாவான். ஒன்பதுக்கு உடையவன் சூரியனாய் இருக்கினும் அதுவேயாம்.

வாக்கிய பரிபாலனம்

111. அய்யனட் டமக்கூ றேனும்
அவனெட்டோன் உதய மேனும்
துய்யவெண் மதிக்கொன் பானோன்
பதினொன்றில் தொடரு மேனும்
பெய்வளைக் கையாய் பிள்ளை
பிறக்கிலிப் பிள்ளை தாதை
செய்யதாள்பணிந் தன்னோன் சொல்ல
ஏவலும் செய்யும் என்னே ?

(இ.ள்) ஒன்பதுக்குடையவன் அஷ்டமாதிபனது அங்கிசம் பெறினும், ஒன்பதுக்குடையவன் அஷ்டமாதிபன் இவர்கள் இலக்கனத்தில் நிற்கினும், சந்திரனுக்கு ஒன்பதாமிடத்திற்குடையவன் பதினோரா மிடத்தில் இருக்கினும் இவன் வாக்கிய பரிபாலனம் பண்ணுவான்.

ஒன்பதாம் பாவம் முற்றிற்று

10. பத்தாம் பாவம்

நல்ல தொழில்

112. பத்தினால் கருமஞ் செய்யும்
தொழிலிவைப் பகர லாகும்
பத்தினுக் குடையோன் நீங்கா
நட்பாட்சி உச்சம் பற்ற
பத்தினுக் குடையோன் தானும்
கேந்திரதிரி கோணம் பாய
பத்தினை அதிபன் தன்னைப்
பரித்துநற் கோள்கள் நோக்க.

(இ-ள்) பத்தாமிடம், 'கர்மஸ்தானம்', 'ஜீவன ஸ்தானம்' என்று பெயர். ஆகவே, இப்பலன்கள் இந்தப் பாவத்தால் சொல்லுமிடத்துப் பத்தாமிடத்ததிபதி நட்பாட்சி உச்சத்து இருக்கினும் அல்லது கேந்திர திரிகோணங்களில் இருக்கினும் பத்தாமிடத்து அதிபதியைப் பத்தாமிடத்தைச் சுபக்கிரகங்கள் பார்க்கினும், (நன்மையாகும்)

நல்லதொழில்

113. பத்தினுக் குடையோன் நற்கோ
ளேற்பயில் கருமத் தானும்
முத்தியின் வித்தாய் நிற்கும்
மொழிந்திடும் கரும நாதன்
சத்துருத் தான நீசம்
சாரவர் எட்டீ ராறில்
பத்துடைக் கோளோ டெய்தில்
பகரொணா வசத்த னாவன்.

(இ-ள்) பத்தாமிடத்திபதி சுபக்கிரகமாய் இருக்கினும் சத்விஷயங்கள் செய்வன். பத்தாமிடத்து அதிபதி, பகை நீசத்திருக்கினும் பாபக்கிரகங்களுடனே கூடி, சட்டாட்டம வியத்தில் இருக்கினும் துர்விஷயங்கள் செய்வன்.

இறைபக்தி

114. வளவிய கரும நாதன்
மாலெனின் மாயோற் காளாம்
அளவிய புகரோ னாகில்
அம்பிகை தாச னாவான்
தெளிதரு செம்பொன் னாகில்
சிவபத மடைவன் செங்கோல்
ஒளியுடை யவனல் வேத
வழியினில் ஒழுகு மன்றே.

(இ.ள்) பத்தாமிடத்ததிபதி, புதனாகில் விஷ்ணு பக்தியும், சுக்கிரனாகில் அம்பிகை பக்தியும், குருவாகில் சிவபக்தியும், வேத தியானமும் செய்குவன்.

இதுவுமது

115. கருமத்தோன் தான்சே யாகிற்
கருதுவோன் குமர வேளை
யுருகித்தான் நிற்பன் காரி
ஏலுருத் திரனை உன்னி
வருமத்தா னத்தின் வெய்யோன்
மருவின்மாந் திரிக னாவன்
வெருவத்தான் குலிகன் கூடில்
மேவும்ஆ சார ஈனன்.

(இ.ள்) பத்தாமிடத்ததிபதி அங்காரகனாகில், சுப்பிரமணிய பக்தியும் செய்குவன். பத்தாமிடத்தில் சூரியன் கூடில் மாந்தரீகத் தொழிலும், குளிகன் கூடில் ஆசார எஃஞுமும் செய்குவன்.

குறிப்பு: எஃஞும் - யாகம்

இதுவுமது

116. பொன்னவன் புகர்மால் அன்னோர்
பொருந்திடிற் புரியும் வேள்வி
சொன்னவை நிற்க நாலின்
கோள்பத்திற் தோன்ற வன்றே

நன்னய மோடு பத்தின்
கோள்நாலில் நன்ன அக்கோள்
கன்னிகேள்! நீர்கோ ளாகில்
கங்கைபோய் முதனீ ராடும்.

(இ.ள்) பத்தாமிடத்தில் குரு, சுக்கிரன், புதன் இவர்கள் கூடில் வேள்வி முடிப்பன். இவர்கள் நாலாமிடத்தில் இருக்க, நாலாமிடத்திற்கதிபதி பத்தா மிடத்தில் இருக்க அல்லது பத்தாமிடத்திற்கதிபதி நாலா மிடத்தில் இருக்க, இவர்கள் ஜலக்கிரகங்களாய் இருக்கின், கங்கா தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்கள் ஆடுவான்.

குறிப்பு: சலக்கிரகங்கள் - சுக்கிரன், சந்திரன், இராகு.

புண்ணிய தீர்த்தம் ஆடுபவன், அட்டாங்க யோகம் முடிப்பவன்

117. பத்தின்கோள் நாலின் கோளும்
நீர்க்கோளாய்ப் பழுதின் றாகிச்
சுத்தகேந் திரத்தில் மேவில்
தேய்ந்திடும் தீர்த்தம் தோறும்
நித்தமாம் பத்தின் கோளும்
நிகரிலைந் துடைய கோளும்
மொத்துயர் வலியர் கூடில்
யோகத்தில் உறைவ னன்றே.

(இ.ள்)பத்தாமிடம், நான்காமிடம் இவற்றின் அதிபதிகள் ஜலக்கிரகங்களாய் வலிதுபெற்று சுபகேந்திரமும் பெறின், புண்ணிய தீர்த்தங்கள் ஆடுவன். பத்தாமிடத்ததிபதி, ஐந்தாமிடத்ததிபதி இவர்கள் கூடில் இவர்களுடன் வலிது பெற்ற கிரகங்களும் கூடின் அஷ்டாங்க யோகம் முடிப்பன்.

குறிப்பு: அட்டாங்க யோகம் - யோகத்தின் எட்டு நிலைகள். அவை, 1. இமயம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி ஆகியவை.

சன்னியாசி

118\. மிஞ்சிய கரும நாதன்
இலக்கனன் ஐந்தின் வேந்தன்
எஞ்சலில் வலிய ராகித்
தானமும் சுத்த மெய்தின்
வஞ்சிகேள் ! வாக்கி னுக்கே
உடையகோள் வலிய தாகிற்
தஞ்சமாம் யோகிற் றூங்கும்
துறவிசன் யாசி யாவான்.

(இ.ள்) பத்தாமிடத்ததிபதி, இலக்கனாதிபதி, பஞ்சமாதிபதி இவர்கள் வலிது பெற்றுப் பத்தாமிடம் சுத்தமாய் வாக்கு ஸ்தானாதிபதி வலிது பெறில், சன்னியாசி யாவான்.

இதுவுமது

119\. உறைந்தபத் தொன்றைந் தேழ்நால்
வாக்கினுக் குடைய கோள்கள்
நிறைந்தநீள் வலியின் மேவித்
தம்மினில் நேச ராகிற்
சிறந்தஇல் லறத்தின் மேவி
தினவொடுந் திளைத்துத் தீரா
துறந்துளோர் தமக்குத் தோயா
வகத்துற உடையோ னாவான்.

(இ.ள்) பத்தாமிடம், இலக்கனம், ஐந்தாமிடம், ஏழாமிடம், நாலாமிடம், இரண்டாமிடம் இவற்றின் அதிபதிகள் வலிது பெற்று ஒருவருக்கொருவர் மித்துரு கிரகங்களாயின், இல்லறத்திலேயே சிறிதுகாலம் இருந்து பிறகு சன்னியாசியாவான்.

தொழில்

120. இரவிசெயன் மத்தோன் சோமன்
இவர்களில் வலியுண் டானோர்க்
கொருபத்துக் குடையோன் காலாற்
கருமசீ வன்னூல் ஓதும்
வருமந்தக் கால்வெய் யோனேல்
வைத்திய மணிபொன் விறகு
துரியவா ணிபத்தாற் தூதாற்
பிதுர்வழி தனத்தால் உண்பன்.

(இ.ள்) சூரியன், இலக்கனாதிபன், சந்திரன் இவர்களில் வலிது பெற்றோர்களுக்குப் பத்தாமிடத் ததிபதி காலால் கருமமும் சீவனும் சொல்லப்படும். கால் சூரியன் காலாகில், வைத்தியத்தாலும் இரத்தினம். சுவர்ணம் இவற்றின் வியாபாரத்தாலும் தூதாலும் பிதுரார்ச்சிதத்தாலும் சீவிப்பன்.

குறிப்பு: சுவர்ணம் - பொன்
பிதுரார்ச்சிதம் - தந்தையின் பொருள்.

இதுவுமது

121. மதியின் காலேல் வேளாண்மை
தாய்தன் மடவர் தம்மை
அதிகமாய் அனுச ரித்து
வினோதத்து மருந்து சேயால்
புதியவே ளாண்மை பூமி
சகோதரம் பொன்போல் செய்து
நிதியமுண் டாகி உண்பன்
களவுபொய் கலகம் நேர்ந்து.

(இ.ள்) சந்திரன் காலாகில், வேளாண்மையாலும் மாதுரு தனத்தாலும் ஸ்திரீகள் தனத்தாலும் சீவிப்பன்.

அங்காரகன் காலாகில், வேளாண்மையாலும், பூமியாலும் பிராதுரு தனத்தாலும், களவு, பொய், கலகம் இவற்றாலும் சீவிப்பன்.

குறிப்பு: பிராதுரு சனம் - சகோதரன் செல்வம்.

இதுவுமது

122. புந்திகா லாகில் சிற்பம்
சோதிடம் புலமை கேள்வி
தந்திரம் கரணம் வித்தை
புரோகிதம் தமர்சோ றுண்ணும்
அந்தணன் காலேல் வேந்தர்
அனுசரிப் புபதே சங்கர்
மந்திரம் புராண நீதி
சாத்திரம் மதியால் ஆய்வன்.

(இ.ள்) புதன் காலாகிற் சிற்ப சாஸ்திரம், சோதிஷ சாஸ்திரம், வித்துவம், தந்திரம், கானம்பாடுதல், புரோகிதம் இவற்றால் சீவிப்பன். குரு காலாகில், இராஜ சன்மானம் ஞானோபதேசம், மாந்திரீகம், புராணம், நீதி சாஸ்திரம் இவற்றால் சீவனம்.

இதுவுமது

123. வெள்ளியின் காலே யானை
பசுபரி மணிபொன் விற்று
வள்ளுரை வாட்கண் ணாரை
வழு(கரி)த்துசீ விப்பன் காரி
கொள்ளுங்கா லாகில் சொற்ப
மாம்வேலை குறளை வஞ்சம்
எள்ளிய சுமைசு மந்து
ஏவலும் செய்துண் பானால்.

(இ.ள்) சுக்கிரன் காலாலே யானை, பசு, பரி, இரத்தினம், சுவர்ணம் இவ்வியாபாரங்களாலும் ஸ்திரீ

தனங்களாலும் சீவிப்பன். சனியின் காலாகில் சொற்ப காரியங்கள், கோள், வஞ்சகம், சுமை சுமத்தல், ஏவற் தொழில் இவற்றால் சீவிப்பன்.

குறிப்பு: பரி - குதிரை; சுவர்ணம் - பொன்; சொற்பம் - குறைவு..

இதுவுமது

124. இவ்வண்ணஞ் சொல்ல வற்றோர்
கோள்வலி யின்றே யாகிற்
செவ்வணம் வலியின் மீறிற்
செப்பிய பொருட்க ளெல்லாம்
கைவணம் ஏவல் செய்ய
கருத்தனாய் வாழ்வா னென்க
வவ்வண நூலுஞ் சொல்லும்
அதுதனக் கைய மின்றே.

(இ.ள்) மேற்சொன்னவர்கள் அவ்வக்கால்களின் கிரகபெலாபெலம் அறிந்து சொல்வதாம். இவ்வகையில் ஏவல் செய்ய வேணும். ஏவுகின்ற கர்த்தனாய் வாழ்தலும் உளவாம்.

பத்தாம் பாவம் முற்றிற்று

11. பதினோராம் பாவம்

அதிக இலாபங்கள் அடைபவன்

125. ஓதிய மூத்தோ னன்ன
பதினொன்றா லுரைக்க லுற்றேன்
ஆதிபன் ஆட்சி உச்சம்
நட்பினால் அடைந்து மார்க்கம்
கோதில் கேந் திரத்தி லேனும்
திரிகோணத் தேனும் கூடில்
மீதிலா பங்கள் உண்டாம்
நற்கோள்கள் மேவி னாலும்.

(இ.ள்) பதினோராமிடம், ஜ்யேஷ்டன் என்று பெயராம். ஆகவே இப்பலன்கள் இந்தப் பாவத்தாற் சொல்லுமிடத்துப், பதினோராமிடத்திற்குடையவன், உச்ச, ஸ்வ க்ஷேத்திர, மித்துரு க்ஷேத்திரங்களில் அல்லது கேந்திரத் திரிகோணங்களில் இருக்கினும் சுபக்கிரகங்கள் பார்க்கினும் இவன் அதிக லாபங்களுடையவன்.

குறிப்பு: ஸ்வ க்ஷேத்திரம் - ஆட்சி வீடு, மித்துரு க்ஷேத்திரம் - நட்பு வீடு, ஜ்யேஷ்டன் - மூத்த சகோதரன்

இதுவுமது

126. எய்திய கரும நாதர்க்
கிலாபத்தோன் வலிமிக் காகிற்
செய்தொழிலிற் கிரட்டி யுண்டாம்
இலாபலா பத்தோ னுக்கு
நொய்துறின் வியத்தா னத்தோன்
வலுசஞ் சிதமாம் இலாபம்
மிய்யும்ஊ தியத்தா லன்னோன்
இலக்கனற் குறவுண் டாகில்.

(இ.ள்) பத்தாமிடத்திற்கு, இலாபாதிபதி நின்ற இராசிக்கு, பத்தாமிடத்ததிபதி வலிதுபெறில் அதிக லாபங்களுடையவனாம். இலாபாதி நின்ற இராசிக்கு, இலாபாதிபதிக்கு வியஸ்தானாதிபதி வலி குன்றில், அதிக லாபம் உண்டாகும். இலாபாதிபதியும் பத்தாமிடத்திற்கதிபதியும் இலக்கனாதிபதியுடன் நட்புடன் இருந்தால், அதிக இலாபம்.

பதினோராம் பாவம் முற்றிற்று

12. பன்னிரண்டாம் பாவம்

அதிக செலவு உடையவன், பாக்கியவான்

127. அழிவுறும் குறிகள் இன்னல்
ஈராறால் அறைய லாகும்
வழிவுநற் கோள்க ளோடு
ஈராறை உடைய வான்கோள்
முழுதுநட் பாட்சி உச்சம்
கேந்திரதிரி கோணம் ஊன்றின்
பழுதிலா செலவுண் டாகும்
பாக்கிய வானு மாவான்.

(இ.ள்) பன்னிரண்டாமிடம், விரயஸ்தானம் என்று பெயராம். ஆகவே, இப்பலன்கள் இந்தப் பாவத்தாற் சொல்லுமிடத்துப் பன்னிரண்டாமிடத்திற்கு உடையவன் சுபக்கிரகங்களுடனே கூடி, நட்பாட்சி உச்சம் பெற்றுக் கேந்திர திரிகோணங்களில் இருக்கில், இவன் அதிக செலவையுடையவனும் பாக்கியவானுமாய் இருப்பன்.

செலவு செய்யும் வழி

128. வியநாதன் வியாழ மாகில்
வலியினின் மிகுந்தால் நன்மை
பயனாகும் தானம் செய்யும்
பகுத்துண்ணும் அன்னம் சொர்ணம்
நயமாகும் புகரோன் நிற்கில்
நாரியார் கூத்திக் கீயும்
இயல்பாவத் தவத்தோர் ஆய்ந்தோர்
இரப்பவர்க் கீயும் புந்தி.

(இ.ள்) பன்னிரெண்டுக் குடையவன், குருவாய் வலிதுபெறில், அன்னதானம், சொர்ணதானம் இவை முதலிய சத்விஷயத்திற் செலவிடுவன். சுக்கிரனாய் வலிதுபெறில் கூத்தி விஷயத்தில் செலவிடுவன். புதனாகி வலிதுபெறில் தவசிகள், விதிவத் ஜனங்கள், யாதுலர் இவர் விஷயத்திற் செலவிடுபவன்.

குறிப்பு: சத்விஷயம் - நல்ல காரியம்
வித்வத் ஜனங்கள் - ஆராய்ச்சி செய்பவர்
யாதுலர் - பொருள் வேண்டுபவர்
கூத்தி - விலைமகள்

இதுவுமது

129. செவ்விய செவ்வாய் அந்த
வியனாத னாகச் சேரில்
எவ்வலி உழவில் ஈயும்
உடன்பிறப் பினத்தோர்க் கீயும்
கவ்வைகொள் காரி யாகி
லோபியாங் கடிந்தோர்க் கீயும்
வெவ்விய வெய்யோ னாகில்
வேதியர் வேந்தர்க் கீயும்.

(இ.ள்) வியஸ்தானாதிபதி, அங்காரகனாய் வலிது பெறில், பயிர் விஷயத்திலும் சகோதராள் விஷயத்திலும் பந்து ஜனங்கள் விஷயத்திலும் செலவிடுவான். சனியாய் வலிதுபெறில், உலோபியாய் அதனைப் போர் விஷயத்தில் செலவிடுவான். சூரியனாய் வலிதுபெறில் பிராமணாள் விஷயத்திலும் இராஜாக்கள் விஷயத்திலும் செலவிடுவான்.

குறிப்பு: உலோபி - கருமி.

பன்னிரண்டாம் பாவம் முற்றிற்று

சாதகக் கணிதாமிர்தம் முற்றிற்று

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

	பாடல் எண்.		பாடல் எண்.
அங்கார கன்மக	45	ஐந்தினில் புதல்வா	35
அதிபன்கா ரகக்கோள்	63	ஐயனட் டம கூ	111
அப்பனும் ஊழி	99	ஒன்பதுக் குடையோன்	105
அழிவுறுங் குறிகள்	127	ஓதிய மூத்தோர்	125
ஆரெனா அறிந்த	93	கண்டதா னத்தில்	32
ஆறினுக் கதிபன்	50	கதிர்மதி உதிப்ப	88
ஆறினை உடைய	64	கதிர்மதி கன்னி	82
ஆறுசத் துருவே	49	கரிய வனொருநா	87
இயல்புறு மரணம்	75	கருமத்தோன் தான்சேய்	115
இரண்டினோன் நீசம்	6	களத்திரத் ததிபன்	61
இரண்டுநேத் திரமே	5	கன்னியில் மதிவெ	83
இரண்டைந்தே ழெட்டில்	65	காரகர் புடத்தில்	96
இரவிசென் மத்தோன்	120.	காரகன் அதிபன்	62
இரவிசேய் ஏழில்	89	காரியும் கதிரோன்	72
இருந்தனத் தானம்	13	கீர்த்திமேம் பாடும்	2
இலக்கனக் கோளை	91	குடும்பத்தா னத்தோன்	15,16
இலக்கனம் உதயம்	1	குருவருள் அறிவு	100
இலக்கனம் தனக்கு	34	குளிகன் செல் ஓரை	92
இவ்வகைத் திரமே	107	சத்திரத் தானக்கோன்	52
இவ்வண்ணம் சொல்ல	124	சந்திரன் நின்ற	39
உடன்பிறப் புதவி	18	சந்திரன் வலியன்	59
உயர்சகோ தரத்தா	20	சந்திர னோடு	85
உரவுபொன் நின்ற	48	சரம்பிதுர்த் தான	106
உறைந்தபத் தொன்றை	119	சரோருகன் பிதுர்த்தா	101
எட்டினான் மரணம்	74	சனிகட கத்தே	81
எட்டினில் வெய்யோன்	80	சிதைவிலாக் கரும	12
எட்டினுக் கதிபன்	77	சுக்கிரன் சலவி	109
எய்திய கர்ம	126	சுகத்தான மேனதி	47
என்றறிந் திந்த	97	சுகத்தினுக கதிபன்	30,31
ஏழிடம் மனைவி	54	சூரியர்க் கெட்டில்	104
ஏழினுக் கதிபன்	67	சூரியன் சுரநோய்	108
ஏழினை உடையோன்	73	சூரியன் பிதுர்த்தா	102
ஏற்றிலக் கினக்கோள்	78	செவ்வாயின் ஆட்சி	53,79

	பாடல் எண்.
செவ்விய செவ்வாய்	129
சென்மத்தா னத்தோன்	3
சேய்சனி நாளில்	84
சொல்லிய வலிய	60
சொன்னலக் கினக்கோள்	90
தனத்தினுக் கதிபன்	9
தாக்கிய பகைநீ	8
தாயினுக் கதிபன்	28,29
தாரத்தா னத்தோன்	56
தாரமும் அவர்க்கு	57
நண்ணிய மதன	69
நாடிய தனத்தா	10
நாலினில் வெய்யோன்	86
நாலினுக் கதிபன்	24
நான்கில்வா கனமே	22
நான்கினுக் கதிபன்	23
நீரினுக் கதிபன்	33
பத்தின்கோள் நாலின்	117
பத்தினால் கருமம்	112
பத்தினுக் குடையோன்	113
பத்தினுக் குடைய	44
பரிதியில் குளிகன்	95
பாக்கிய தான	103
பிணிநாதன் ஆட்சி	51
பிதுர்குரு தர்மம்	98
புத்திரத் தானம்	38
புத்திரர்க் கதிபன்	36,37
புத்திரா திபனும்	42
புந்திகா லாகில்	122

	பாடல் எண்.
புந்தியும் மாதர்	43
பூமிதான் அவர்க்கே	270
பூமிதா னக்கோள்	26
பொன்னவன் தன்னை	40
பொன்னவன் புகர்மால	116
போகத்தா னத்தோன்	58
மகத்தா னத்து	46
மகவுடைத் தானம்	41
மதியின் காலேல்	121
மரணநா யகனை	76
மருவிய மதன	70
மனையவள் அவர்க்கு	55
மனையவள் தான	71
மாந்தியும் சனியும்	94
மிஞ்சிய கரும	118
முகத்தினுக் கதிபன்	16
மூன்றினை உடையோன்	21
மூன்றுடன் பிறப்பு	17
மூன்றுளோர் இரண்டி	19
வசைசொல்ல இருந்து	4
வளவிய கரும	114
வாக்கினுக் கதிபன்	7
வாகனத் தானம்	25
விடத்திரே கானம்	110
வியநாதன் வியாழ	128
விளங்கிய தனத்தா	14
வெவ்விய புகரை	68
வெள்ளியின் காலே	123
வெள்ளியோ டதிப	66

சந்திர காவியம்

பொருளடக்கம்

நூல்	1
காப்பு	1
கிரகங்களின் நன்மை தீமை	85
கேந்திர ஸ்தானமும் கேந்திராதிபதியும்	86
சுபர்கள் பாவிகளாகும் தன்மை	87
கேந்திராதிபதி பலன்கள்	87
இரண்டு, பன்னிரண்டாமிட அதிபதிகளின் தன்மை	88
எட்டாமிடத்து அதிபதியின் தன்மை	89
மாரகஸ்தானம், மாரகாதிபதி	89
பாவர்கள்	90
திசாபுத்தியில் யோகத்தை வழங்குவோர்	92
தர்ம கர்மாதிபதி யோகம்	93
இராசயோகம்	93
யோக சாதகம்	94
இராசயோகம்	94
இராகு, கேது யோகம் தரும் வகை	96
சுபக்கிரகங்களின் யோகபலன்	98
யோகாதிபதிகள்	99
யோகங்களைத் தரும் பிறகோள்கள்	99
மகாதிசை பலன்கள்	100
திரிகோணாதிபர், கேந்திராதிபர் திசைகள்	100
திசாநாதனும் புத்திநாதனும்	101
மாரக திசையில் இராசயோகம்	102
செல்வத்தை வழங்கும் புத்தி	103
தர்ம கர்மாதிபர்களின் திசைகளில் பலன்கள்	103
சுபர் திசைகளின் பலன்	105
இராகு,கேதுக்களின் திசை பலன்	105
பாவக்கிரகங்களின் திசை	105
யோகமும் அவயோகமும் தரும் திசை	106
மாரக ஸ்தானாதிபதி திசை	106

பன்னிரு இலக்கின பலன் 108

    மேட இலக்கின பலன் 108
    இடப இலக்கின பலன் 110
    மிதுன இலக்கின பலன் 111
    கடக இலக்கின பலன் 112
    சிம்ம இலக்கின பலன் 113
    கன்னியா இலக்கின பலன் 114
    துலா இலக்கின பலன் 115
    விருச்சிக இலக்கின பலன் 116
    தனுர் இலக்கின பலன் 117
    மகர இலக்கின பலன் 118
    கும்ப இலக்கின பலன் 120
    மீன இலக்கின பலன் 121

ஆயுள் நிர்ணயம் 122

மரணக் காலம் 124

புத்திர தோசம் 127

கிரகங்களின் உறவுகள் 127

    சூரியன் 127
    சந்திரன் 128
    செவ்வாய் 128
    புதன் 128
    வியாழன் 129
    சுக்கிரன் 129
    சனி 129
    இராகு 130
    கேது 130
    குளிகன் 131

ஆண், பெண் குழந்தைகள் 131

போதகன், வேதகன், பாசகன்,காரகன் 131

சூரிய திசை 132

சந்திர திசை 132

செவ்வாய் திசை 133

புதன் திசை 133

குரு திசை 134

சனிதிசை 134

பொது 135

ஆக்கியோன் பெயர் 135

சந்திர காவியம்

நூல்

காப்பு

சாரமுத மாஞ்சந்த்ர காவியவி யாக்யான
சாரமெனும் சோதிடத்தைத் தான்தெரிந்து - ஏர்பெறவே
செந்தமிழாற் பாடுதற்குச் செந்திவேற் பன்னிருகை
கந்தனுக்கு முன்னவனே காப்பு.

(இ.ள்) சோதிட சாரத்தின் இனிமையான அமுதமாக விளங்கக் கூடிய, சோதிட சந்திர காவிய வியாக்யான சாரம் என்ற வடமொழி நூலைத் தமிழில் மொழிப்பெயர்த்துப் பாடி நிறைவு பெற திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள பன்னிரு கரங்களை உடையவனும் கூரிய வேலினைத் கையில் ஏந்தியவனுமான கந்தவேளுக்கு முன்னவனாகத் தோன்றிய கணபதியே காப்பாயாக.

கிரகங்களின் நன்மை, தீமை

1. அஞ்சொன்ப துக்கதிபர் பாவிசுப ரானாலும்
மிஞ்சுபல னைத்தருவர் மென்மூன்றா - றெஞ்சுபதின்
ஒன்றுக் கதிபதியும் இப்படியே ஒன்றிவரில்
பொன்றசுப மேகொடுப்பார் பூண்டு.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு ஐந்து, ஒன்பதாமிடத்திற்கு அதிபதிகள் பாவக்கிரகங்களாக இருந்தாலும், சுபக்கிரகங்களாக இருந்தாலும், நன்மையான பலன்களையே தருவார்கள். சென்ம

பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரு சந்திர காவிய சுவடிகளிலும் காப்புச் செய்யுள் காணப்படவில்லை. அச்சு நூலொன்றில் காணப்பட்ட காப்புச் செய்யுள் இங்குத் தரப்பட்டுள்ளது.

இலக்கனத்திற்கு மூன்று, ஆறு, பதினோராமிடத்திற்கு அதிபர்கள் பாவக்கிரகங்களாக இருந்தாலும் சுபக்கிரகங் களாக இருந்தாலும் தீமையான பலன்களையே கொடுப்பார்கள்.

குறிப்பு: இயற்கை சுபர்கள் - சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன்.
இயற்கை பாவிகள் - சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது.

கேந்திர ஸ்தானமும், கேந்திராதிபதியும்

2. நீசகேந்தி ராதிபதி நீதிசுப ரானால்
அசுபபல மேகொடுப்ப ரல்லால் - இசைகேந்
திரபதிகள் பாவிகளாய்ச்சேரிலதி சுபங்கள்
பாவி இடங்கொடுப்பர் பார்.

(இ.ள்) ஒரு சாதகத்தில் சென்ம இலக்கனம், சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றிற்குக் கேந்திர ஸ்தானங்கள் என்று பெயர். இந்த நான்கு இடங்களுக்கும் அதிபதிகள் கேந்திராதிபதிகளாவர். இந்தக் கேந்திராதிபதிகள் சுபக்கிரகங்களாக இருந்தால் தீமையான பலன்களைக் கொடுப்பார்கள். இவர்கள் பாவக் கிரகங்களாக இருந்தால் நல்ல பலனைக் கொடுப்பார்கள்.

குறிப்பு: கிரகங்களின் சொந்த வீடுகள் : சூரியனுக்குச் சிம்மம்;
சந்திரனுக்கு - கடகம்,
செவ்வாய்க்கு - மேடம், விருட்சிகம்;
புதனுக்கு - மிதுனம், கன்னி
குருவுக்கு - தனுசு, மீனம்
சுக்கிரனுக்கு - இடபம், துலாம்
சனிக்கு - மகரம், கும்பம்

இராகு, கேதுக்களுக்குச் சொந்த வீடுகள் இல்லை. எந்த வீட்டில் இருக்கிறார்களோ அந்த வீட்டிற்கு அதிபதி தரக்கூடிய பலன்களையும் அவர்களுடன் கூடியிருக்கின்றவர் களில் வலிமை மிக்கவர்கள் தரக்கூடிய பலன்களையும் கொடுப்பார்கள்.

சுபர்கள் பாவிகளாகும் தன்மை

3. பாரதனிற் சுக்கிரனும் பண்டேவர் தங்குருவும்
மாரககேந் ராதிபதி யானாக்காற் - றேர்மிகவும்
பாவியர் பின்னும் பகர்புந்தி பாவியராற்
றேய்மதியும் பாவியாம் தேர்.

(இ.ள்) இலக்கனாதிபதி, நான்காமிடத்திற்கு அதிபதி, ஏழாமிடத்திற்கு அதிபதி, பத்தாமிடத்திற்கு அதிபதி இவர்களில் இயற்கை சுபர்களான சுக்கிரனும் குருவும் முழுமையான பாவிகளாவர். அதனையடுத்த நிலையில் புதனும் அதனையடுத்துத் தேய்பிறைச் சந்திரன் வலிமை குறைந்த பாவி என்பதைத் தேரிந்து கொள்ள வேண்டும்.

கேந்திராதிபதி பலன்கள்

4. தேறுமது பாவிகளிற் சேய்கேந்தி ராதிபனாய்
ஆறி லவனேக அல்லாமல் - வீறுசனி
நல்லன் அதைவிட்டால் நன்கிரவி தானாம்சேய்
வல்கோ ணேசனெனின் மாண்பு.

(இ.ள்) கேந்திர ஸ்தானாதிபதிகள், பாவக்கிரகங்களாக இருந்தால் நல்ல பலன்களைத் தருவார்கள். கேந்திராதிபதிகளில் இயற்கை பாவியான செவ்வாய் முழுமையான சுபராவார். அதனையடுத்த நிலையில் சனியும், அதனையடுத்துச் சூரியனும் வலிமை குறைந்த சுபர்கள் என்பதை அறியலாம். கேந்திராதிபத்தியத்துடன் செவ்வாய் கோணாதிபத்தியமும் பெற்றிருந்தால், அச்செவ்வாயினால் சாதகன் மிகுதியான நல்ல பலன்களை அடைவான்.

இரண்டு பன்னிரண்டாமிட அதிபதிகளின் தன்மை

5. ஏறு மிரண்டுபனி இரண்டாம் இடத்ததிபன்
கூறும் சுபருடனே கூடிநிற்கில் - வீறுநல்லன்
பாவியுட னேகூடிப் பாவித்தா னத்திருந்து
மேவியிடிற் பாவனாம் விள்.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடம், பனிரெண்டாம் இடத்திற்கு அதிபதிகள் பாவக் கிரகங்களாக இருந்தாலும், சுபக்கிரகங்களுடன் கூடி இருந்தால், சாதகன் பற்பல நன்மைகளை அடைவான். இரண்டாமிட, பன்னிரண்டாமிடத்து அதிபதிகள் சுபக்கிரகங்களாக இருந்து பாவக் கிரகங்களுடன் கூடினாலும், பாவக்கிரகங்களின் வீடுகளில் இருந்தாலும் இச்சாதகன் மிகுந்த தீமையைஅடைவான்.

எட்டாமிடத்து அதிபதியின் தன்மை

6. எட்டுக்கதிபதியும் பாக்கியத்துக் கேவகையாய்த்
தொட்ட வியாதிபனாய்த் தோன்றுமந்த - அட்டமத்துக்
காதிபதி பொல்லா தவனிலக்கி னாதிபனாய்
ஓதிலவ னேகநல்ல னோங்கு.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு எட்டாமிடமானது பிதுர், பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திற்கு விரயஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடமாகையால் அந்த எட்டாமிடத்திற்குடையவன் பாவியாம். அப்பாவியானவன் இலக்கனாதிபதியாக இருப்பானானால், அவனுக்கு ஒப்பாகிய சுபக் கிரகங்கள் ஒருவரும் இல்லாத காரணத்தால், அச்சாதகனுக்கு மிகுந்த நன்மையான பலன்களைக் கொடுப்பான் என்று கூறுவாயாக.

இதுவுமது

7. ஓங்குமட்ட மாதிபதி ஓர்தோடம் சூரியர்க்கும்
ஓங்கு மதிதனக்கும் இல்லையே - பாங்கல்லால்
வேறு மொருமதத்தில் வீழ்ந்தோடம் கொஞ்சமாய்த்
தேறியிடச் சொல்வதெனத் தேர்.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு எட்டாம் ஆதிபத்தியமான தோஷம் என்பது, உலகெங்கும் ஒளிவீசும் சூரியருக்கும் சந்திரருக்கும் இல்லை. சில சோதிட நூல்களில் அட்டம ஸ்தானத்தில் இருக்கும் சூரியருக்கும் சந்திரருக்கும் சிறிது தோடங்கள் உண்டு என்று சொல்கிறார்கள். இதனை ஆராய்ந்து பலன் கூற வேண்டும்.

மாரக ஸ்தானம், மாரகாதிபதி

8. இலக்கனத்துக் காமிரண்டேழ் மாரகமாம் என்று
மலைக்குமிரண் டான்கொல் லானல்லா - இலக்கனத்துத்
தோன்றுமந்த பாவிகனான் காமவருட் சொல்லுகின்ற
மூன்றெட்டு மாரகமாய் மூட்டு.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடம், ஏழாமிடத்திற்கு அதிபதிகள், அச்சாதகனுக்கு மாரகாதிபதிகள். அவ்விரண்டு ஸ்தானங்களும் மாரக ஸ்தானங்கள் என்று அழைக்கப்படும். மாரக ஸ்தானாதிபதியாக இருப்பினும் இரண்டாம் இடத்திற்கதிபதி மாரகத்துக்குச் சமமான கண்டத்தைக் கொடுத்தாலும் கொல்ல மாட்டான். மூன்று, ஆறு, எட்டு, பதினொன்றாமிடம் ஆகிய நான்கு இடங்களில் மூன்றாமிடத்திற்கதிபதியும், எட்டாமிடத்திற்கதிபதியும் மாரகத்தைச் செய்வார்கள்.

இதுவுமது

9. மாரகத்தா னந்தன்னில் வந்தோர்சம் பந்தமுள
பேருந்தான் மாரகனாய பேசியிடில் - சீரரசர்
யோகம் பிறந்தவருக் கோர்மாறாப் புத்திதிசை
யாகவரும் யோகங்க ளாம்.

(இ.ள்) மாரக ஸ்தானங்களாகிய மூன்றாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம் ஆகிய மூன்று இடங்கள், இம்மூன்று இடங்களில் இருந்தவர்கள், அவர்களுடன் கூடியவர்கள், அவர்களால் பார்க்கப்பட்டவர்கள் ஆகியோர் மாரகத்தைத் தருவார்கள். இராசயோகத்தை யுடைய சாதகனுக்கு மாரகதிசை நடக்கும்பொழுது, திசை முழுதும், யோகத்தைதத் தராவிடினும், அத்திசையில் வரும் யோகாதிபர்களின் புத்தி அந்தரங்களில் இராசயோகத்தைக் கொடுப்பார்கள்.

இதுவுமது

10. மாரகத்தோ டனுக்கு வன்குருவும் சுக்கிரனும்
மாரகனே யானால் வலுதோடம் - பாரதனை
விட்டாற் புதனிந் திரவிசனி மேற்செவ்வாய்க்
கட்டாம் பிலநிறையாய்க் கான்.

(இ.ள்) குரு, சுக்கிரன் இருவரும் மாரக ஸ்தானாதிபதிகளாக இருப்பின், தவறாமல் கொல்லக் கூடியவர்களாக விளங்குவர். அவ்விருவரைக் காட்டிலும் புதன் பலம் குறைந்தவன்; புதனைக் காட்டிலும் சந்திரன் பலம் குறைந்தவன்; சந்திரனைக் காட்டிலும் சூரியன் பலம் குறைந்தவன்; சூரியனைக் காட்டிலும் செவ்வாய் பலம் குறைந்தவன் என்பதைக் காண்பாயாக.

இதுவுமது

11. உற்றஇ ராகுகேது தானோர்மா ரகத்தானம்
பற்றியிருக் கின்றாலும் பார்த்தாலும் வெற்றியுற
மாரகர் தன்னுடனே கூடினும் மாரகர்போல்
ஆர வதைத்திடுவர் அன்று.

(இ.ள்) மாரக ஸ்தானங்களாகிய மூன்றாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம் ஆகியவற்றில் இராகு, கேது ஆகிய கிரகங்களில் ஒரு கிரகம் இருந்தாலும் அல்லது மாரக ஸ்தானாதிபதிகளான மூன்றாமிடத்திற்கதிபதி, ஏழாமிடத்திற்கதிபதி, எட்டாமிடத்திற்கு அதிபதி, ஆகியோருடன் சேர்ந்திருந்தாலும் மாரகர்களைப் போல, அவர்தம் திசா புத்தி, அந்தர காலங்களில் மரணத்தைத் தருவார்கள்.

பாவர்கள்

12. பன்னொன்று மூன்றெட் டாதி பதியமிசை
தன்னுடைய சம்பந்தம் சார்ந்தவரும் - வன்பாவி
சம்பந்தர் கூடுவதும் பார்க்கிறதும் தானதுவாம்
இம்மகிமை கண்டே இயம்பு.

(இ.ள்) இயற்கைப் பாவிகள் என்று சொல்லப்பட்ட மூன்று, எட்டு, பதினொன்றாமிடத்து அதிபதிகளுடன் சேர்ந்திருந்தவர்களும் அல்லது அந்த அதிபதிகளால் பார்க்கப்பட்டவர்களும், சுபர்களாக இருந்தாலும் பாவர்களாம். இவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலும் பாவர்களாம்.

குறிப்பு: கிரகங்களின் பார்வைகள்;

சூரியனுக்கு ஏழாம் பார்வை;
சந்திரனுக்கு ஏழாம் பார்வை;
செவ்வாய்க்கு நான்கு, ஏழு, எட்டாம் பார்வைகள்;
புதனுக்கு ஏழாம் பார்வை;
குருவிற்கு ஐந்து, ஏழு, ஒன்பதாம் பார்வைகள்;
சுக்கிரனுக்கு ஏழாம் பார்வை;
சனிக்கு மூன்று, ஏழு, பத்தாம் பார்வைகள்.

இதுவுமது

13. பலகேந்த்ர கோண நாதருக்குப் பேத
சொலும்பாவி சம்பந்த தோடம் - இளமயிலே !
அன்னியகண் டங்கோணத் தாதிபருக் குண்டாகும்
இன்னதனைப் பார்த்தறிவா யென்று.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாமிடம், பத்தாமிடம் ஆகிய இரு இடங்களின் அதிபர்களைப் பாவர்கள் பார்த்தாலும் சேர்ந்தாலும் பாவர்களாக மாட்டார்கள். ஆனால் சென்ம இலக்கனம் நான்காமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம் ஆகிய இடங்களின் அதிபர்களோடு சுபர்கள் சேர்ந்தாலும் அல்லது அந்த அதிபர்களைச் சுபர்கள் பார்த்தாலும் பாவர்களாவர்.

குறிப்பு: கிரகங்களின் பார்வையால் ஸ்தான அதிபர்களுக்குச் சம்பந்தப்பட்ட தோடங்கள் கேந்திரங்களில் உயர்வாகிய பத்தாமிடம், திரிகோணங்களில் உயர்வாகிய ஒன்பதாமிடம் ஆகிய இடங்களுக்கு இல்லை. கேந்திர ஸ்தானங்கள் என்பவை சென்ம இலக்கனம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவை.

திரிகோண ஸ்தானங்கள் என்பவை சென்ம இலக்கனம், ஐந்தாமிடம் ஒன்பதாமிடம் ஆகியவை.

திசாபுத்தியில் யோகத்தை வழங்குவோர்

14. சாடுந்திரி கோணத் ததிபதிகள் தன்னுடனே
நாடுகண்ட மாதிபர்கள் நற்கோளாய்க் - கூடியிடின்
மெத்தப் பலன்தருவர் மேலவர்கள் தன்திசையில்
வெற்றியோ கங்கொடுப்பார் விள்.

(இ.ள்) சென்ம இலக்கனம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் இவற்றிற்கு அதிபதிகள் பாவர்களாக இருந்து கேந்திராதிபத்திய தோடத்தை அடையாமல் இருக்கும் கிரகங்களும், திரிகோணங் களுக்கு அதிபதிகளாகிய சென்ம இலக்கனம்,

ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்திற்கு அதிபதிகளும் ஒரு இராசியில் சேர்ந்திருப்பின், அவர்கள் அச்சாதகனுக்கு நல்ல பலன்களைத் தருவதோடு, அந்தக் கிரகங்களின் திசாபுத்திகளில் யோகத்தை வழங்குவார்கள் என்பதைக் கூறுவாயாக.

தர்மகர்மாதிபதி யோகம்

15. கேந்திரத்திற் பத்தாங் கிளர்திரிகோ ணத்தொன்பான்
ஆய்ந்தபல மாம்பெயர்கள் அந்ததிபர் - சேர்ந்திருக்கப்
பார்க்கவொரு வர்க்கொருவர் பார்யோகக் காரகராம்
ஆர்க்கும் அரிதாம் அறி.

(இ.ள்) கேந்திர ஸ்தானங்களாகிய சென்ம இலக்கனம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றுள் உயர்ந்ததாகிய பத்தாமிடத்திற்கு அதிபதியும் திரிகோண ஸ்தானங்களாகிய சென்ம இலக்கனம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவற்றுள் உயர்ந்ததாகிய ஒன்பதாமிடத்திற்கு உடையவனும் தர்ம கர்மாதிபதிகள். ஆகையால் இவர்களிருவரும் கூடியிருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டாலும் மிகவும் உயர்வான யோக பலன்களைக் கொடுப்பார்கள்.

இராசயோகம்

16. ஒன்பதுபத் தல்லால் உறுதிரிகோ ணங்கண்ட
மன்னியோ கப்பெயராம் அந்ததிபன் - அன்பாக
ஒன்றுக்கொன் றாய்மருவிச் சம்மந்தம் உண்டாகில்
நன்ரசர் யோகமாம் நம்பு.

(இ.ள்) ஒன்பதாமிடம், பத்தாம் இடம் ஆகிய இடங்களைத் தவிர மற்ற கேந்திர திரிகோணங்களாகிய சென்ம இலக்கனம், நாலாமிடம், ஐந்தாமிடம்,

ஏழாமிடம் ஆகியவற்றிற்கு அதிபதிகள் ஒருவருக் கொருவர் சேர்ந்திருப்பார்களேயானால், இச்சாதகன் இராசயோகத்தை உடையவனாக விளங்குவான்.

யோக சாதகம்

17. பத்துக் கதிபதிதன் பாக்கியத்தி லேயிருக்க
வைத்தாம னீரைந்தில் வாய்த்திருக்கச் - சத்தோ
டவர்கள் வீட்டில் அமர்ந்திருக்க யோகம்
உவமாக மேவருமாம் ஓது.

(இ-ள்) கேந்திராதிபதிகளில் உயர்ந்த பத்தாம் இடத்திற்கதிபதியும் திரிகோணங்களில் உயர்ந்த ஒன்பதாமிடத்திற்கு அதிபதியும் அவரவர்களுடைய ஆட்சி வீட்டில் வலிமையோடு இருக்க, சாதகனின் விருப்பப்படி அனைத்து யோகங்களும் கிடைக்கும்.

இராசயோகம்

18. ஒன்பதுபத் துக்குடையார் எட்டுப்பன் னொன்றதிபர்
இன்பயோ கங்களிலை என்றிடினும் - பின்னர்திரி
கோணேசர் சம்மந்தம் கூடிலும்யோ கங்களுண்டாம்
மாணேறு யோகமுடை யார்க்கு.

(இ-ள்) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாமிடம், பத்தாமிடம் இவற்றுக்கு அதிபதிகள், எட்டாமிடம், பதினோராமிடம் ஆகிய இடங்களுக்கும் அதிபர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் சிறப்பாக யோகத்தைக் கொடுக்க மாட்டார்கள். ஆனால் திரிகோணாதிபதியான ஐந்தாமிடத்திற்கு அதிபதி கூடியிருந்தால் ஆண் சிங்கத்தைப் போன்று சாதகன் இராசயோகத்தைப் பெறுவான்.

இதுவுமது

19. விண்டபத்துக் காதிபர்க்கு விள்கோணத் தோரிலொன்று
தண்டியிருஞ் சம்மந்தந் தானிருக்கில் - வண்டமிழோர்
சொன்னபத்துக் காதிபதி சொல்யோகக் காரகனாம்
மன்னரிகம் தான்கொடுப்பான் வந்து.

(இ.ள்) பத்தாமிடத்திற்கு அதிபதியுடன் திரிகோணத்ததிபதிகளான இலக்கனாதிபதி, ஐந்தாம் இடத்திற்கதிபதி, ஒன்பதாமிடத்திற்கு அதிபதி ஆகியோருடன் சேர்ந்திருக்கில், பத்தாமிடத்ததிபதி சிறந்த இராச யோகத்தைக் கொடுக்கக் கூடியவனாகி அவனுடைய திசாபுத்தி வரும் காலங்களில் மிகுந்த யோகங்களைக் கொடுப்பான்.

இதுவுமது

20. நன்கேது இராகுவுந்தான் நற்கோளைக் கூடிகினும்
பன்சுபர்கள் நோக்குத்தான் பட்டாலும் - மன்புடைய
நன்றானம் ஏகுகினும் நல்லபல னேகொடுப்பான்
சொற்றியகோள் தங்களுக்குச் சொல்.

(இ.ள்) இராகு, கேது ஆகிய கிரகங்கள் கேந்திராதிபத்திய தோஷம் பெறாத கேந்திராதி பதிகளுடனும், திரிகோணாதிபதிகளுடனும் சேர்ந்திருப் பார்களேயானால் அவர்கள் மிகுந்த இராசயோகப் பலன்களைக் கொடுப்பார்கள்.

இதுவுமது

21. கொடிஇராகு கேந்திரங்கள் கீறுதிரி கோணக்
குடிநாதர் நற்கோளைக் கூடித் - திடனாகக்
கேந்திரத்தி னிற்சுபர்கள் நோக்கக் கிளர்யோகம்
சேர்ந்திருக்கச் செய்வான் தினம்.

(இ.ள்) சென்ம இலக்கினாதிபதி, நான்காம் இடத்திற்கதிபதி ஏழாமிடத்திற்கதிபதி, பத்தாமிடத்திற்கு அதிபதிகளாகிய கேந்திராதிபதிகளுடனும் திரிகோண அதிபதிகளான, ஐந்தாமிடத்திற்கு அதிபதி, ஒன்பதாமிடத்துக்கு அதிபதி ஆகியோருடன் இராகு அல்லது கேது ஒன்று கூடி, கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் அல்லது சுபக்கிரகங்களாற் பார்க்கப் பட்டாலும் இவ்விருவரும் தத்தம் திசைகளில் இராச யோகத்தைக் கொடுப்பார்கள்.

இராகு, கேது யோகம் தரும் வகை

22. செல்திரிகோ ணாதிபருஞ் சேர்ந்தகண்டத் தாதிபரும்
கொல்கேது இராகு வுடன்கூடில் - வல்பிலமாய்க்
கூடின் வரும்பாம்பும் கொள்யோகக் காரகராம்
நாடியிதைச் சொல்வாய் நயந்து.

(இ.ள்) கேந்திராதிபத்திய தோஷம் இல்லாத கேந்திராதிபரும் திரிகோணங்களின் அதிபதிகளும் மாரகத் தன்மையுடைய இராகு அல்லது கேதுவுடன் கூடி இருக்கில், அச்சாதகனுக்கு இவ்விரு கோள்களும் அதிகமாக யோகத்தைக் கொடுப்பார்கள் என்பதை நயந்து கூறுவாயாக.

இதுவுமது

23. மீறுமிரு பாம்பிருந்த வீட்டுக் கதிபதிதான்
ஏறுஇரா சிக்குடையோ னேராகி - யூறாய்க்
கலந்தகோ ளின்பயனைக் கண்டளிப்பர் காரக்
குலமரவு தம்மரவாம் கூறு.

(இ.ள்) சொல்லுக்குள் அடங்காத சிறப்பினை யுடைய இராகு, கேதுக்களுக்குச் சொந்த வீடுகள் இல்லாததால், அவர்கள் எந்த வீட்டில் நிற்கின்றார்களோ அந்த வீட்டின் அதிபதிகள், எந்தக் கிரகங்களுடன் நிற்கின்றார்களோ அந்தக் கிரகங்களுள் வலிமை பெற்றுள்ள கிரகத்திற்கேற்ப பலனை வழங்குவார்கள். இராகு கேதுக்கள் எந்த வீட்டில் போயிருக்கிறார்களோ, அந்த வீட்டிற்கு அதிபதி எந்த வீட்டில் எந்தக் கிரகங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளானோ அக்கிரகங் களில் பலம் பெற்றிருக்கக்கூடிய கிரகங்கள் தரக்கூடிய பலனை வழங்குவார்கள்.

குறிப்பு: கிரகங்களின் வலிமை : கிரகங்களில் ஒருவருக்கொருவர் அதிக வலியுடையவர்களாக உள்ளனர். புதனைக் காட்டிலும் செவ்வாய் வலியன். செவ்வாயைக் காட்டிலும் சனி வலியன், சனியைக் காட்டிலும் குரு வலியன்; குருவைக் காட்டிலும் சுக்கிரன் வலியன்; சுக்கிரனைக் காட்டிலும் சந்திரன் வலியன்; இராகுவைக் காட்டிலும் கேது வலிமையானவன்.

இதுவுமது

24. கூறும் அரவுடனே எத்தனைகோள் கூடிகினும்
மீறுபல வான்பலனை விண்டளிப்பார் - வேறுமற்றப்
பேர்பலனைத் தாரார்கள் பேதைநீ யாராய்ந்து
பாரிதனைச் சொல்வாய் பகுத்து.

(இ.ள்) பேதமையைக் கொண்ட பெண்ணே ! இராகு மற்றும் கேதுவுடன் எத்தனை கிரகங்கள் சேர்ந்து இருந்தாலும், அக்கிரகங்களில் வலிமை மிக்கவர்களின் பலன்களை மட்டுமே தருவர். பலவீனமான கிரகங்களுக்குள்ள பலன்களைக் கொடுக்க மாட்டார்கள்.

இதுவுமது

25. கண்டத்திற் பாம்புமுதற் றீயோர் கலந்திருக்கிற்
றண்டகோணத்ததிபர் சம்மந்தம் - உண்டெனினும்
கோணத்தி ருக்கிற்கண் டத்ததிபர் சம்மந்தம்
பூணயோ கங்களுண்டாம் பொறப்பு.

(இ.ள்) கேந்திர ஸ்தானங்களாகிய சென்ம இலக்கனம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றில் இராகு அல்லது கேது இருக்க, அவர்களுடன் ஐந்தாமிடம், ஒன்பதாமிடங்களாகிய திரிகோண ஸ்தானங்களின் அதிபர்களில் ஒருவர் சேர்ந்து இருக்க, நல்ல பலன்களைக் கொடுப்பார்கள். திரிகோண

ஸ்தானங்களில் இராகு அல்லது கேது இருக்க, மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோரா மிடம் ஆகிய இடத்து அதிபர்களால் பார்க்கப் படினும் அல்லது அவர்களோடு கூடி இருப்பினும் அல்லது அவ்விடங்களோடு சம்பந்தம் பெற்று இருப்பினும் நல்ல பலன்களைக் கொடுப்பார்கள். திரிகோண ஸ்தானங்களில் இராகு அல்லது கேது இருக்க, அவர்களுடன் கேந்திராதி பதி களில் ஒருவர் சேர்ந்திருக்க, அச்சாதகனுக்கு நல்ல யோகங்கள் கிடைக்கும்.

சுபக்கிரகங்களின் யோகபலன்

26. கேந்திரகோ ணங்களதிற் கேடில்லாக் கோள்கூடி
பார்த்திருக்கில் அன்னியகோ ணத்ததிபர் - போந்தமலர்க்
கண்ணாலே பார்த்திடினுங் கூடக் கலந்திடினும்
நண்ணுமன்னோர் யோகநல்கு நாடு.

(இ-ள்) கேந்திர, திரிகோண ஸ்தானங்களாகிய சென்ம இலக்கனம், நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்தாம் இடங்களில் சுபக்கோள்கள் இருந்தாலும், அல்லது அந்த இடங்களைப் பார்த்து இருந்தாலும் அல்லது கேந்திராதிபதிகள், திரிகோணாதிபதிகள் சுபக்கிரகங்களோடு கூடி இருந்தாலும், அல்லது சுபக்கோள்களைப் பார்த்து இருந்தாலும் திசாபுத்தி காலங்களில் யோகமான பலன்களைக் கொடுப்பார்கள்.

குறிப்பு: மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராம் இடத்திற் நில்லாமலும் அந்த ஸ்தானாதிபதிகளோடு கூடாமலும், அவர்களால் பார்க்கப்படாமலும் இருக்க வேண்டும்.

யோகாதிபதிகள்

27. தாங்குகண்டங் கோணத் ததிபதிகள் சம்மந்தம்
நீங்கிமூன் றாறெட்டு நேர்பதினொன் - றாங்கதிபர்
காரகசம் மந்தந்தான் சாரில்யோ கத்தினுக்குக்
காரமாம் என்றே கருது.

(இ.ள்) கண்ட கோணாதிபதிகளாகிய, ஜென்ம இலக்கனம், நான்காமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம், ஒன்பதாமிடம், பத்தாமிடம் இவற்றின் அதிபதிகளுடன் மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடம் ஆகிய இடங்களுக்கு அதிபதிகள் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும் தீய இடங்களுக்கு அதிபதிகளானவர்களாக இருந்தாலும் அதிக யோக பலன்களைத் தருவார்கள்.

யோகங்களைத் தரும் பிற கோள்கள்

28. நன்யோகக் காரகர்கள் அன்றிமற்றோர் நற்றிசையின்
மன்யோ கமுமுண்டாம் வந்திடினும் - பன்யோகக்
காரகரே யாகிற் கனபலனீ வார்மற்றோர்
ஆரநிறை யக்கொடுப்பர் ஆய்ந்து.

(இ.ள்)யோகங்களைத் தரவல்ல நல்ல யோகக்காரர் களைத் தவிர, மற்ற ஸ்தானங்களுக்கு உரியவர்களும் யோகங்களைக் கொடுப்பார்கள். ஆனால் யோகக்காரர் களைப்போல சிறந்த யோகங்களைக் கொடுக்காமல், அந்தந்த ஸ்தானங்களுக்கு ஏற்றபடி யோகங்களை ஆராய்ந்து கொடுப்பார்கள்.

மகாதிசை பலன்கள்

29. இரவிமுதல் ஒன்பதுகோள் ஓர்க்கும் திசையிற்
சருவுமவர் புத்தியினிற் றாரார் - மருவுபலன்
வேறொருவர் புத்தி அனுசரித்து விள்பலன்கள்
கூறுகூ றாய்க்கொடுப்பார் கூறு.

(இ.ள்) சூரியதிசை தொடங்கி நடக்கும் ஒன்பது திசைகளில், திசாநாதர்கள் தங்கள் சுயபுத்தியில் தரவேண்டிய நல்ல பலன்களையோ தீய பலன்களையோ தரமாட்டார்கள். அடுத்தடுத்து வருகின்ற புத்திநாதர்களின் ஸ்தான பலன்களைக் கொண்டு, அவரவர்களின் புத்தி, அந்தர காலங்களில்

பிரித்துப் பிரித்து நல்ல பலன்களையோ தீய பலன்களையோ தருவார்கள் என்று கூறுவாயாக.

திரிகோணாதிபர், கேந்திராதிபர் திசைகள்

30. கேந்திரத்துக் காதிபதி கேட்கிலுந் தன்திசையிற்
போந்ததிரி கோணேசர் புத்தியினிற் - சேர்ந்தபலன்
தந்திடுவர் கோணேசர் தன்திசையில் கேந்த்ரேசன்
சொந்தபுத்தி யிற்கொடுப்பார் சொல்.

(இ.ள்) கேந்திராதிபத்திய தோஷம் இல்லாத கேந்திராதிபதிகளின் திசைகளில், திரிகோண ஸ்தானாதிபதிகளின் புத்தியிலும், திரிகோணாதிபதி திசைகளில் கேந்திராதிபதிகளின் புத்தியிலும் அதிக யோகமாகிய சுபபலனைக் கொடுப்பார்கள்.

குறிப்பு: மூன்று, ஆறு, எட்டு, பதினோராம் இடத்து அதிபதிகளுடன் கூடாமலும் அவர்களுடைய நோக்கு இல்லாமலும் அவ்விடங்களோடு சம்மந்தம் இல்லாமலும் இருக்க வேண்டும்.

இதுவுமது

31. சொல்லு மிருவோர்க்குந் தோடமுண்டாய்க் கேந்திரேசன்
புல்லியிடும் சம்மந்தம் பொய்த்திடினும் - நல்லதுதான்
பூண்ட திசையதனிற் கேந்த்ரேசன் புத்தியினில்
நீண்ட சுபமளிப்பார் நின்று.

(இ.ள்) கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கேந்திராதிபதிகளும், பாவதோஷங்களைப் பெற்ற திரிகோணாதிபதிகளும் ஒருவருக்கொருவர் தொடர்பின்றி விலகியிருப்பார்களேயானால், மிகுந்த நன்மையைத் தரக்கூடியவர்களாக விளங்குவார்கள். இவர்களில் திரிகோணாதிபதிகளின் திசைகளில் கேந்திராதிபதிகளின் புத்திகளில் மிகவும் நன்மையான பலன்களைக் கொடுப்பார்கள்.

இதுவுமது

32. ஏற்றதிசை யிற்பலன்கள் எப்போ தருள்வரெனில்
ஆற்ற லவர்க்குமூன் றாறெட்டுத் - தோற்றுபதி
னொன்றுக் குடையரல்லால் ஒத்தசமா னக்கிரக
நன்றுபுத்தி யிற்கொடுப்பார் நல்கு.

(இ.ள்) ஒரு சாதகனுக்கு ஏற்ற திசைகளில் சென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடங்களுக்கு அதிபதிகளை யன்றி, பாவ, தோஷமடையாத மற்ற சுபக்கிரகங்களின், புத்தி, அந்தர காலங்களில் நல்ல பலன்கள் கிடைக்கும்.

திசாநாதனும் புத்திநாதனும்

33. ஏற்றதிசை நாதனுக்கும் ஏந்துபுத்தி காரனுக்குத்
தோற்றமூன் றாறெட்டுத் தொல்பதினொன் - றாற்றதிபர்
சம்மந்த மில்லையெனிற் றாமிருவோ ரும்பலன்கள்
செம்ம னளிப்பார் சிறந்து.

(இ.ள்) ஒரு சாதகனுக்கு நடந்து கொண்டிருக்கும் திசாநாதனும் புத்திநாதனும், சென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடம் இடங்களுக்கு அதிபதிகளுடன் சம்பந்தப்படாமலும் அல்லது அந்த ஸ்தானங்களுக்கு அதிபதிகளாக இல்லாமல் இருப்பார்களேயானால், அந்தத் திசைநாதனும் புத்திநாதனும் சிறப்பான பலன்களை வழங்குவார்கள்.

இதுவுமது

34. தாணுவனும் மாயோக காரகாள் சம்மந்தத்
தோணுமூன் றாறெட்டுத் தொல்பதினொன் - றாணதிபர்
வன்திசையுள் வெற்றியுள மாயோகக் காரகாள்
தன்புசிப்பில் யோகம் தரும்.

(இ.ள்) வெற்றியைத் தரத்தக்க யோககாரர் களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற்கு அதிபதி களுடன் மூன்றாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம், பதினோராமிடத்து அதிபதிகள் சம்பந்தப்பட்டிருப் பார்களேயானால் இவர்களில் வலிமை பெற்றவர்களின் திசைகளில், ஒன்பதாமிடம், பத்தாமிடத்ததிபதிகள் புத்திகளில் சில சிறப்புமிக்க யோகங்களைக் கொடுப்பார்கள்.

மாரகதிசையில் இராசயோகம்

35. சீரரசர் யோகமது சேர்ந்துவருங் காலங்கண்
மாரகாள் தன்திசையில் வந்தெய்தும் - பாரதனுள்
பாவபுத்தி யின்மிகுதி பாக்கியமும் கீர்த்திகளும்
மேவுமற்ற புத்திசமன் மெய்.

(இ.ள்)சிறப்பு பொருந்திய இராச யோகங்கள் சாதகனது மாரக திசைகளில் வந்து சேரும் என்றாலும் அத்திசைகளில் மூன்று, ஆறு, எட்டு, பதினோராமிடங்களின் அதிபர் புத்திகளிலும் அந்தரங் களிலும் மிகுந்த பாக்கியங்களையும் புகழையும் கொடுப்பார்கள். அந்தத் திசையின் பாவிகளும் நன்மையையே கொடுப்பார்கள். அதுவன்றி, மற்றவர் களுடைய புத்திகளிலும் அந்தரங்களிலும் நல்ல பலன் களையும் தீய பலன்களையும் சமமாகக் கலந்தே கொடுப்பார்கள்.

செல்வத்தை வழங்கும் புத்தி

36. சாற்றும் பவர்சுபங்க டந்தார் சுபர்திசையிற்
போற்றுசுப புத்திவரிற் பொங்குசெல்வந் - தோற்றிவிடும்
என்பதற்குச் சந்தேகம் இல்லை இளமுலைமேற்
பொன்புனையும் மாதே புகல்.

(இ.ள்) இளமைமிக்க கொங்கைகளின் மீது பொன்னாபரணங்களைப் பூண்டுள்ள பெண்ணே ! யோகக்காரர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றிற்கு அதிபதிகளோடு சம்பந்தப்பட்ட பாவர்கள் சுபபலன்களைக் கொடுப்பார்களேயானால், அனைவரும் போற்றும் சுபக்கிரகங்களின் திசையில், சுபக்கிரகங்களின் புத்தியில் மிகுந்த செல்வத்தைக் கொடுப்பார்கள்.

தர்ம, கர்மாதிபர்களின் திசைகளில் பலன்கள்

37. மன்யோக காரகா ளாந்திசையில் வந்திடுமேற்
பன்புத்தி காரனுக்குப் பாவமுறிற் - தன்றோடம்
இல்லையந்தப் பாவிபுத்தி யில்யோகம் மெத்தவுண்டாம்
சொல்லும்பின் யோகங்கள் உண்டு.

(இ.ள்) இராச யோகக்காரர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடம் ஆகிய இடங்களின் அதிபதிகளின் திசைகளில் பாவ ஸ்தானங்களில் இருந்தவர்களுடைய புத்தியும், பாவக் கிரகங்களுடைய புத்தியும், பாவக் கிரகங்களுடன் சம்பந்தப்பட்டவர் களின் புத்தியும், வருமாகில், அவர்களில் பாவாதிபத்திய தோடம் நீங்கப்பெற்றவர்களும் யோகாதிபதிகளுக்குச் சமமான யோக பலன்களைத் தருவார்கள்.

இதுவுமது

38. தூண்டுவர் சம்பந்தம் தோன்றுநற்கோ ளில்யோகம்
பூண்டளிப்பன் சம்மந்தம் பூணத் - தீண்டுநற்கோள்
புத்தியுந்தான் முன்போற் பொருந்துஞ் சமபலனை
மெத்தத் தருவார் விரைந்து.

(இ.ள்) இராச யோகக்காரர்களாகிய ஒன்பதாம் இடம், பத்தாமிடத்து அதிபர்களுடன் சம்பந்தப்பட்ட

சுபக்கிரகங்களின் திசாபுத்தி, அந்தரங்களில் நல்ல பலன்களை மிகுதியாகக் கொடுப்பார்கள். யோகாதிபதிகளுடன் சம்பந்தப்படாத மற்ற சுபக்கிரகங்களின் திசா, புத்தி, அந்தரங்களில் நல்ல பலன்களையும் தீய பலன்களையும் சமமான அளவில் கலந்து, விரைவாகக் கொடுப்பார்கள்.

இதுவுமது

39. விரைந்துவரும் மாயோக காரகாள் வெற்றிப்
பொருந்துஞ்சம் மந்தமில்லால் போந்தே - இருந்துவரு
மன்னியோ கங்களுட காரகா ளாம்புசிப்பில்
மன்னுயோ கங்கள் வரும்.

(இ.ள்) வேகமாக வரும் யோகாதிபர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்து அதிபதிகளுடன் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கும் கிரகங்களின் திசையிலும், சம்பந்தப்படாதவர்களாகிய கிரகங்களின் திசையிலும், பாவதோடங்களையடையாமல் இருக்கும் மற்ற யோகாதிபதிகளினுடைய புத்தி, அந்தரங்களில் மிகவும் உயர்வான யோகங்கள் கிடைக்கும்.

சுபர் திசைகளின் பலன்

40. சார்யோக காரகாள் தங்களுட சம்மந்தம்
ஏர்கிலாக்கோளில் எதிர்திசையி - லார்யோகக்
காரரவர் புத்தியினிற் காணும் பலன்கொடுப்பர்
ஏறும் ஒருவிடத்தே விள்.

(இ.ள்) யோகாதிபதிகளாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடங்களுக்கு அதிபதிகளுடன் சம்பந்தப்படாத மற்ற சுபர்களின் திசா காலங்களில், யோகாதிபதிகளின்

புத்திகளில், அவர்கள் இருக்கின்ற இடங்களின் தன்மைக்கேற்ப பலன்களைக் கொடுப்பார்கள் என்பதைக் கூறுவாயாக.

இராகு, கேதுக்களின் திசா பலன்

41. வின்கேது இராகுவுக்கு மேல்யோக காரகா
என்மருவு சம்மந்தம் இல்லையெனு - நன்திசையில்
மோகமுள காரர்புத்தி உற்றபொழு தேயோகம்
வாகு படக்கொடுப்பார் மாண்பு.

(இ.ள்) நிழல் கிரகங்களான இராகு, கேது ஆகிய இருவருக்கும் யோகாதிபதிகளுடைய சம்பந்தம் இல்லாவிட்டாலும் இராகு, கேதுக்களுடைய திசைகளில் யோகாதிபர்களின் புத்தி, அந்தரங்களில் யோகங்களைக் கொடுப்பார்கள்.

பாவக்கிரகங்களின் திசை

42. பாவிதிசை யாயவர்கள் சம்மந்த மேபரவத்
தேய்வுசுபக் கோள்புசிப்பிற் றீதுபலன் - மேவியிடு
மன்னோர்சம் மந்தமுள நற்கோள்கள் தன்புசிப்பில்
எண்ணா திருவினையும் உண்டு.

(இ.ள்) ஒரு சாதகனுக்குத் திசை நடத்தும் பாவக் கிரகங்களின் திசைகளில், மற்ற பாவக் கிரகங்களுடன் சம்பந்தபடாத சுபக்கிரகங்களின் புத்திகளில் தீமையான பலன்களையே கொடுப்பார்களேயன்றிச் சிறிதும் சுப பலன்களைக் கொடுக்க மாட்டார்கள். ஆனால் அந்தச் சுபக்கிரகங்களுடன் பாவக்கிரகங்கள் கூடியிருக்கில், அந்தச் சுபக்கிரகங்களின் புத்திகளில் தீய பலன்களையும் நல்ல பலன்களையும் சம அளவில் கொடுப்பார்கள்.

யோகமும் அவயோகமும் தரும் திசைகள்

43. திசைநாதன் பாவியாய்ச் சேர்ந்தபுத்தி நாதன்
அசையோக காரகரா நண்ணி - இசையாக
இராசயோ கங்கணல்கி யேயரிட்டங் கூடத்
தராசுநிறை போலளிப்பார் சாற்று.

(இ.ள்) ஒரு சாதகத்தில் திசை நடத்தும் திசைநாதர்கள் பாவிகளாக இருக்க, அவர்களோடு சம்பந்தப்பட்ட யோகக்காரர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடங்களுக்கு அதிபதிகளின் புத்தி நடக்கும் பொழுது, அச்சாதகனுக்கு தராசின் இரு தட்டுகளிலும் சமஎடை நிற்பது போல மிகுந்த யோகங்களைக் கொடுத்து, அதற்குச் சம அளவில் கண்டங்களாகிய துன்பங்களையும் கொடுப்பார்கள்.

மாரக ஸ்தானாதிபதி திசை

44. ஆகாத யோகமுள காரகா ளாந்திசையில்
வாகாநல் யோகமுந்தான் வந்தெய்தும் - யோகா
வருங்காலெப் போதென்றால் மாயோகக் காரர்
பெரும்புசிப்பில் உண்டாகும் பேசு.

(இ.ள்) ஒரு சாதகனுக்கு மாரகஸ்தானாதிபதிகளின் திசைகள் நடக்கும் காலத்தில் யோக பலன்கள் மிகுதியாகக் கிடைக்கும். அந்த யோகங்களும் அத்திசா நாதனுக்கு ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற்கு அதிபதிகளின் புத்தி, அந்தரங்களில் அல்லது லக்கனத்திற்கு ஒன்பதாமிடம் பத்தாமிடத்திற்கு அதிபதிகளின் புத்தி அந்தர காலங்களிலேயே கிடைக்கும் என்பதைக் கூறுவாயாக.

இதுவுமது

45. தீயோர் திசையிலந்தத் தீயோர்சம் மந்தமுள
மாயோக காரகர்த மன்புசிப்பிற் - றேயு
மவபலன்கள் மெத்தஉண்டாம் ஆனபலன் றாரார்
உவமையிலா மின்னே உரை.

(இ.ள்) ஒரு சாதகனுக்கு மாரகத்தைத் தரக்கூடிய வல்லமைமிக்க கிரகங்களுக்குரிய திசைகளில் மற்று பாவிகளுடன் சம்பந்தப்படாத யோகக்காரர்களாகிய ஒன்பதாமிடம், பத்தாமிடத்திற்குடையவர் புத்திகளில் தீமையான பலன்களையே மிகவும் தருவார்களேயன்றி நன்மையான பலன்களைத் தரமாட்டார்கள் என்பதைத் தனக்கு ஒப்பாகக் கூற உவமை இல்லாத தனிச்சிறப்பினைக் கொண்ட மின்னலைப் போன்ற இடையினையுடைய பெண்ணே கூறுவாயாக.

இதுவுமது

46. மாரகாள் தன்னுடைய சம்மந்த மார்க்கமுள
சார சுபர்புசிப்பிற் றான்கொல்லா - மேருடைய
சம்மந்தம் இல்லாத்தீ யோர்புசிப்பிற் றான்கொல்லா
நம்ம இதுகண்டே யறி.

(இ.ள்) ஒரு சாதகனுக்கு மாரகத்தைச் செய்யக் கூடிய வல்லமையுடைய கிரகங்களுக்குரிய திசைகளில் அந்தக் கிரகங்களோடு சம்பந்தம் பெறாத மற்ற சுபர்கள் சம்பந்தப்பட்டிருந்தால், அவர்களுடைய புத்தி, அந்தரங்களில் கொல்லமாட்டார்கள். ஆனால் சுபர்களோடு சம்மந்தமின்றி, தீயவர்களோடு சம்பந்தப் பட்டிருந்தால், தீய பாவிகளுடைய புத்தி, அந்தரங்களில் கொல்வார்கள் என்பதைக் கண்டு அறிவாயாக.

பன்னிரு இலக்கன பலன்கள்

47. இன்னவகையெல்லாம் இசையும் இலக்கனங்கள்
பன்னிரண்டி னுள்ளும் பரவியே - மன்னியிடு
மாரகரைப் பாவிகளை மாயோக காரகரைச்
சேரவெல்லாம் சொல்வேன் தெரிந்து.

(இ.ள்) இந்த வகையிலெல்லாம் சிறப்புற தெரிந்து கொள்வதற்காக, இராசி மண்டலத்தில் அடங்கிய பன்னிரண்டு இலக்கனங்களில் இந்த இலக்கனங்களில் பிறந்தவர்களுக்கு இவரிவர்கள் பாவிகள். இவரிவர்கள் யோகக்காரர்கள். இவரிவர்கள் சுபர்கள். இவரிவர்கள் மாரகர்கள் என்பனவற்றையெல்லாம் சோதிடத்தில் வல்லவர்களிடமும் சோதிட நூல்களிலும் தெரிந்துகொண்டு, எடுத்துரைக்கின்றேன்.

மேட லக்கின பலன்

48. மென்மேட இலக்கனத்தை மேவிப் பிறக்கிலிந்து
பண்புகர்மா லுஞ்சனியும் பாவிரவி - நன்குருசேய்
நீடுநல்லர் பாக்கியகர் மாதிகுரு நேர்சனியும்
கூடியிடில் யோகமில்லை கூறு.

(இ.ள்) மேட இலக்கனத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன், புதன், சனி ஆகிய மூவரும் பாவிகள். இவர்களில் சந்திரன், நான்காமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் சுக்கிரன், ஆறாமிடம், ஏழாமிடம் ஆகிய இரண்டு ஆதிபத்தியங்களைப் பெற்றுள்ளதாலும் சனி, பத்தாமிடத்திற்கு உரியவனாக இருந்தாலும் பதினோராமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், தீய பலன்களைத் தரக்கூடியவர்கள். சூரியன், குரு, செவ்வாய் ஆகிய மூவரில் சூரியன் ஐந்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், குரு பனிரண்டாம் இடத்திற்கு அதிபதியாக இருந்ததனாலும் திரிகோண ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தாதிபத்தியம் பெற்ற

தனாலும், செவ்வாய், எட்டாமிடத்திற்கு உடையவனாக இருந்ததனாலும் இலக்கன ஆதிபத்தியம் பெற்றதனாலும் உயர்ந்த நல்ல பலன்களைத் தரக்கூடிய சுபர் களாகின்றனர். ஆனால் தன்ம கன்மாதிகள் என்று சொல்லக் கூடிய ஒன்பதாமிடம், பத்தாமிடங்களுக்கு உடைய குருவும், சனியும் ஒருவரை ஒருவர் கூடி, ஓரே இராசியில் இருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டாலும், இந்தச் சாதகனுக்கு யோகத்தைத் தரமாட்டார்கள் என்பதைக் கூறுவாயாக.

இதுவுமது

49. கூறுமந்த னார்குருவும் பாவிவெள்ளி கொல்லான்பின்
வேறுசனி யும்புதனும் விண்டுகொல்வன் - றேறிப்
பகுத்தறிந்து பார்த்துப் பலாபலன்கள் கண்டே
தொகுத்துரையாய் எல்லாம் தொடர்ந்து.

(இ.ள்) மேட இலக்கனத்திற்கு ஒன்பதாமிடம், பத்தாமிடம் ஆகிய இடங்களில் சனியும் குருவும் கூடியிருந்தால் பாவியாகிய சனியுடன் கூடியிருந்த குருவும் பாவியாம். சுக்கிரன், ஏழாமிடத்து ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும் இரண்டாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் கொல்ல மாட்டான். மற்ற கிரகங்களில் சனியானவன், பதினோராமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், புதன் மூன்றாமிடம், ஆறாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் இவ்விருவரில் ஒருவர் மாரகத்தைச் செய்வார்கள். ஆகையால் நவக்கிரகங்கள் வீற்றிருக்கின்ற அந்தந்த ஸ்தானங்களுக்கு உரியவர்களுக்கு ஏற்பட்டுள்ள சுபாவம், பலம், பலவீனம், சுபம், அசுபம், கேந்திர, கோனாதிபதிகளுடன் சம்பந்தப்பட்டவர்களுடைய தோடங்கள் முதலானவற்றை நன்கு ஆராய்ந்து கண்டு, பின்னர் தொகுத்து ஒவ்வொருவருக்கும் உள்ள பலன்களை எடுத்துரைக்க வேண்டும்.

இடப இலக்கின பலன்

50. தன்னிடப இலக்கனத்தைச் சாரச் செனித்தவர்க்குப்
பன்னுமதி பொன்புகரும் பாவியா - மன்னிரவி
காரியுந்தான் நல்லவர்கள் காண்சனியன் மாத்திரந்தான்
சாரரசர் யோகம் தரும்.

(இ.ள்) சிவபெருமானின் வாகனமான இடபத்தை இலக்கனமாகக் கொண்டு பிறந்தவர்களுக்குச் சந்திரன், குரு, சுக்கிரன் ஆகிய மூவரில், சந்திரன் மூன்றாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதாலும், குரு, எட்டாமிடம், பதினோராமிடம் ஆகிய இரு வீடுகளின் ஆதிபத்தியங் களைப் பெற்றுள்ளதாலும் சுக்கிரன், ஒன்றாமிடம், ஆறாமிடம் ஆகிய இரு ஆதிபத்திய வீடுகளின் ஆதிபத்தியங்களைப் பெற்றுள்ளதாலும் பாவிகளாம். சூரியன், சனி, புதன் ஆகிய மூவரில் சூரியன் நாலாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதாலும், சனி, ஒன்பதாமிடம் பத்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதாலும், புதன், இரண்டாமிடம், ஐந்தாமிடம் ஆதிபத்தியங்களைப் பெற்றதாலும் சுபர்களாம். சனி, தன்ம, கன்ம ஸ்தானங்களுக்கு அதிபதியாகையால், அந்தச் சனி மட்டும் இராஜ யோகத்தைக் கொடுப்பார்.

இதுவுமது

51. தருகுருவும் செவ்வாயும் சார்ந்த மதியும்
வருமா ரகராக வாட்டி - வெருவியிடக்
கொன்றிடுவர் புந்திகொல்லான் கூறுதிசை தன்னிலுந்தான்
அன்றறிவாய் சொன்னேன் நயந்து.

(இ.ள்) இடப இலக்கனத்தில் பிறந்தவர்களைக் குரு, செவ்வாய், சந்திரன் ஆகிய மூவரும் திங்கள் திசாபுத்தி காலங்களில் துன்பம் தரும் நோய்களைக் கொடுத்து மாரகத்தைச் செய்வார்கள். புதன், இரண்டாமிடத்திற்கு உடையவனாதலால் மாரகத்தைச் செய்யான் என்று சொன்னதைக் கேட்பாயாக.

மிதுன இலக்கின பலன்

52. சொல்மிதுன இலக்கனத்திற் றோய்ந்து பிறந்திடமால்
புல்சேயும் பொன்னிரவி பொல்லாதார் - நல்லவெள்ளி
தானொருவன் நல்லன் சனிகுருவும் கூடியிடில்
மேனரச யோகமில்லை மீது.

(இ.ள்) மிதுன இலக்கனத்திற் பிறந்தவர்களுக்குப் புதன், வியாழன், செவ்வாய், சூரியன் ஆகிய இந்த நால்வரில் புதன், இலக்கனாதிபனாக இருந்து ஒன்றாமிடம், நான்காமிடம் ஆதிபத்தியத்தைப் பெற்றதாலும், குரு, ஏழாமிடம், பத்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதாலும், செவ்வாய், ஆறாமிடம், பதினோராமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சூரியன், மூன்றாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் பாவிகளாம். சுக்கிரன், திரிகோண ஸ்தானமாகிய ஐந்தாமிடத்திற்கும் சயன, சுக, போக ஸ்தானமாகிய பன்னிரண்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் அவன் ஒருவனே சுபனாவான்.

இதுவுமது

53. மீது மதிகொல்லான் மீண்டுசெவ்வாய் ஆதித்தன்
வாதுகுரு மூவர்களு மாரகமாய் - சேதமுற
கொல்லுவர்கள் என்றே குலவுகடல் சூழுலகில்
வெல்லவருஞ் சொல்லார் இசைந்து.

(இ.ள்) மிதுன இலக்கனத்தில் பிறந்தவர்களை ஈசனின் சடாமுடி மீது விளங்கும் சந்திரன் கொல்லான்; செவ்வாய், சூரியன், குரு இம்மூவரில் செவ்வாயானவன், ஆறாமிடம் பதினோராமிடம் ஆகிய இரண்டு ஆதிபத்தியங்களைப் பெற்றிருப்பதாலும், சூரியன் மூன்றாமிட ஆதிபத்தியத்தைப் பெற்றிருப்ப தாலும், குரு ஏழாமிட ஆதிபத்யத்தையும் பத்தாமிட ஆதிபத்யத்தையும் பெற்றிருப்பதாலும் மாரகத்தைச்

செய்வார்கள் என்று அலைகள் நிறைந்த கடல் சூழ்ந்த உலகில் சோதிட நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

கடக இலக்கின பலன்

54. கற்கடக இலக்கனத்திற் காணச் சனித்தவர்க்குச்
சொற்பதனும் சுக்கிரனும் சொல்பாவி - நற்குருவும்
செல்சேயும் நல்லவர்கள் சேய்குருவும் கூடியிடில்
நல்யோகம் தந்திடுவர் நாடு.

(இ.ள்) கடக இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு புதனும் சுக்கிரனும் பாவிகள். இவர்களில் புதன், மூன்றாமிட, பன்னிரண்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சுக்கிரன் நான்காமிட, பதினோராமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் பாவிகள். குரு, செவ்வாய் ஆகிய இருவரும் சுபர்கள். இவர்களில் குரு, ஆறாமிடத்திற்கு அதிபதியாக இருந்தாலும் ஒன்பதாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், செவ்வாய், ஐந்தாமிட, பத்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் சுபர்கள். இவர்கள் இருவரும் ஒரே இராசியில் சேர்ந்திருந்தாலும் இராச யோகத்தைக் கொடுப்பார்கள்.

இதுவுமது

55. நாடிரவி கொல்லான் நற்கவிமான் மாரகராய்க்
கூடிநின்று கொன்றிடுவர் கோபமதாய் - நீடுமவர்
தன்திசையி லும்புத்தி தன்னிலுந்தான் தப்பாது
பொன்னனையும் மாதே புகல்.

(இ.ள்) பொன்னாலான அணிகலன்களைப் புனைந்துள்ள பெண்ணே! கற்கடக இராசியில் பிறந்தவர்களைச் சூரியன், இரண்டாமிடத்து ஆதிபத்தியம் அடைந்தவனாகையால் கொல்ல

மாட்டான். நற்குணமுள்ள புதன், சனி ஆகியோரில் புதன், மூன்றாமிட, பன்னிரண்டாமிட ஆதிபத்தியங்களைப் பெற்றதனாலும், சனி, ஏழாமிட, எட்டாமிட ஆதிபத்தியங்களைப் பெற்றதாலும், சனி திசையில் புதன் புத்தியிலும், புதன் திசையில் சனிபுத்தியிலும் தப்பாது மாரகத்தைத் தருவார்கள்.

சிம்ம இலக்கின பலன்

58. சேர்ந்தசிம்ம இலக்கனத்தைச் சேரச் செனித்தவருக்
கேந்துசனி சுக்கிரனு மேபாவி - போந்தசெவ்வாய்
ஏறும் இரவிநல்லன் இன்புகர்சேய் கூடியிடில்
வீறியயோ கங்களுண்டாம் வேறு.

(இ.ள்) பன்னிரு இராசிகளில் ஒன்றாகச் சேர்ந்துள்ள சிம்ம இலக்கனத்திற் பிறந்தவர்களுக்குத் தீமைகளைத் தரக்கூடிய பாவிகள் சனியும் சுக்கிரனும். இவ்விருவரில் சனி, ஆறாமிட, ஏழாமிட ஆதிபத்தியத்தைப் பெற்றதனாலும் சுக்கிரன் மூன்றாமிட, பத்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் பாவிகள். இயற்கையில் பாவிகளாகிய செவ்வாய், சூரியன் இருவரும் சிம்ம இலக்கனத்திற் பிறந்தவர்களுக்குச் சுபர்கள். செவ்வாய் நாலாமிட, ஒன்பதாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சூரியன் இலக்கன கேந்திராதிபத்தியம் பெற்றதனாலும் சுபர்கள். நல்ல இன்பத்தைத் தருவார்கள். சுக்கிரனும் செவ்வாயும் கூடி இருந்தால், யோகங்களைத் தருவார்கள்.

இதுவுமது

57. வேறுபுதன் கொல்லான் வினைபுகர்மை கொன்றிடுவர்
கூறுமற்றப் பேர்கள்தான் கொல்லார்கள் - நேறிப்
பகுத்தறிந்து பார்த்துப் பதறாமல் யார்க்கும்
வகுத்தறியும் மின்னே மதித்து.

(இ.ள்) சிம்ம இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு இரண்டாமிடத்து ஆதிபத்தியம் பெற்றவனான புதன் மாரகம் செய்ய மாட்டான். தீமை செய்யக் கூடிய சுக்கிரன், சனி ஆகிய இருவரும் மாரகம் செய்வர். சுக்கிரன். மூன்றாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் சனி, ஏழாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் மாரகத்தைச் செய்வார்கள். மற்ற கிரகங்கள் மாரகத்தைச் செய்யமாட்டார்கள் என்பதை நவக்கிரகங்களின் வலிமை, இடம் முதலானவற்றைப் பகுத்து எடுத்துரைக்கும் பெண்ணே அறிவாயாக.

கன்னியா இலக்கின பலன்

58. கன்னியா இலக்கினத்திற் காணச் சனித்தவர்க்கு
பன்னுகுரு சேய்மதிமால் பாவியாம் - மன்னுசனி
வெள்ளியுந்தான் நல்லவர்கள் விண்புகர்மா லுங்கூடிற்
றெள்ளரசர் யோகமுண்டாம் செப்பு.

(இ.ள்) கன்னியா இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு குரு, செவ்வாய், சந்திரன், புதன் ஆகியோர் பாவிகள். இவர்களில் குரு, நாலாமிட, ஏழாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், செவ்வாய், மூன்றாமிட, எட்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சந்திரன் பதினோராமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், புதன் ஒன்றாமிடம், பத்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் பாவிகள். சனி, சுக்கிரன் ஆகிய இருவரில், சனி ஆறாமிடத்து ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும் ஐந்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் சுக்கிரன் இரண்டாமிட, ஒன்பதாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் சுபர்கள். சுக்கிரன், புதன் ஆகிய இருவரில் புதன், கேந்திராதிபத்திய தோஷத்தை அடைந்திருந்தாலும் திரிகோணாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடியிருந்தாலும் அல்லது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் இராசயோகங்களைக் கொடுப்பார்களென்று கூறுவாயாக.

இதுவுமது

59. செப்புபுகர் புந்திகொல்லான் சேர்ந்தசெவ்வாய் சந்திரனும்
ஒப்பு குருவோ டுடன்மூவர் - தப்பாமற்
கொல்லுவார்கள் கண்டாய் குலவும் இதன்குறிப்பை
ஒல்லையினில் சொல்வாய் உகந்து.

(இ.ள்) கன்னியா இலக்கனத்தில் பிறந்தவர்களைச் சுக்கிரன் கொல்லான். செவ்வாய், சந்திரன், குரு ஆகிய மூவரும் மாரகர்கள். இவர்களில் செவ்வாய், மூன்றாமிட, எட்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சந்திரன் பதினோராமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், குரு ஏழாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் மரணத்தைத் தருவார்கள்.

துலா லக்கின பலன்

60. துலையிற் பிறந்தார்க்குச் சூரியன்சேய் பொன்னும்
சொலும்பாவி புந்திசனி சுங்கன் - நிலைசுபர்கள்
புந்திமதி யுங்கூடிற் பேரரசர் யோகமுண்டாம்
வந்தசெவ்வாய் கொல்லான் வளைந்து.

(இ.ள்)துலா இலக்கனத்தில் பிறந்தவர்களுக்குச் சூரியன், செவ்வாய், வியாழன் ஆகிய மூவரும் பாவிகள். இந்த மூவரில் சூரியன், பதினோராம் இடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், செவ்வாய், இரண்டாமிட, ஏழாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் குரு, மூன்றாமிட, ஆறாமிட ஆதிபத்தியம் பெற்ற தனாலும் பாவிகள். புதன், சனி, சுக்கிரன் ஆகிய மூவரும் சுபர்கள். புதன், விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்து ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும். திரிகோணஸ்தானமாகிய ஒன்பதாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சுக்கிரன் எட்டாமிடத்திற்கு அதிபதியாக இருந்தாலும் இலக்கன கேந்திராதிபத்தியம் பெற்றதனாலும் சனி, நாலாமிடம் ஐந்தாமிடத்து

ஆதிபத்தியம் பெற்றதனாலும் சுபர்கள். தன்ம கன்மாதிகளான புதனும் சந்திரனும் ஒரு இராசியில் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் இராசயோகத்தைக் கொடுப்பார்கள். செவ்வாய் இரண்டாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதால் கொல்ல மாட்டான்.

இதுவுமது

61. வளைந்தகுரு சூரியனும் வன்மா ரகராய்க்
களங்கமறக் கொல்லுவர்கள் கண்டாய் - விளங்கியிடு
சூதளவு மென்முலையாய்! சோராமல் இந்தவகை
போத வறிந்தே புகல்.

(இ-ள்) சூதாடும் வட்டைப் போன்று அளவினை யுடைய மென்மையான முலையுடையவளே! துலா இலக்கனத்திற் பிறந்தவர்களை குரு, சூரியன் இவர்களில் சூரியன், பதினோராமிடத்து ஆதிபத்தியம் பெற்ற தனாலும் குரு, மூன்றாமிட ஆதிபத்தியம் பெற்ற தனாலும் இவ்விருவருடைய தசா புத்திகளில் கொல்வார்கள் என்று சொல்லுவாயாக.

விருச்சிக இலக்கின பலன்

68. தேளிற் பிறந்தார்க்குச் சேய்புகர்மால் மைபாவி
நாளுமதி பொன்னிரவி நல்லவரா - நீளிரவி
சந்திரனும் கூடியிடிற் றாரரசர் யோகமுண்டாஞ்
சொந்தகுரு காரிகொல்லான் சொல்.

(இ-ள்) விருச்சிக இலக்கனத்தில் பிறந்தவர் களுக்குச் செவ்வாய், சுக்கிரன், புதன், சனி ஆகியோர் பாவிகள். இந்த நால்வரில் செவ்வாய், இலக்கனாதிபதி யாகியும், ஆறாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், சுக்கிரன், ஏழாமிட பன்னிரண்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சனி மூன்றாமிடம், நான்காமிட

ஆதிபத்தியம் பெற்றதனாலும் பாவிகள். சந்திரன், குரு, செவ்வாய் ஆகியோர் சுபர்கள். இம்மூவரில் சந்திரன், ஒன்பதாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், குரு ஐந்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சூரியன் பத்தாமிட ஆதிபத்தயம் பெற்றதாலும் சுபர்கள். தன்ம கன்மாதிபர்களாகிய சந்திரனும் சூரியனும் ஓர் இராசியில் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலும் இராசயோகம் கிடைக்கும். குரு இரண்டாம் இட ஆதிபத்தியம் பெற்றவனாகையால், கொல்லமாட்டான்.

இதுவுமது

63. சொல்புதனும் செவ்வாயும் சுக்கிரனும் மாரகமாய்
வல்லிரவிற் கொன்றிடுவர் வஞ்சமாய் - நல்மயிலே
இந்தவர லாறும் இதனிலையு மேநினைந்து
புந்தியினுட் கொள்வாய் புகழ்ந்து.

(இ.ள்) மயில் போன்ற சாயலையுடைய பெண்ணே ! விருச்சிக இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு புதனும் செவ்வாயும் சுக்கிரனும் மாரகர்கள். இவர்களில் புதன், எட்டாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், சனி மூன்றாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், சுக்கிரன் ஏழாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் விரைவாகக் கொல்வார்கள் என்பதை பலவற்றையும் ஆராய்ந்து சிந்தித்து மனதில் கொள்வாயாக.

தனுர் இலக்கன பலன்

64. தனுசுபிறந் தார்சனிமால் சசிபுகர்பொன் பாவி
சனிசெவ்வாய் சூரியன்தான் நல்லர் - சனிமதியுங்
கொல்லான் புகர்புதனும் கொல்லுவர்மால் சூரியனும்
ஒல்லையினிற் கூடிலுண்டாம் யோகம்

(இ.ள்) தனுசு இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு புதன், சனி, சுக்கிரன், குரு ஆகிய நால்வரும் பாவிகள். இவர்களில் புதன், ஏழாமிட, பத்தாமிட ஆதிபத்தியம் பெற்றவன். சனி இரண்டாமிட, மூன்றாமிட ஆதிபத்தியம் பெற்றவன். சுக்கிரன், ஆறாமிட, பதினோராமிட ஆதிபத்தியம் பெற்றவன். குரு இலக்கனத்திற்கும், நாலாமிடத்திற்கும் ஆதிபத்தியம் பெற்றவன். ஆகவே, இந்நால்வரும் பாவிகளாகின்றனர். செவ்வாய், சூரியன் இருவரும் சுபர்கள். செவ்வாய், பனிரெண்டாமிடத்திற்கு அதிபதியாக இருந்தாலும் திரிகோண ஸ்தானமாகிய ஐந்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றவன். சூரியன், திரிகோண ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்து ஆதிபத்தியம் பெற்றவன். ஆகவே சுபர்கள். ஆதிபத்திய தோஷம் நீங்கப்பெற்ற சந்திரனும் இரண்டாமிட ஆதிபத்தியம் சனியும் கொல்ல மாட்டார்கள். ஆறாமிட, பதினோராமிட ஆதிபத்தியம் பெற்ற சுக்கிரனும், ஏழாமிட, பத்தாமிட ஆதிபத்தியம் பெற்ற புதனும் கொல்லுவார்கள். சூரியனும் புதனும் தன்ம கன்மாதிகளாகையால், இவர்களிருவரும் ஒரே இராசியில் கூடியிருந்தாலும் அல்லது ஒருவருக் கொருவர் பார்த்துக்கொண்டாலும் இவர்களுடைய திசாபுத்தி நடைபெறும் காலங்களில் விரைவாக இராச யோகத்தைக் கொடுப்பார்கள்.

மகர இலக்கின பலன்

65. தூய்மகர இலக்கனந்தான் தோன்றப் பிறந்தவருக்
கேய்விளங்கும் சந்திரனு மேகுருவுந் - தீய்பாவி
வெள்ளிசெவ் வாய்நல்லன் விளங்கிரவி காரிகொல்லான்
விள்ளமதி யுங்குருவும் மேல்.

(இ.ள்) தூய்மையான மகர இலக்கனத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரனும் குருவும் பாவிகள்.

இவர்களில் செவ்வாய் நாலாமிட, பதினோராமிட ஆதிபத்தியத்தைப் பெற்றதனாலும், சந்திரன் ஏழாமிட ஆதிபத்தியத்தைப் பெற்றதனாலும், குரு, மூன்றாமிட, பன்னிரண்டாமிட ஆதிபத்தியத்தைப் பெற்றதாலும் பாவிகள். சுக்கிரன், புதன் இருவரும் சுபர்கள். இவர்களில் சுக்கிரன் ஐந்தாமிட, பத்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், புதன் ஆறாமிட ஆதிபத்தியத்தைப் பெற்றிருந்தாலும் ஒன்பதாமிட ஆதிபத்தியத்தைப் பெற்றதனாலும் சுபர்கள். சனி, ஆயுள்காரகன் என்பதாலும், இலக்கனத்திற்கு இரண்டாமிட ஆதிபத்தியம் உடையவன் என்பதனாலும் கொல்லமாட்டார்கள். இனி சந்திரன், குரு ஆகியோர் பற்றி சொல்வாயாக.

இதுவுமது

66. மேலிருவ ருங்கொல்வர் வெள்ளிபுதன் கூடியிடிற்
கோல்யோகம் எல்லாம் கொடுத்திடுவர் - நூல்வழியே
பார்த்துவர லாறறிந்து பார்மா ரகரையெல்லாம்
சேர்த்துரையும் மின்னே தெளிந்து.

(இ.ள்) மின்னலையொத்த இடையையுடைய பெண்ணே ! மகர இலக்கனத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன், வியாழன் இருவரும் மரணத்தைத் தருவர். இவர்களில் சந்திரன் ஏழாமிடத்து ஆதிபத்தியம் பெற்றவன். இச்சாதகனுக்குத் தன்ம கன்மாதிபதிகளான சுக்கிரனும் புதனும் ஒரே இராசியில் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தாலும் இராச யோகத்தைத் தருவார்கள். இதனை சோதிட நூல்களைச் சிறப்புறக் கற்று வரலாற்றை அறிந்து மாரகரைப் பற்றி தெளிவாகத் தெரிந்துகொண்டபின் எடுத்துரைப்பாயாக.

கும்ப இலக்கின பலன்

67. கும்ப இலக்கனத்திற் கூடிப் பிறந்தவர்க்குப்
பம்புகுரு சேய்பாவி பண்பிரவி - விம்புபுகர்
மந்தசனி நல்லன் புகர்சேயுங் கூடியிடிற்
றந்தரசர் யோகம் வரும்.

(இ.ள்) கும்ப இலக்கனத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன், குரு, செவ்வாய் ஆகிய மூவரும் பாவிகள். இவர்கள் மூவரில் சந்திரன், ஆறாமிடத்து ஆதிபத்தியம் பெற்றவன். குரு, இரண்டாமிடத்துக்கு உரியவனாக இருந்தாலும் பதினோராமிடத்து ஆதிபத்தியம் பெற்றவன். செவ்வாய், பத்தாமிடத்திற்கு உரியவனாக இருந்தாலும் மூன்றாமிடத்து ஆதிபத்தியம் பெற்றவன். ஆகவே இம்மூவரும் பாவிகள். சுக்கிரன், சனி ஆகிய இருவரும் சுபர்கள். இவ்விருவரில் சுக்கிரன், கேந்திர ஸ்தானத்திற்கு உடையவனாக இருந்தாலும், திரிகோண ஸ்தானமான ஒன்பதாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், செவ்வாய் பத்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும் இவர்கள் தன்ம கன்மாதிகள் ஆகிறார்கள். இவர்கள் ஒரே இராசியில் சேர்ந்து இருந்தாலும், இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டாலும், இச்சாதகனுக்கு இராசயோகம் கிடைக்கும்.

இதுவமது

68. தருகுருவு மேகொல்லான் சந்திரனும் சேயும்
வெருவி இடங்கொல்வர் மிக்காய் - வருவிபரங்
கண்டு பலனாய்க் கருத்திலறிந் தேயுரையும்
கண்டுமொழி நல்லாய்! கசிந்து.

(இ.ள்) கும்ப இலக்கனத்தில் பிறந்தவர்களைக் குரு, இரண்டாமிடத்திற்கு ஆதிபத்தியம்

பெற்றவனாகையால் கொல்லமாட்டான். சந்திரனும், செவ்வாயும் பாவிகள். இவர்களில் சந்திரன் ஆறாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் செவ்வாய் மூன்றாமிட, பத்தாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும் கொல்லுவான் என்பதை அறிவினால் கண்டு இலக்கனங்களின் பலன்களையெல்லாம் கருத்தில் அறிந்து கொண்டு கற்கண்டு போன்ற இனிய மொழியைப் பேசுகின்ற பெண்ணே ! கூறுவாயாக.

மீன இலக்கின பலன்

69. மீன இலக்கனந்தான் மேலாய்ப் பிறந்தவர்க்குச்
சூன சனி புந்திபுகர் சூரியன்பொன் - ஊனமுடன்
பாவியாம் சேய்மதியம் பண்புடைய நல்லவர்கள்
கோவுங்குரு செவ்வாயுங் கூடில்.

(இ.ள்) மீன இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு, சனி, புதன், சுக்கிரன், சூரியன், குரு ஆகிய ஐவரும் பாவிகள். இந்த ஐந்து கிரகங்களில் சனி, பதினோராமிட, பன்னிரண்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், புதன், நாலாமிட, ஏழாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதனாலும், சுக்கிரன் மூன்றாமிட, எட்டாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், குரு இலக்கனத்திற்கு உடையவனாக இருந்தாலும், பத்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதாலும், பாவிகள் செவ்வாய், சந்திரன் ஆகிய இருவரும் சுபர்கள். இவர்களில் செவ்வாய், இரண்டாமிடத்திற்கு அதிபதியாக இருந்தாலும் ஒன்பதாமிட ஆதிபத்தியம் பெற்றதனாலும், சந்திரன் ஐந்தாமிடத்து ஆதிபத்தியம் பெற்றதாலும் சுபர்கள். தன்ம கன்மாதிபதிகளான செவ்வாயும் சந்திரனும் ஒன்று கூடி இருந்தால், சாதகனுக்கு இராசயோகம் கிடைக்கும்.

இதுவுமது

70. கூடி லிராசரிக்க யோகமுண்டாம் கொற்றமதை
நாடுசெவ்வாய் கொல்லா ணலிசனியோ - டூடுபுகர்
பானுபுதன் கொல்லார்கள் பைம்பாகி னோடளவும்
தேனுமொழி மாதே தெரி.

(இ.ள்) தேனைக் காட்டிலும் இனிமையாகப் பேசக்கூடிய பெண்ணே ! மீன இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு ஒன்பதாமிடத்ததிபதி செவ்வாயும் பத்தாமிடத்து அதிபதி குருவும் சேர்ந்து ஒரே இராசியில் இருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இருந்தாலும் இவர்கள் இறுவரும் இராச யோகத்தைக் கொடுப்பார்கள். செவ்வாய், இரண்டாம் இடத்து ஆதிபத்தியம் பெற்றதனாற் கொல்ல மாட்டான். சனி, சுக்கிரன், சூரியன், புதன் ஆகிய நால்வரும் மாரக ஸ்தானங்களுக்கு உரியவர்களாகையால் மாரகத்தைச் செய்வார்கள் என்பதைக் அறிந்து தெளிவாயாக.

ஆயுள் நிர்ணயம்

71. சொல்லுலக்கி னாதிபனும் தோன்றுமட்ட மாதிபனும்
சொல்லுசர ராசியிறிற் றீர்க்காயுள் - வெல்லும்
சரச்சிரங்கள் மத்திபமாம் சாரும் சரமும்
வரும்உபய மும்அற்ப பண்பு.

(இ.ள்) சென்ம இலக்கனாதிபதியும், சென்ம இலக்கனத்திற்கு எட்டாம் இடமான ஆயுள் ஸ்தானத்திற்கு அதிபதியான அட்டமாதிபதியும் சர ராசிகளான மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கு இராசிகளில் இருந்தால், அந்தச் சாதகனுக்குத் தீர்காயுளாகும். இவ்விரண்டு இடத்து அதிபதிகளிலும் சர இராசிகளிலும், திர இராசிகளான இடபம், சிம்மம், விருட்சிகம், கும்பம் ஆகிய நான்கு இராசிகளிலும்

இருந்தால், அந்தச் சாதகனுக்கு மத்திம ஆயுளாகும். இவ்விரண்டு இடத்து அதிபர்களும் சர இராசியிலும் உபய இராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய மூன்று இராசிகளிலும் இருந்தால், அந்தச் சாதகனுக்கு அற்பாயுளாகும்.

இதுவுமது

72. மாண்பிலக்கி னாதிபதி மன்னுதிர ராசியுறில்
ஊணெட்டி னாத னுபயமுறிற் - காண்வயது
தீர்க்கந் திரஞ்சரங்கள் சேரிலது மத்திபமாம்
மார்க்குந் திரங்களற்ப மாம்.

(இ.ள்) சென்ம இலக்கனாதிபதி, திர இராசிகளாகிய இடபம், சிம்மம், விருட்சிகம், கும்பம் ஆகிய நான்கு இராசிகளில் ஓர் இராசியில் இருந்து சென்ம இலக்கனத்திற்கு எட்டாமிடத்திற்கு அதிபதி, உபய இராசிகளாகிய மிதுனம், கன்னி, தனுசு மீனம் ஆகிய நான்கு இராசிகளில் ஓர் இராசியில் இருந்தால், தீர்க்காயுளாகும். மாறாக சென்ம இலக்கனாதிபதி திர இராசியில் நின்று, அட்டமாதிபதி சர இராசியில் நின்றால் மத்திம ஆயுள். சென்ம இலக்கனாதிபதி, எட்டாமிடத்திற்கு அதிபதி ஆகிய இருவரும் திர ராசிகளில் இருந்தால், அற்பாயுளாகும்.

இதுவுமது

73. அற்பமி லாதிலக்கி னாதிபதி யாம்உபயம்
விற்பனமெட் டோன்றிரங்கள் வீற்றிருக்கில் -அற்புதஞ்சேர்
மெத்த வயதுபய மேலுபய மற்றையற்பம்.
ஒத்துபய மும்சரமும் ஓது.

(இ.ள்) சிறுமை என்பது இல்லா சிறப்பினைத் தரும் இலக்கனாதிபதி உபய இராசியிலும், சென்ம இலக்கனத்துக்கு எட்டாமிடத்திற்கு அதிபதி திர

இராசியிலும் இருந்தால் அந்தச் சாதகனுக்குத் தீர்க்காயுள் கிட்டும். இலக்கனாதிபதியும் எட்டாமிடத்திற்கு அதிபதியும் உபய இராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மகரம் ஆகிய நான்கு இராசிகளில் நின்றால் மத்திம ஆயுள். இலக்கனாதிபதி சர இராசியிலும் எட்டாமிடத்திற்கு அதிபதி உபய இராசியிலும் இருந்தால் அற்பாயுளென்று கூறுவாயாக.

இதுவுமது

74. ஓதுமிது அல்லால் உதய இலக்கனமும்
மீதோரா இலக்கனமும் மேன்மையுள - சீதமதி
செல்லு இலக்கனமும் தேர்ந்தே வயதுகளை
மெல்லவே நிச்சயித்து விள்.

(இ.ள்) சென்ம இலக்கனாதிபதியையும் எட்டாமிடத்திற்கு அதிபதியையும் பார்த்து ஆயுளைக் கூறியது போன்று, சென்ம இலக்கனத்தையும், ஹோரா இலக்கனத்தையும் சந்திர இலக்கனத்தையும் ஆராய்ந்து, அதனால் உண்டாகக் கூடிய பூரண ஆயுள், மத்திம ஆயுள், அற்பாயுள் ஆகிய விவரங்களை மனதில் உறுதியாக நிச்சயம் செய்து கொண்டு, பின்பு கூறுவாயாக.

மரணக் காலம்

75. ஒருகுளிகன் மேவும் இராசிதனக் கோசை
தருதிரிகோ ணத்திற் சனியன் - வருங்காலம்
அல்லபக லிற்பிறந்த பேர்கள் மடிந்திடுவர்
தொல்லையுல கோர்தமக்குச் சொல்.

(இ.ள்) சனியின் மகனாகிய குளிகன், தான் எந்த இராசியில் இருக்கின்றானோ அந்த இராசிக்குத் திரிகோண ஸ்தானங்களாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்தில் சனிவரும் காலத்தில் மாரக திசையும்

நடக்கும் காலத்தில் பகலிற் பிறந்த சாதகர் மரணமடைவார்கள் என்பதை பழமைமிகு இவ்வுலகில் தோன்றிய அனைவருக்கும் சொல்லுவாயாக.

இதுவமது

76. ஏறுங் குளிகன் இருந்தவிரா சிக்கேழு
சேருமிரா சிக்குத் திரிகோணம் - கோரச்
சனிவருங்கா லத்திரவிற் றான்பிறந்த யோக
னனிமரண மாவார் நவில்.

(இ.ள்) சனியின் மகனாகிய குளிகன் இருந்த இராசிக்கு ஏழாம் இராசியாகவரும் இராசி எதுவோ, அதற்கு திரிகோண ஸ்தானங்களாக ஐந்தாமிடம், ஒன்பதாமிடங்களில் சனி வருகின்ற காலத்தில், மாரக திசையும் நடக்கின்ற காலத்தில் இரவில் பிறந்த சாதகர் மரணமடைவார்கள் என்பதைக் கூறுவாயாக.

இதுவுமது

77. பன்னுமட்ட மாதி பதியிருந்த ராசிக்கும்
மன்னும் திரிகோணம் மாதமாந் - துன்னுமந்த
மாதத்தி லேமரண மாந்த ருடவயதை
சோதித்துச் சொல்வான் துணிந்து.

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு எட்டாமிடத்திற் கதிபதி எந்த இராசியில் இருக்கிறானோ அந்த இராசிக்கு திரிகோண ஸ்தானமாகிய ஐந்தாமிடம், ஒன்பதாம் இடத்திற்குரிய மாதம் எதுவோ அந்த மாதத்தில் மாரகாதிபத்தியம் பெற்றவர்களின் திசாபுத்திகள் சம்பந்தப்படுமாகில், அந்த மாதத்தில் சாதகனுக்கு மரணம் நிகழும் என்பதை ஆராய்ந்து சொல்வாயாக.

இதுவுமது

78. இரவி இருக்கும் இராசிக்கு நேச
மருவும் திரிகோணம் மன்னி - வருகின்ற
நட்சத் திரத்தின் மரணமந்த நாதனுக்குச்
சொட்சேத் திரமறிந்து சொல்.

(இ.ள்) மாரகாதிபதிகளின் திசாபுத்திகளில் சம்பந்த மாதத்தில் சூரியன் இருக்கும் இராசிக்கு திரிகோண ஸ்தானங்களாகிய ஐந்தாமிடம், ஒன்பதா மிடம் ஆகிய இடங்களுக்கு அதிபதிகள் ஆட்சி பெறும் இராசிகளுக்குரிய நட்சத்திரங்களில் சாதகனுக்கு மரணம் நிகழும் என்பதைக் கூறுவாயாக.

இதுவுமது

79. இலக்கினத்தோன் அங்கிசங்கள் ஏறுமிரா சிக்குப்
பலத்ததிரி கோணம் பிழையா - இலக்கினமாம்
இந்த இலக்கினத்தி லேமரணம் என்றறிவாய்
கந்த மலர்க்குழலீர் கண்டு.

(இ.ள்) நறுமணமிக்க மலர்களைக் கூந்தலில் சூடியுள்ள பெண்ணே ! சென்ம இலக்கினாதிபதி நவாம்ச இராசியில் எந்த வீட்டில் இருக்கிறானோ அந்த வீட்டிற்குத் திரிகோணஸ்தானமாகிய ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகிய இரு இராசிகளில் பலம் பொருந்திய ஸ்தானம் எதுவோ அந்த ஸ்தானத்திற்குரிய இலக்கினம் எதுவோ அந்த இலக்கினத்தில் சாதகனுக்கு மரணம் ஏற்படும் என்பதைக் கண்டறிந்து கூறுவாயாக.

இதுவுமது

80. வயதுநிலை மாரகங்கண் டாயவருட மாதம்
செயநாளில் இலக்கினங்கள் தேர்ந்தே - நயமாய்
நிரியாண காலங்கள் நிச்சயமாய்ச் சொல்லும்
பெரியோர் பெரியரெனப் பேசி.

இந்த பாடல் வரை சுவடியில் காணப்படுகிறது. அதன்பின் 103ஆம் பாடல் காணப்படுகிறது. இந்நூல் அமையும் பொருட்டு 81 ஆம் பாடல் முதல் 102 ஆம் பாடல் வரை அச்சு நூலில் உள்ள பாடல்கள் இதன்பின் தரப்பட்டுள்ளன.

(இ.ள்) ஒரு சாதகனுக்கு வரக்கூடிய மாரகத்தின் வருடம், மாதம், நட்சத்திரம், இலக்கினம் முதலான விபரங்களை ஆராய்ந்து அறிந்து கூறக்கூடிய சோதிடத்தில் வல்லமையுடைய பெரியோர்களை, இவ்வுலகம், மிகப்பெரியோர் என்று போற்றுக் கூறும்.

புத்திரதோசம்

81. அஞ்சொன்பான் ஒன்றில் அரவு சனிகுளிகன்
மிஞ்சவே நோக்க மிகவிருக்க - வஞ்சியரே
சர்ப்பத்தைத் கொன்றதினாற் சந்ததிக்கே டாகுமென்று
விற்புத்தி சொன்னோம் விரைந்து.

(இ.ள்) பெண்ணே இராகு, கேது, சனி, குளிகன் முதலான இயற்கைப் பாவிகள் தனித்தாவது மற்ற கிரகங்களுடன் சேர்ந்தாவது சென்ம இலக்கனம் ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் இவற்றில் ஒன்றில் இருந்தாலும் அல்லது இந்த மூன்று ஸ்தானங்களை வேறிடங்களிலிருந்து பார்த்தாலும் அச்சாதகனுக்கு முற்பிறப்பில் பாம்பினைக் கொன்ற பாவத்தால் இப்பிறவியில் சந்ததிக்குக் கேடு உண்டாகும் என்பதை விரைவாகக் கூறினோம்.

கிரகங்களின் உறவுகள்

சூரியன்

82. ஆதித்தற் காட்சி அரிதனுசு மீனுறவு
கோதற்ற ஆடுச்சம் கோனீசம் - பேதித்துச்
சொல்லாத ராசியோ ரேழும் பகைசெல்வர்
அல்லார் குழலாய்! அறி.

(இ.ள்) இருளைக் காட்டிலும் கரிய கூந்தலையுடைய பெண்ணே! சூரியனுக்கு ஆட்சி வீடு சிம்மம்; நட்பு வீடுகள் தனுசு, மீனம்; உச்ச வீடு மேடம்: நீச வீடு துலாம்: பகைவீடுகள் இடபம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய ஏழு இராசிகளும் என்பதை அறிவாயாக.

சந்திரன்

83. சந்திரர்க்கு நண்டாட்சி தண்டுவில்மீன் பெண்டுறவு
வந்திடபம் உச்சமென மன்னுமே - முந்தவே
நீசத்தே ளாகும் நிலையைந்து இராசிகளும்
பேசும் பகையெனவே பேண்.

(இ.ள்) சந்திரனுக்கு ஆட்சி வீடு கடகம்; நட்பு வீடுகள், மிதுனம், கன்னி, தனுசு, மீனம். உச்சவீடு இடபம். நீசவீடு விருச்சிகம். பகைவீடுகள் மேடம், சிம்மம், துலாம், மகரம், கும்பம் ஆகிய இராசிகள் என்பதைக் கூறுவாயாக.

செவ்வாய்

84. சேய்க்காடு தேளாட்சி தண்டெருது கோலரிவை
வாய்த்தநட் புச்சமே மாநாகும் - தேய்த்துநகர்
நண்டதுவே நீசம் நலமமையா தாகிவரும்
பண்டுரையா நான்கும் பகை.

(இ.ள்) செவ்வாய்க்கு ஆட்சி வீடுகள் மேடம், விருட்சிகம்; நட்பு வீடுகள் இடபம், கன்னி, மிதுனம், துலாம்; உச்சவீடு மகரம்; நீச வீடு கடகம்; பகை வீடுகள் தனுசு, கும்பம், மீனம், சிம்மம் ஆகிய இராசிகள் என்று கூறுவாயாக.

புதன்

85. புதன்மங்கை தண்டாட்சி பொற்றொடியாள் உச்சம்
நிதம்பகையாம் சிங்கம்மீன் நீசம் - இதம்பெறவே
சாற்றரிய இராசிஇரு நான்கையுமே தாலத்
தேற்றமுயர் நட்பாகத் தேர்.

(இ.ள்) புதனுக்கு ஆட்சி வீடு மிதுனம்; உச்சவீடு கன்னி; பகை வீடு சிம்மம்; நீச வீடு மீனம்; நட்பு வீடுகள் மேடம், இடபம், கடகம், துலாம், விருட்சிகம், தனுசு,

மகரம், கும்பம் ஆகிய எட்டு இராசிகள் என்பதைத் தேர்ந்து அறிவாயாக.

வியாழன்

86. பொன்மீனம் வில்லாட்சி போராடு தேள்பகையாம்
துன்னலவன் உச்சம் சுறாநீசம் - பொன்மலைபோற்
பாரமுலை மாதரசே! பற்றியவோ ராறிடமும்
சேரவுற வென்றிதனைச் செப்பு.

(இ.ள்) தனபாரங்களையுடைய பெண்ணரசியே! குருவினுக்கு ஆட்சி வீடுகள் தனுசு, மீனம்; பகை வீடுகள். மேடம், விருட்சிகம்; உச்ச வீடு கடகம்; நீசவீடு மகரம்; நட்பு வீடுகள் இடபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம் ஆகிய ஆறு இராசிகள் என்பதைக் கூறுவாயாக.

சுக்கிரன்

87. புகரேறு கோலாட்சி பொங்கலைமீ னுச்சம்
நிகரற்ற கன்னியதே நீசம் - பகராய்
குடந்தேள் சமன்பகையாம் கூறாத ராசி
துடந்தே தொகையுறவாய்ச் சொல்.

(இ.ள்) சுக்கிரனுக்கு ஆட்சி வீடுகள் - இடபம், துலாம், உச்சவீடு - மீனம்; நீச வீடு கன்னி; சமவீடு - கும்பம்; பகை வீடு - விருச்சிகம்; நட்பு வீடுகள் மேடம், மிதுனம், கடகம், சிம்மம், தனுசு, மகரம் ஆகிய ஆறு இராசிகளும் என்பதைக் கூறுவாயாக.

சனி

88. மந்தனுக்குக் கும்பம் மகரமே ஆட்சியதாம்
சொந்தவுச்சங் கோலாகச் சொல்லலாம் - முந்து விதி
ஆடொன்றே நீசம் அரியபகை நண்டரியாம்
நீடுமிரு மூன்றுறவாய் நேர்.

(இ.ள்) சனிக்குச் ஆட்சி வீடுகள்-கும்பம், மகரம்; உச்சவீடு - துலாம்; நீசவீடு - மேடம்; பகைவீடு - சிம்மம்; நட்பு வீடுகள் - இடபம், மிதுனம், கன்னி, விருட்சிகம், தனுசு ஆகிய ஆறு இராசிகளும் என்பதை அறிந்துகொள்வாயாக.

இராகு

89. காரரவுக் காடேறு கற்கடகம் வல்லுறவாம்
சீருலவு மாட்சிபெண் தேளாகும் - ஆரணங்கே!
நின்முலைபோற் கும்பமுச்சம் நீணிறைமான் மீன்பகையாந்
தன்னிடையே கோளரிநீ சம்.

(இ.ள்) கரிய பாம்பாகிய இராகுவுக்கு நட்பு வீடுகள் - மேடம், இடபம், கடகம்; ஆட்சி வீடுகள் - விருட்சிகம், கன்னி; உச்சவீடு - கும்பம்; நீசவீடு - சிம்மம்; பகைவீடுகள் - மிதுனம், துலாம், தனு, மகரம், மீனம் ஆகிய ஐந்திடங்கள் என்பதைத் தெரிந்து கொள்வாயாக.

கேது

90. செம்பாம்புக் காடுந் தெரிவை யுறவுச்சம்
அம்மிதுனம் தேளாம் அதிநீசம் - அம்பெருது
முன்னுதுலை மீனம் மகரம்சா லிந்நான்கும்
பன்னாட்சி என்றே பகர்.

(இ.ள்) செம்பாம்பாகிய கேதுவுக்கு நட்பு வீடுகள்-மேடம், கன்னி; உச்ச வீடுகள் - மிதுனம், விருட்சிகம்; நீச வீடு - இடபம்; ஆட்சி வீடுகள் - துலாம், மகரம், கும்பம், மீனம் ஆகிய நான்கு; பகை வீடு-கடகம், சிம்மம் என்று கூறுவாயாக.

குளிகன்

91. சீர்த்தகுளி கர்க்குநண்டு தேளுறவாம் சேல்விடையோ
டார்த்தஅறி சால்கையென் றாகிடுமே- சேர்த்தபெரும்
வில்லோடா டுச்சம் மிதுனம் துலைநீசம்
நல்லாட்சி கன்னிமக ரம்.

(இ.ள்) குளிகனுக்கு நட்பு வீடுகள் - கடகம், விருட்சிகம்; பகை வீடுகள் - இடபம், சிம்மம், கும்பம், மீனம்; உச்ச வீடுகள் - தனுசு, மேடம்; நீச வீடுகள் மிதுனம், துலாம்; ஆட்சி வீடுகள் - கன்னி, மகரம் என்பதை அறிவாயாக.

ஆண், பெண் குழந்தைகள்

92. சரமுன் னரிவையாம் சாற்றுபின் னிரண்டாண்
திரமுனிரண் டாண்பின்பெண் செப்பில்-உரமுடனே
தோன்றுய முன்பின்னாண் சொல்லில் நடுப்பெண்ணாம்
மூன்றுகூ றாக முடி.

(இ.ள்) ஓர் இராசியை மூன்று பங்காகச் செய்வதில் சர ராசிக்கு முற்பங்கிற் பெண் குழந்தையாகவும் இரண்டாம் பங்கிலும் மூன்றாம் பங்கில் ஆண் குழந்தைகளாகவும் இருக்கும் என்று கூற வேண்டும். திர ராசிக்கு முதற் பங்கிலும், இரண்டாம் பங்கிலும் ஆண் குழந்தைகளாகவும், மூன்றாம் பங்கில் பெண் குழந்தையாகவும் இருக்கும் என்று கூற வேண்டும். உபய இராசிக்கு முதற்பங்கிலும் மூன்றாம் பங்கிலும் ஆண் குழந்தைகளாகவும் இரண்டாம் பங்கிற் பெண் குழந்தையாகவும் பிறக்கும் என்று கூற வேண்டும்.

போதகன், வேதகன், பாசகன், காரகன்

93. கூறு பலனைக் கொடுவென்போன் போதகனாம்
வேறுபண்ணித் தட்டுவிப்போன் வேதகனாம் - தேறுபலன்
கூட்டுவிப்போன் பாசகனாம் கோல மகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீ வான்.

(இ.ள்) ஒரு சாதகனின் வாழ்வில் வரும் கிரகங்களின் திசா காலங்களில் திசாநாதன் கொடுக்கக்கூடிய சுபபலன்களையோ அல்லது அசுப பலன்களையோ கொடுக்கும்படி செய்யக்கூடிய வல்லமையுடையவன் போதகன். அவ்விதம் கொடுக்கக்கூடிய பலன்களைத் தடுத்து, அதற்கு மாறுபட்ட பலன்களைக் கொடுக்கும்படி செய்கின்ற வல்லமையுடையவன் வேதகன். இவ்விருவரும் இயற்கையாகக் கொடுக்கின்ற பலன்களை மேலும் அதிகமாகக் கொடுக்கும்படி செய்கின்ற வல்லமை யுடையவன் பாசகன். அத்திசைகளில் பொருட் செல்வங்களைத் தரக்கூடிய வல்லமையுடையவன் காரகன்.

சூரியதிசை

94. பானு திசைக்குமந்தன் பாசகனாம் சுக்கிரனோ
மானேகேள்! வேதகனாம் மன்னவனோ - தேனனையாய்
காரகனாம் செவ்வாயோ காசினியோர் தாமறிய
தரணியும் போதகனா மே.

(இ.ள்) தேனைப் போன்று இனிமையாகப் பேசக்கூடிய மொழியினையும், மான் போன்ற கண்களையும் உடைய பெண்ணே! சூரியன் திசையில் சனி - பாசகன்; சுக்கிரன் - வேதகன்; குரு- காரகன்; செவ்வாய் - போதகன். இந்த உலகத்திலுள்ளோர் அறியும்படியாக இதனைக் கூறுவாயாக.

சந்திர திசை

95. இந்து திசைக்குவெள்ளி ஏற்றதோர் பாசகனாம்
விந்தைமலர் நண்பனே வேதகனாம் - மந்தனே
கங்கா நதிபுடைசூழ் காசினியிற் காரகனாம்
அங்கார கன்போ தகன்.

(இ.ள்) சந்திரன் திசையில் சுக்கிரன் - பாசகன்; சூரியன் - வேதகன்; சனி - காரகன்; செவ்வாய் - போதகன் என்பதைக் கங்கை நதி சூழ்ந்திருக்கக் கூடிய உலகத்தோர்க்கெல்லாம் எடுத்துரைப்பாயாக.

குறிப்பு: மலர் நண்பன் - சூரியன்

செவ்வாய் திசை

96. மங்கலனார் தன்திசைக்கு மார்த்தாண்டன் பாசகனாம்
திங்களுமே போதகனாம் சேழையீர்! - பொங்குபுகழ்
ஏயபுதன் வேதகனாம் இத்தரணி யோரறிய
ஆயசனி காரகனே யாம்.

(இ.ள்) சிவந்த இழைகளாலான அணிகலன்களை அணிந்த பெண்ணே ! செவ்வாய் திசையில் சூரியன் - பாசகன்; சந்திரன் - போதகன்; புதன் - வேதகன்; சனி காரகன் என்பதைப் புகழ் பெறும்படியாக இவ்வுலகத்தோர் அறிய எடுத்துரைப்பாயாக.

புதன்திசை

97. புந்தி திசைக்குப் புரவலனே போதகனாம்
சந்திரனே பாசகனாத் தானாவன் - இந்துநுதல்
மின்னனையீர்! செவ்வாயோ வேதகனாம் வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனா வான்.

(இ.ள்) சந்திரனைப் போன்று ஒளிபொருந்திய நெற்றியையும் மின்னலையொத்த இடையினையும் உடைய பெண்ணே ! புதன் திசையில், குரு - போதகன்; சந்திரன் - பாசகன்; செவ்வாய் - வேதகன்; சுக்கிரன் காரகன் என்று கூறுவாயாக.

குறிப்பு: புந்தி - புதன்.

குருதிசை

98. வேந்தன் மகாதிசைக்கு வெய்யனே வேதகனாம்
போந்துவரும் செவ்வாயோ போதகனாம் - காந்திசெறி
சந்திரனோ காரகனாம் தையலே தாரணியில்
அந்தகனே பாசகனா வான்.

(இ.ள்) பெண்ணே ! குருமகாதிசையில், சூரியன் வேதகன்; செவ்வாய் போதகன்; சந்திரன் - காரகன்; சனி- பாசகன் என்பதை அறிவாயாக.

குறிப்பு: அந்தகன் - சனி.

சுக்கிர திசை

99. வெள்ளி மகாதிசைக்கு வேந்தனே போதகனாம்
தெள்ளுபுதன் பாசகனாம் செங்கதிரோன் மெள்ளவரும்
காரகனே தானாகும் காரியோ வேதகனாம்
வாரணியும் கொங்கைமயி லே.

(இ.ள்) கச்சையினால் கட்டப்பட்ட தனங்களையும் மயில் போன்ற சாயலையும் உடைய பெண்ணே ! சுக்கிரனின் திசையில், குரு - போதகன்; புதன் - பாசகன்; சூரியன் - காரகன்; சனி - வேதகன் என்பதை அறிவாயாக.

சனி திசை

100. சனியின் திசைக்குச் சசிபோ தகனாம்
இனியசெவ்வாய் வேதகனென் றேத்தும் -கனிமொழியாய்!
வெள்ளியே பாசகனாம் வேந்தனே காரகனாம்
தெள்ளுதமி ழோருரைத்த சீர்.

(இ.ள்) கனியைப் போன்ற இனிய மொழிகளைப் பேசக்கூடிய பெண்ணே ! சனியின் திசையில், சந்திரன் - போதகன்; செவ்வாய் - வேதகன்; சுக்கிரன் - பாசகன்; சூரியன் - காரகன் என்று தெளிந்த தமிழில் வல்லவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பொது

101. ஒருவர் மகாதிசைக்கு உற்றபல னுண்ண
வருவர் நவக்கிரக மாதே! - அவரவரில்
போதகனும் பாசகனும் போற்றுபொருள் காரகனும்
வேதகனு மாகிவரு வார்.

(இ.ள்) ஒன்பது கிரகங்களின் மகாதிசைகள் நடக்கும் காலங்களில், அந்தந்த கிரகங்களின் புத்திகளில் அவரவர்களுக்குரிய போதகன், பாசகன், காரகன், வேதகன் என மாறிமாறி வருவார்கள்.

இதுவுமது

102. இந்தப் படி நால்வர் எய்தியொரு கோள்திசைக்குள்
வந்துபல னுண்ணும் வகையறிந்தே - சிந்தித்
துரைத்தபலன் ஒத்திருக்கும் ஒண்டொடியே கேளாய்!
தரைத்தமிழோர் தாமறியத் தான்.

(இ.ள்) ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த பெண்ணே! மகாதிசை நடக்கும் காலங்களில் மாறிமாறி வரக்கூடிய புத்திகளில் பாசகாதிபர் என்று சொல்லக்கூடிய போதகன், பாசகன், காரகன், வேதகன் ஆகிய நால்வருடைய பலன்களும் சோதிடக் கலையில் வல்வர்களான தமிழறிந்தோர் கூறிய பலன்களை ஒத்திருக்கும்.

ஆக்கியோன் பெயரும் பலனும்*

103. பேசுமதி ராசிதனிற் பெம்மான்ச தாசிவன்சொல்
வாச மெனுங்கவிதை வையகத்தில் - நாசமிலை
என்றெவரும் போற்றி ஈசன் அருள்பெறுவர்
மன்றதனில் மெய்யாம் மதி.

---

* இந்தப்பாடல் சுவடி எண் 1921 இல் இறுதிப் பாடலாக அமைந்துள்ளது.

(இ.ள்) இவ் உலகத்தில் தலைவனாக விளங்கும் சதாசிவனுடைய பன்னிரு சந்திர இராசிகளைக் குறித்த வெண்பா யாப்பினால் அமைந்த இந்நூலைக் கற்றவர்கள் நீடுழி அழிவின்றி வாழ்வார்கள்; ஈசனின் அருள்பெறுவார்கள் என்ற உண்மையயை அறிவினால் உணர்வாயாக.

இதுவுமது

104. ஆதிவை காசிமதி யைந்திற் சதாசிவனுஞ்
சோதிடத்தை வெண்பாவாய்ச் சொல்லினான் - நீதிவள
கேசனென வாழ்ந்திடுவர் கீர்த்திமிகுங் கற்றவர்க்கு
ஈசனருள் உண்டெென இயம்பு.

(இ.ள்) பிரபவ வருடம், வைகாசி மாதம் ஐந்தாம் தேதி, திங்கட்கிழமை, சதாசிவ சோதிடர் என்பவர் இச்சந்திர காவியத்தை இயற்றினார். இந்நூலைக் கற்றவர்கள் குபேரனைப் போன்று செல்வர்களாய், கல்வியில் வல்லமையுடையோர்களால் புகழ்ப் பெற்றவர்களாய், ஈசன் அருள் பெற்று வாழ்வார்கள்.

சந்திர காவியம் முற்றிற்று

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

	பாடல் எண்.
அஞ்சொன்ப துக்கதிபர்	1
அஞ்சொன்பான் ஒன்றில்	81
அற்பமி லாதிலக்கி	73
ஆகாத யோகமுள	44
ஆதித்தற் காட்சி	82
ஆதிவை காசிமதி	104
இந்தபடி நால்வர்	102
இந்து திசைக்குவள்ளி	95
இரவி இருக்கும்	78
இரவிமுதல் ஒன்பது	29
இலக்கனத்துக் காமிரண்டேழ்	8
இலக்கினத்தோன் அங்கிச	79
இன்ன வகையெல்லாம்	47
உற்றஇ ராகுகேது	11
எட்டுக் கதிபதியாம்	6
ஏற்றதிசை நாதனுக்கும்	33
ஏற்றதிசை யிற்பலன்கள்	32
ஏறுங் குளிகன்	76
ஏறு மிரண்டுபணி	5
ஒருகுளிகன் மேவும்	75
ஒருவர் மகாதிசைக்கு	101
ஒன்பதுபத் தல்லால்	16
ஒன்பதுபத் துக்குடையோர்	18
ஓங்குமட்ட மாதிபதி	7
ஓதுமிது அல்லால்	74
கண்டத்திற் பாம்பு முத	25
கற்கடக இலக்கன	54
கன்னியா இலக்கன	58
காரரவுக் காடேறு	89

	பாடல் எண்.
கும்ப இலக்கனத்திற்	67
கூறும் அரவுடனே	24
கூறு பலனை	93
கூறு மந்த னார்குருவு	49
கூடி விராசரிக்க	70
கேந்திரகோ ணங்களதி	26
கேந்திரத்திற் பத்தாம்	15
கேந்திரத்துக் காதிபதி	30
கொடிஇராகு கேந்தி	21
சந்திரர்க்கு நண்டாட்சி	83
சரமுன் னரிவையாம்	92
சனியின் திசைக்கு	100
சாடுந்திரி கோணம்	14
சார்யோக காரகாள்	40
சாற்றும் பவர்சுபங்க	36
சீர்த்தகுளி கர்க்கு	91
சீரரசர் யோகமது	35
செப்புபுகர் புந்திகொல்லான்	59
செம்பாம்புக் காடு	90
செல்திரிகோ ணாதிபரும்	22
சேய்க்காடு தேளாட்சி	84
சேர்ந்தசிம்ம இலக்க	56
சொல்புதனும் செவ்வாயும்	63
சொல்மிதுன இலக்கனத்தி	52
சொல்லு மிருவோர்க்கு	31
சொல்லுலக்கி னாதிபனும்	71
தருகுருவும் செவ்வாயும்	51

	பாடல் எண்
தருகுருவு மேகொல்லான்	68
தன்னிடப இலக்கனத்தை	50
தனுசுபிறந் தார்சனி	64
தாங்குகண்டங் கோண	27
தானுவெனும் மாயோக	34
திசைசநாதன் பாவியாய்	43
தீயோர் திசையிலந்த	45
துலையிற் பிறந்தவர்க்கு	60
தூண்டுவர் சம்பந்தம்	38
தூயமகர இலக்கனந்தான்	65
தேறுமது மாவிகளி	4
தேளிற் பிறந்தவர்க்கு	62
நன்கேது இராகுவு	20
நன்யோகக் காரர்	28
நாடிரவி கொல்லான்	55
நீசகேந்தி ராதிபதி	2
பத்துக் கதிபதிதன்	17
பலகேந்திர கோண	13
பன்துமட்ட மாதி	77
பன்னொன்று முன்றெ	12
பாரதனில் சுக்கிரனும்	3
பாவிதிசை யாயவர்கள்	42
பானு திசைக்குமந்தன்	94
புகரேறு கோலாட்சி	87

	பாடல் எண்.
புதன்மங்கை தண்டாட்சி	85
புந்தி திசைக்கு	97
பேசுமதி ராசிதனிற்	103
பொன்மீனம் வில்லாட்சி	86
மந்தனுக்குக் கும்பம்	88
மன்யோக காரகா	37
மாண்பிலக்கி னாதிபதி	72
மாரகத்தா னந்தன்னில்	9
மாரகத்தோ டத்தினுக்கு	10
மாரகாள் தன்னுடைய	46
மீதுமதி கொல்லான்	53
மீறுமிரு பாம்பிருந்த	23
மீன இலக்கனந்தான்	69
மென்மேட இலக்கன	48
மேலிருவ ருங்கொல்லார்	66
வையதுநிலை மாரகங்கள்	80
வளைந்தகுரு சூரியனும்	61
விண்டபத்துக் காதிபர்க்கு	19
விரைந்துவரும் மாயோக	39
வின்கேது இராகுவுக்கு	41
வெள்ளி மகாதிசைக்கு	99
வேந்தன் மகாதிசைக்கு	98
வேறுபுதன் கொல்லான்	57

3. சர்வார்த்த சிந்தாமணி

திசைவிளக்கம்

பொருளடக்கம்

நூல் 141

காப்பு 141

பாவ திசை பலன்கள் 142

இலக்கன பாவ திசைப்பலன்கள் 142

இரண்டாம் பாவ திசைப்பலன்கள் 143

மூன்றாம் பாவ திசைப்பலன்கள் 144

நான்காம் பாவ திசைப்பலன்கள் 145

ஐந்தாம் பாவ திசைப்பலன்கள் 146

ஆறாம் பாவ திசைப்பலன்கள் 147

ஏழாம் பாவ திசைப்பலன்கள் 147

எட்டாம் பாவ திசைப்பலன்கள் 148

ஒன்பதாம் பாவ திசைப்பலன்கள் 149

பத்தாம் பாவ திசைப்பலன்கள் 150

பதினோராம், பன்னிரண்டாம் பாவதிசைப்பலன்கள்

பாவ திசை பலன்கள்

சூரியதிசைப் பலன்கள் 151

பன்னிரு இராசிகளில் சூரியன் நிற்க, சூரியதிசைப் பலன்கள் 153

சந்திரதிசைப் பலன்கள் 155

பன்னிரு இராசிகளில் சந்திரன் நிற்க, சந்திரதிசைப் பலன்கள் 157

செவ்வாய்திசைப் பலன்கள் 159

பன்னிரு இராசிகளில் செவ்வாய் நிற்க, செவ்வாய்திசைப் பலன்கள் 160

இராகு, கேது திசைப் பலன்கள் 164

குருதிசைப் பலன்கள் 165
பன்னிரு இராசிகளில் குரு நிற்க,
குரு திசைப் பலன்கள் 166

சனிதிசைப் பலன்கள் 171
பன்னிரு இராசிகளில் சனி நிற்க,
சனிதிசைப் பலன்கள் 172

புதன்திசைப் பலன்கள் 176
பன்னிரு இராசிகளில் புதன் நிற்க,
புதன் திசைப் பலன்கள் 176

சுக்கிரதிசைப் பலன்கள் 180
பன்னிரு இராசிகளில் சுக்கிரன் நிற்க,
சுக்கிர திசைப் பலன்கள் 180

செய்யுள் முதற்குறிப்பு அகராதி 185

துணை நூல் 187

சர்வார்த்த சிந்தாமணி

காப்பு

வினாயகர் வணக்கம்

ஒருகொம் பிரண்டுசெவி மும்மத நால்வாய்
பொருசெங்கை ஐந்துடைய புத்தேள்-வருகங்கை
ஆறுதரித் தோன்மைந்தன் ஆனைமுகத் தோன்நினைந்
தேழ்பிறப் புந்தீர வெட்டு.

(இ.ள்) தேவர் உலகிற்குத் தலைவனும் கங்கையாற்றினைச் சடாமுடியில் மறைத்திருப்பவனு மாகிய சிவபெருமானின் மைந்தன் விநாயகன். அவன் ஒற்றைக் கொம்பினையும் இரு செவியையும் மும்மதங்களையும் தொங்குகின்ற வாயான துதிக்கையோடு ஐந்து கரங்களை உடைய ஆனையின் முகத்தை உடையன். அவன் நம் ஏழு பிறப்பையும் நீக்கி, மறுபிறவியில்லாமல் செய்யக் கூடியவன். அத்தகையவன், இந்நூல் முழுமையாக நிறைவேற அருள வேண்டும் என்பது இப்பாடலில் உணர்த்தப்படுகிறது.

முருகன் வணக்கம்

மருமலர்க் கடப்ப மாலைமார் பசுத்தெம்
முருகனைப் பணிகுது மத்தமிழ்க் குறித்தே.

(இ.ள்) நறுமணம் மிக்க கடப்ப மலர் மாலையைத் தன் மார்பகத்தே அழகுபெற சூடியுள்ள எம்மனதில் என்றென்றும் தங்கியிருக்கும் முருகப் பெருமான இந்நூல் நிறைவேற வேண்டிப் பணிகின்றேன்.

நூல்

பாவ திசைப்பலன்கள்

இலக்கன பாவதிசைப்பலன்கள்

1. இலக்கினத் துடையோன் இரண்டுநான் கைந்தேழ்
ஈரைந்தொன் பானுடை யோர்கள்
கலக்கமில்லாத திசைபொசிப் பதனிற்
கண்டிடும் பலனெலாம் சுபமாம்
சொலற்கரும் விழியாய் ஏழிரண் டுடையோர்
சுபபலன் விசேடமாய்ச் சொல்வர்
விலக்கரும் செல்வம் புத்திர லாபம்
விவாகங்க ளுண்டென விளம்பே.

(இ.ள்) சொல்லுவதற்கு அரிய அழகான கண்களை உடைய பெண்ணே ! இலக்கனாதிபன், இரண்டாம் இடத்தோன், நான்காமிடத்தோன், ஐந்தாமிடத்தோன், ஏழாமிடத்தோன், ஒன்பதாமிடத்தோன், பத்தாமிடத்தோன் ஆகியோருடைய திசைகளிலும் புத்திகளிலும் சுப பலன்களாக நடக்கும். ஏழாமிடத்தோன், இரண்டாமிடத் தோன் ஆகியோருடைய திசைகளிலும் புத்திகளிலும் சுபபலன்கள் சிறப்பானவையாக இருக்கும். நீக்குவதற் கரிய செல்வம் உண்டாகும்; பிள்ளைகள் தோன்றுவர்; திருமணங்கள் நடைபெறும் என்று சொல்வாயாக !

இதுவுமது

2. கண்டலக்கினத்தோன் பாபியு மாகிற
கலந்தவர் பொசிப்பெலாம் கடினம்
கொண்டலக் கினத்தோன் திசையினிற் றானே
கூறிய ஆறெட்டு மூன்றும்
விண்டப்பன் னொன்றீ ராறினுக் குடையோர்
விரும்பமூண் பலன்விப ரீதம்
வண்டமர் குழலாய் ! இலக்கின பாவம்
வரும்வழி யாய்ப்பல னுரையே.

(இ.ள்) வண்டுகள் மொய்க்கக் கூடிய கூந்தலை உடைய பெண்ணே ! இலக்கனாதிபன் திசையில், இலக்கனத்தோன் திசையில், ஆறாமிடம், எட்டாமிடம், மூன்றாமிடம், பதினோராமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றிற்கு உரியவர்களின் புத்தியில் விபரீத பலன்கள் உண்டாகும். இலக்கன பாவத்தின் தன்மையினை அறிந்து பலனைக் கூறுவாயாக.

இரண்டாம்பாவ திசைப்பலன்கள்

3. வாக்கெனும் இரண்டுக் குடையவன் பவனாய்
வக்கிரன் சனியர வுண்ணிற்
போக்கிடும் தனங்கள் இரண்டினிற் பாபர்
பொருந்திடில் அவன்றிசை ராச
நோக்கெலாம் போமே தானமு நீக்கி
நுண்ணிய காவலும் வருமே
நாக்கெலாம் பிசரும் மானவீ னமுமாய
நடந்திடும் பாவருண் ணிடினே.

(இ.ள்) இரண்டாமிடத்தோன் திசையில், இரண்டாமிடத்து அதிபதி பாவியாகச் செவ்வாய், சனி, ராகு, கேது இவர்களுடைய புத்திகளில் செல்வங்கள் அழியும். இரண்டாமிடத்தில் பாவிகள் நின்றால், இரண்டாமிடத்ததிபதி திசையில் ராஜயோகங்கள் நீங்கிவிடும். பாவர்களுடைய புத்திகளில் செல்வம் கையை விட்டுப் போகும். சிறைவாசம் ஏற்படும். நாக்கு தடுமாறும். மானக்கேடு நேரிடும்.

இதுவுமது

4. அன்னவன் திசைமேற் சோதர பீடை
அன்றியும் களத்திர நாசம்
சொன்னவை கொடுப்பர் சுபரதிற் கூடிற்
துர்பலன் சமனெனச்சொல்வர்

முன்னமே இரண்டில் இருநதவன் சுபனாய்
மொழிந்திடும் உடையவன் சுகனால்
இன்னவர் திசையிற் சுபர்களும் உண்ணில்
எய்திய பலனெலாம் சுபமே.

(இ.ள்) மேலும் சகோதர பீடையும் களத்திர நாசமும் உண்டாகும். இரண்டாமிடத்தோன் திசையில் இரண்டாமிடத்ததிபதி பாவராக, இரண்டாமிடத்தில் சுபக்கோள்கள் நின்றால், நன்மைகளும் தீமைகளும் சமமாக நடக்கும். இரண்டாமிடத்தில் சுபக்கோள் நிற்க இரண்டாமிடத்தோனும் சுபனாக இருப்பானேயானால், அவனுடைய திசைகளில், சுபக்கோள்களின் புத்திகளில் சுபமான பலன்கள் உண்டாகும்.

மூன்றாம்பாவ திசைப்பலன்கள்

5. மூன்றினுக் குடையோன் பாபனாய் இருக்க
முகிழ்த்துமே பாபரும் கூடிற்
தோன்றிய திசையுள் அக்கினி பயமும்
சோரர்நோய் ஆயுத விரணம்
ஊன்றிய பாவி ஒருவனா யிருக்கில்
ஒன்றிய திசைபுத்தி சோரம்
மாந்திகழ் கண்ணாய்! இராசகோ பமுமே
வந்திடும் விசனமும் வளரும்.

(இ.ள்) மானின் கண்களையொத்த சாயலையுடைய பெண்ணே! மூன்றாமிடத்ததிபதி பாவியாக இருக்க, அவனோடு பாவிகூட, அவன் திசையில் தீயினாலும் கள்ளராலும், நோயினாலும் துன்பம் உண்டாகும். ஆயுதங்களால் காயம் உண்டாகும். மூன்றாமிடத்தில், ஒரு பாவக்கோள் இருப்பில், அவனுடைய திசை புத்தியில் திருட்டுப்போதல் நிகழும். அரச கோபத்திற்கு ஆளாக நேரிடும். துன்பங்கள் மேன்மேலும் வளரும்.

6. உச்சமே மூன்றில் இருந்திடும் பாபிக்
குரைத்தவை சம்பல னுறுமால்
அச்ச மிராத சோதர நாசம்
ஆய்விடு மூன்றினுக் குடையோன்
கச்சணி முலையாய்! சுபன்திசை சுபருண்
காட்டுமே சௌரிய லாபம்
நிச்சய மான சோதர லாபம்
நிறைதன லாபமுண் டாமே.

(இ.ள்) கச்சணிந்த தனங்களை உடையவனே! மூன்றாமிடத்தோன் பாவியாக இருக்க, அந்த இடத்தில் உச்சம் பெற்ற கோள் இருந்தால், சமபலனாக நடக்கும். சகோதரர் அழிவு ஏற்படும். மூன்றாமிடத்தோன் சுபராக இருக்க, சுபக்கோள்களின் புத்திகளில் சகல வசதிகளும் உண்டாகும். சகோதரிகளால் இலாபம் கிடைக்கும். தனலாபம் உண்டாகும்.

நான்காம்பாவ திசைப்பலன்கள்

7. கொடியவர் நான்கிற் குடையவன் திசையிற்
கூடியே பாபரும் உண்ணிற்
படிமிசை பந்து மரணமும் கிலேசம்
பண்ணுவர் தனமும்நா சமதாம்
கடியநீ சத்தோ டுறைந்தவர் உண்ணிற்
கருதிய புத்திர நாசம்
மிடிபடு மூன்றோன் மிசைந்தன னாகின்
மெலிகுவர் என்றனர் மின்னே.

(இ.ள்) மின்னலை ஒத்தவளே! நான்காம் இடத்தோன் பாவியாக இருக்க, அவன் திசையில் தீயக்கோள்களின் புத்திகளில் உறவினர் மரணமடைவர்; மனத்துயரம் உண்டாகும்; செல்வம் நாசமாகும்; நான்காமிடத்தோன் நீசக்கோளோடு சேர, அவனுடைய புத்திகளில் புத்திர நாசம் ஏற்படும்; வறுமை ஏற்படும். மூன்றாமிடத்தோன் புத்தியில், துயரத்தால் மெலிவர்.

இதுவுமது

8. எண்ணொரு நான்கிற் குடையவன் சுபனாய்
ஏற்றவன் திசைசுபர் உண்ணிற்
றணணெனுஞ் சொல்லும் பூமிலா பமுமே
தான்வரும் இராசயோ கத்தாற்
பண்ணொழுகியசொற் பைந்தொடி கேளாய்!
பகர்நர வாகனம் வருமே
பெண்ணுமோ ரைந்திற் குடையவன் பாபி
இருப்பவந் தன்றிசை இசைப்பாம்.

(இ.ள்) இனிய இசையையொத்த சொற்களையுடைய பசுமையான கொடி போன்ற பெண்ணே! கேட்பாயாக. நான்காமிடத்தோன் சுபராக, அவன் திசையில், சுபக்கோள்களின் புத்திகளில் பூமி இலாபம் உண்டாகும்; இராச யோகமாகும். நர வாகனம் கிடைக்கும்.

ஐந்தாம்பாவ திசைப் பலன்கள்

9. உண்டிடும் கோளும் பாபியே யாகில்
உரைப்பது புத்திர நாசங்
கண்டிடும் பொசிக்கும் போசனம் அற்பம்
கண்டவைந் துடையவன் சுபனாய்ப்
பண்டதில் உண்போர் சுபருமே யாகிற்
பகர்வது புத்திர லாபம்
வண்டமர் குழலாய்! ராசநோக் கமுமே
வருமென்பர் சோதிட வல்லோர்

(இ.ள்) ஐந்தாமிடத்தோன் பாவியாக, அவனுடைய திசையில், தீயக்கோள்களின் புத்திகளில் புத்திர நாசம் ஏற்படும். சரியான உணவு கிட்டாது. ஐந்தாமிடத்தோன் சுபனாக, நற்கோள்களின் புத்திகளில் புத்திர இலாபம் உண்டாகும். அரசர்களின் ஆதரவும் கிடைக்கும். வண்டுகள் மொய்த்திருக்கக் கூடிய

கூந்தலை உடைய பெண்ணே ! இதனைச் சோதிட வல்லவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள் என்பதை அறிவாயாக.

ஆறாம்பாவ திசைப்பலன்கள்

10. ஆறினுக் குடையோன் பாபனு மாகி
அவன்திசை பாபர்வந் துண்ணில்
கூறிய ராச கோபமே மீறும்
கொண்டிடும் வாந்தியும் மேகம்
வீறிய வியன்சட மெல்லாம்
விரைந்திடும் அக்கினி பயமே
மாறியே சுபனாய்ச் சுபருண்ண அதிலே
வளருஞ்சத் துருவென வகுத்தார்.

(இ.ள்) ஆறாமிடத்தோன் பாவியாக இருக்க, அவன் திசையில் பாவிகளின் புத்திகளில், அரசர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். வாந்தி, மேகம், காசம் முதலான நோய்கள் உண்டாகும். தீயினால் பயம் ஏற்படும். ஆறாமிடத்தோன் சுபனாக, அவன் திசையில் சுபர்களின் புத்திகளில் பகைவர்கள் அதிகரிப்பார்கள்.

ஏழாம்பாவ திசைப்பலன்கள்

11. சத்தமத் துடையோன் பாபனு மாகிச்
சார்ந்துண்போர் பாபரே யாகில்
நித்தமும் பூசல் களத்திர விரோதம்
நீர்ச்சுருக் குற்றிடும் கடனாம்
மெத்தவும் தனம்போம் இராசகோ பமுமே
விளம்புவர் சுபரெனின் மின்னே
உத்தம மாகும் களத்திர லாபம்
உண்டுபொன் சௌக்கியம் வருமே.

(இ.ள்) மின்னலை ஒத்தவளே ! ஏழாமிடத்தோன் பாவியாக இருக்க, அவன் திசையில் பாவர்களின் புத்திகளில், சண்டை, களத்திர விரோதம், உண்டாகும். நீர்ச்சுருக்கு நோய் ஏற்படும். கடன் வாங்க வேண்டியதாகும். செல்வம் கைவிட்டுப்போகும். அரச கோபத்திற்கு ஆளாக நேரிடும் ஏழாமிடத்தோன் சுபராக இருக்க, அவன் திசையில் சுபர்களின் புத்திகளில் களத்திரத்தால் சுகம் உண்டாகும்; பொன், பொருள் சேர்ந்து நன்மைகள் உண்டாகும்.

எட்டாம் பாவ திசைப் பலன்கள்

12. அட்டமத் ததிபன் பாபியு மாகி
அதிற்சனி சேயர வுண்ணில்
நட்டம தாயுள் தனமுமே நாசம்
நாடிய புத்திர நாசம்
கட்டழ கியபூந் தாரமும் நாசம்
கண்டவ னுடையவன் சுபனாய்
இட்டமாய்ச் சுபரும் எய்திடப் பலனும்
இயம்புவன் ஏந்திழை முலையே !

(இ.ள்) அணிகலன்கள் பூண்ட தனங்களையுடைய பெண்ணே ! எட்டாம் இடத்தோன் பாவியாகி, அவன் திசையில் சனி, செவ்வாய், இராகு, கேது இவர்களுடைய புத்திகளில், பொருள் நஷ்டம் உண்டாகும். செல்வம், புத்திரர்கள் அழிவு ஏற்படும். மனைவிக்கும் நாசம் ஏற்படும். எட்டாமிடத்தோன் சுபனாகி சுபர் பார்வை பெற்று, அவனுடன் சுபரும் சேர அதன் பலனைக் கூறுகிறேன்.

இதுவுமது

13. தடம்குளம் காண்பன் புண்ணிய தீர்த்தம்
சரீரஆ ரோக்கியம் பெறுவன்
இடம்பெறும் சுபரும் பாபரும் கலந்தே
இருந்திடும் பலனையே இசைக்கில்

வடம்பெறு முலையாய் ! சுகதுக்கம் சரியாய்
வருமென்பர் இராசிகள் தோறும்
தொடர்ந்ததோர் சுபரும் பாபரும் கலந்தாற்
சுபபலன் தீமையும் தொடரும்.

(இ.ள்) நீர்நிலைகளை வெட்டுவான். கோயில் குளங்களுக்குச் சென்று புண்ணிய நீராடுவான். உடல் ஆரோக்கியத்துடன் விளங்குவான். பாவர், சுபர் கலந்து இருப்பின், சுக துக்கங்களும் சமனாக இருக்கும். இராசிகள் தோறும் சுபரும் பாவரும் கலந்திருந்தால் சுபபலனும் தீயபலனும் உண்டாகும்.

ஒன்பதாம்பாவ திசைப்பலன்கள்

14. ஒன்பதுக் குடையோன் பாபனு மாகி
உண்பவர் பாபரே யாகில்
தன்பதி தனிலே காவல்நோய் துக்கம்
தணலென எரிவுநோய் உண்டாம்
துன்பமில் லாத சுபனுடை யவனாய்த்
தோன்றியே சுபருண்ணும் காலை
இன்பமே அல்லால் வெகுதன இலாபம்
இணங்குவே ளாண்மையும் வருமால்.

(இ.ள்) ஒன்பதாம் இடத்தோன் பாவியாகி, அவன் திசையில் நடக்கும் பாவர்களுடைய புத்திகளில், தன் இடத்தில் காவலில் வைக்கப்படுதல் ஏற்படும். துக்கம் உண்டாகும். அனல் போல் எரிக்கக் கூடிய நோய் உண்டாகும். ஒன்பதாம் இடத்தோன் சுபனாகி, அவன் திசையில் சுபர்களின் புத்திகளில் இன்பம் உண்டாகும். அதிகமான தன இலாபம் உண்டாகும். வேளாண்மை சிறக்கும்.

பத்தாம் பாவ திசைப்பலன்கள்

15. வலலவீ ரைந்துக்குடையவன் கொடிதாய்
வந்துண்போர் கொடியரே யாகிற்
புல்லிய திசைபோம் பேணுவார் பொன்போம்
புதுமதிப் பசுக்களைப் போக்கும்
சொல்லிய சேயில் சோதர விருத்தி
துயர்சனி இராகுவி னாலே
நல்லியல் பின்றிப் பேய்புண்ணைக் கொடுப்பன்
நடந்திடும் இராசகோ பமுமே.

(இ.ள்) பத்தாம் இடத்தோன் பாவியாகி, அவன் திசையில் நடக்கும் பாவர்களுடைய புத்திகளில், பொன் அழிந்து போகும். பசுக்கள் நாசமாகும். செவ்வாய் புத்தியில் சகோதரர்கள் பிறப்பர். சனி, இராகு புத்திகளில் புண்கள் ஏற்படும். அரச கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

பத்தாம், பதினோராம், பன்னிரண்டாம் பாவதிசைப் பலன்கள்

16. காட்டும் ஈரைந்துக் குடையவன் நலனாய்க்
கருதிய சுபரும்அங் கிருந்துற்
றூட்டுவோர் நன்றேல் வெகுதன லாபம்
ஓங்கிய கீர்த்திநற் றருமம்
தீட்டுறும் இராச யோகமுண் டுலகிற்
திசையெலாம் பெற்றுல காள்வன்
ஈட்டுபன் னொன்று மூன்றுமோர் பலனாம்
இரண்டுமீ ராறுமிப் படியே.

(இ.ள்) பத்தாம் இடத்தோன் சுபனாகி, அவன் திசையில், சுபர்கள் அவன் வீட்டில் இருக்கில், அதிகமான தனஇலாபம் உண்டாகும். புகழ் கிடைக்கும். நல்ல தர்ம காரியங்கள் நடைபெறும். இராசயோகம்

உண்டாகும். எண்திசைக்கும் போற்றும் வண்ணம் அரசாள்வான். பதினொன்றும் மூன்றும் ஒத்த பலனை உடையவை. இரண்டும் பன்னிரண்டும் ஒத்த பலன் உடையவை.

சூரியதிசைப் பலன்கள்

17. சொல்லுநல் லிடமாய்ச் சூரிய னுச்சம்
தோன்றிடில் அரசியல் கொடுப்பன்
புல்லுதுர்த் தானம் பொருந்திடி வியமும்
பொன்றுறும் தானமும் போகும்
சொல்லுநீ சத்தே சேர்ந்திடத் திசையிற்
றுன்பம் ஆபத்துச் சேரும்
வெல்லமூ லத்ரி கோணமுற் றிருந்தால்
மேவிய திசைஇன்பம் மேவும்.

(இ.ள்) சூரியன் நல்ல இடத்தில் உச்சம் பெற்று விளங்கிடில், அவன் திசையில் அரசியலில் சிறந்து விளங்குவான். தீய இடங்களில் இருப்பின், அவன் திசையில் அந்தத் தானப் பலனைக் கெடுப்பதோடு, மனைவிக்கும் அழிவு நேரும். சூரியன் நீச இடத்தில் இருந்து, அவன்திசை நடக்கும் பொழுது துன்பமும் ஆபத்தும் வந்து சேரும். மூலத் திரிகோணங்களில் சூரியன் இருந்தால், அவன் திசையில் இன்பமே விளங்கும்.

இதுவுமது

18. கேந்திரம் துக்கம் சத்துருவில் லங்கம்
கிட்டுமே சத்துரு பீடை
சார்ந்தஅட் டமத்தில் இருந்தவன் திசையிற்
தான்வரும் மரணம்தப் பாது
போந்தன வர்க்கம் பொருந்திய போகம்
போய்விடும் சௌக்கியம் பொருந்தும்
சேர்ந்தநற் பெலமாய் வெகுதன லாபம்
சிறந்திடச் சௌக்கியம் வருமே.

(இ.ள்) சூரியன் 1,4,7,10 ஆகிய கேந்திர இடங்களில் இருந்தால் துக்கம் உண்டாகும். பகைவர்களால் வில்லங்கமும் துயரங்களும் நேரிடும். சூரியன் அட்டமத்தில் இருப்பின், அவன் திசையில் தப்பாது மரணம் நேரிடும். செல்வம் அழியும். சுகக்கேடு உண்டாகும். சூரியன் பலம்பெற்று இருப்பின் வசதிகள் பெருகும். தன இலாபம் உண்டாகும். சுகமுண்டாகும்.

இதுவுமது

19. மேவிஇலக் கனத்தே வருங்கதிர் திசையேல்
விரும்பிய இராச்சியம் பெறுவன்
தாவிலக் கனத்துக் குடையவன் இருந்த
தானத்துக் குடையவன் பொசிப்பில்
ஓவருந் தனங்கள் உற்றிடும் பாபம்
ஒன்றிட அருந்திடப் பெற்றாற்
காவிசேர் விழியாய்! கேளதி ரோகம்
கண்வலி உண்டெனக் கருதே.

(இ.ள்) இலக்கனத்தில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில் விரும்பிய இராச்சியத்தை அடைவான். இலக்கனத்தோன் இருந்த தானத்திற்கு உடையவனின் புத்தியில் செல்வம் சேரும். சூரியன், பாவருடன் சேர அதிக நோய்கள், கண்வலி போன்றவை உண்டாகும்.

இதுவுமது

20. ஆறினை உடையோன் வீட்டினிற் கதிரும்
அழகிய ஏழின்நா தனுமாய்ச்
சீறிய ஆறிற் சேர்ந்திடத் தனம்போம்
செப்பிய களத்திரம் மாளும்
மாறிவன் ஆட்சி நாட்குடை யவனாய்
வளரும்சத் துருவெனும் வீடேற்
கூறிய வித்தை போய்விடும் துக்கம்
கொடுத்திடும் இரத்தகா சமுமே.

(இ.ள்) சூரிய திசையில் ஆறாமிடத்தோன் நின்ற வீட்டில் கதிர் இருக்க, ஏழாமிடத்தோன் ஆறாமிடத்தில் இருந்திட, செல்வம் அழிந்து போகும். களத்திர நாசம் ஏற்படும். சூரியன் ஆட்சி பெற்று ஆறாமிடத்துற்கு உடையவனாய் இருப்பின் தொழில் கெடும். துக்கம் உண்டாகும். சாதகனுக்கு இரத்த காச நோய் உண்டாகும்.

இதுவுமது

21. அட்டமத் திருந்தாற் கோத்திர நாச
மாயுத பீடைசத் துருவாற்
றொட்டகேந் திரங்க டோன்றிடன் முழங்காற்
றுடைபுண்பிற் பாதியே தோன்றுங்
கட்டழ குடையாய் அட்டமத் ததிபன்
கலந்திடிநற் றேசசஞ் சாரத்
திட்டமாய் ஆறிற் சேர்ந்திடிற் சுரமே
செப்புவ ரதின்மகத் துவமே.

(இ.ள்) சூரிய திசையில், சூரியன் எட்டாம் இடத்தில் இருந்தால், குல நாசம் உண்டாகும். ஆயுதங்களாலும் பகைவராலும் கேடுண்டாகும். சூரிய திசையில், சூரியன் கேந்திரங்களில் இருப்பின் முழங்கால், தொடை முதலான இடங்களில் புண் தோன்றும். சூரியன் ஆறாமிடத்தில் இருக்க, சுரம் உண்டாகும்.

பன்னிரு இராசிகளில் சூரியன் நிற்க, சூரிய திசைப் பலன்கள்

22. மேடமே கதிரேற் பூரண யோகம்
விடையினில் சனவிரோ தமுமாம்
நாடவே யாழிற் சாத்திர வித்தை
நற்சுப வரத்துவே ளாண்மை

கூடவே ஞெண்டில் வெகுதன லாபம்
மேகோளரி இப்படி யாகும்
தேடவே பெணபொன துலைசாவ நாசம்
தேளெனில் தனத்தையே கொடுப்பான்.

(இ.ள்) மேடத்தில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், முழுமையான யோகம் கிடைக்கும். இடப இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், சன விரோதம் உண்டாகும். மிதுன இராசியில் சூரியன், சூரிய திசை நடக்கில் சாத்திரங்கள் கற்பன். தொழில் முன்னேறும். நன்மைகள் உண்டாகும். வேளாண்மை சிறக்கும். கடக இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில் அதிகமான பொருள் இலாபம் உண்டாகும். சிம்ம இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், மிகுந்த செல்வம் கிட்டும். கன்னி இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், பொன் கிடைக்கும். துலாம் இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், அனைத்தும் நாசமாகும். விருச்சிக இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில் செல்வம் சேரும்.

இதுவுமது

23. சிலைதனில் தனமாம் மகரத்திற் பாபம்
சேர்குடம் வியாதியாம் மீனம்
உலைவில் தாயாதி தனமிவன் கொள்வன்
உரைத்தவை ஆறெட்டும் அல்லால்
நிலைபெறும் ஈரா றாமெனிற் பலன்கள்
நிகர்த்தலத் துர்ப்பலன் கொடுப்பன்
கலையறி மானே! சூரிய திசையூண்
கருதுமுன் னிடமறிந் துரையே.

(இ.ள்) தனுசு இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், பொருள் சேரும். மகர இராசியில் சூரியன் இருக்க, சூரிய திசை நடக்கில், பாவம் வந்து

சேரும் கும்ப இராசியில் சூரியன் இருக்க, சூரியன் திசை நடக்கில் முன்னோர்கள் சேர்த்து வைத்த பொருளை அடைவான். ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இராசியில் சூரியன் நின்று சூரிய திசை நடக்கில தீய பலன்களாகும். கலைகள் பலவற்றையும் கற்ற மானின் சாயலை உடையவளே ! சூரிய திசை, அதன் புத்திகள் ஆகியவற்றை, அவற்றின் இடங்களை அறிந்து உரைப்பாயாக.

சந்திரதிசைப் பலன்கள்

24. சந்திரன் உச்சம் இராச்சிய லாபம்
சௌக்கியம் யாவையும் கொடுக்கும்
பிந்திய நீச மந்திரி பகையாம்
பேசிய பெரும்பகை குருவும்
வந்திடும் அதியம் தேய்ந்திடத் துக்கம்
வளர்குன்மம் கிராணியாம் வளர்வோன்
முந்திய திசையில் நாரியர் போகம்
முந்துவெண் பட்டுகள் வருமே.

(இ.ள்) சந்திரன் உச்சம் பெற்று விளங்க, சந்திர திசை நடக்கில், இராச்சிய இலாபம் உண்டாகும். பலவித சௌகரியங்களும் கிடைக்கும். சந்திரன் நீசம், பெற்று சந்திர திசை நடக்கில், மந்திரியுடன் பகை உண்டாகும். குருவோடும் பெரும்பகை தோன்றும். தேய்பிறை சந்திரனாக இருந்து, சந்திர திசை நடக்கில், துக்கம் உண்டாகும். குன்மம், கிராணி முதலான நோய்கள் உண்டாகும். வளர்பிறை சந்திரனாக இருந்து, சந்திரதிசை நடக்கில், பெண்களால் சுகம் உண்டாகும். முத்தாபரணங்களையும் பட்டுப் பீதாம்பரங்களையும் அணிவான்.

இதுவுமது

25. மனத்தினில் துக்கங் கிராணிகள் காணும்
மயங்கிட எவர்களும் காணாக்
கனத்தினின் மேடம் அந்நிய தேசங்
களும்வன வாசமும் காட்டும்
சினத்தினில் கீர்த்திச் சிரரோக மாகும்
சேர்ந்திடும் இடபத்தில் றானே
சனத்தவி ராச யோகமும் புத்ரர்
சௌக்கியம் சதாதினம் வருமே..

(இ.ள்) மேட இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், சாதகனுக்குக் கிராணி நோய்கள் உண்டாகும். மயக்கம் ஏற்படும். மேட இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், பிற தேசங்களுக்குச் செல்ல நேரிடும். காட்டில் சென்று தங்க வேண்டிய சூழல் உருவாகும். புகழ் உண்டாகும். அதே நேரத்தில் தலையில் நோய் உண்டாகி வருத்தும். இடப இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், இராச யோகம் உண்டாகும்.புத்திரர்களால் நன்மைகள் கிட்டும். எந்நாளும் அனைத்து விதமான பாக்கியங் களும் வந்து சேரும்.

இதுவுமது

26. குலம்புரி தொழிலில் இலாபம்வா கனங்கள்
கூறிய வாத்தியம் பெறுவன்
நிலம்புகழ் திசையில் பின்வரும் கூறில்
நிகழ்த்திய பலனெலாம் வருமே
கலன்பெறு முலையாய்! பாபரைக் கூடிக்
கண்டமுற் பாகமே தாய்போம்
பலன்பெறும் சுபரேல் பலனிலை கண்டாய்
பகர்பிதாச் சேதம்பிற் பாகம்.

(இ.ள்) குலத்தொழில் இலாபங்கள் கிடைக்கும். வாகனச் சேர்க்கை உண்டாகும். இசைக் கருவிகளை வாங்கி மகிழ்வான். சந்திர திசையின் பின் கூறில் இந்தப் பலன்களெல்லாம் கிடைக்கும். அணிகலன்களை அணிந்த தனங்களை உடையவளே ! சந்திரன் பாவரைக் கூடி இருந்தால், சந்திர திசையின் முற்பகுதியில் தாய்க்குக் கண்டமாகும். சந்திரன் சுபருடன் கூடியிருப்பின் இத்தீங்கு நேராது. ஆனால் சந்திர திசையின் பிற்பகுதியில் தந்தைக்குக் கண்டம் நேரிடும்.

பன்னிரு இராசிகளில் சந்திரன் நிற்க, சந்திர திசைப் பலன்கள்

27. தண்டுறை மதியின் திசைவரும் காலம்
சஞ்சார சஞ்சார சீவன மாகும்
தண்டுறை போதில் கடற்றுறை இலாபம்
நல்லிசை தனங்களும் வளரும்
பண்டுசொல் சிங்கம் வெகுதன லாபம்
பகர்சனம் வளர்விக்கும் பெண்ணேல்
வண்டுறை குழலாய்! நீசர்பெண் போகம்
வர்த்திக்கக் கூடியே மகிழ்வார்.

(இ.ள்) வண்டுகள் உறையக் கூடிய மலர்களைச் சூடிய கூந்தலையுடையவளே ! மிதுன இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், அலைச்சலான தொழில் கிடைக்கும். கடக இராசியில் சந்திரன் இருக்க, சந்திரன் திசை நடக்கில், கடல் வாணிபத்தால் இலாபம் உண்டாகும். செல்வம் சேரும். சிம்ம இராசியில் சந்திரன் இருக்க, சந்திரன் திசை நடக்கில், மிகுந்த செல்வம் சேரும். உற்றார் உறவினர்கள் சேர்வர். கன்னி இராசியில் சந்திரன் இருக்க, சந்திரன் திசை நடக்கில், தீய பெண்களின் சேர்க்கையினால் மகிழ்வர்.

இதுவுமது

28. துலைவரு மதியேல் பெண்கள்வஞ் சனையால்
துக்கமும் தரித்திரம் வருமே
நிலைபெறு தேளில் அரிட்டம தாகும்
நெடும்பகை தரித்திர நாசம்
சிலைகொஞ்ச இலாபம் வாணிபம் பலிக்கும்
சேர்ந்திடு நோய்சில பொருள்போம்
கலைதனில் தணியாப் பயித்திய ரோகம்
கண்டபுத் திரிகளும் நாசம்.

(இ.ள்) துலாம் இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், பெண்களின் வஞ்சனையால் துக்கமும் வறுமையும் வந்து சேரும். விருச்சிக இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், கண்டங்கள் உண்டாகும். பகை தோன்றும்; வறுமை உண்டாகும்; பொருள்கள் நாசமாகும். தனுசு இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், சிறிதளவு இலாபம் கிடைக்கும்; வாணிபம் சிறப்புற நடக்கும். நோய்கள் வரும்; பொருள் நட்டமாகும். மகர இராசியில் சந்திரன் இருக்க, சந்திர திசை நடக்கில், மனநோய் உண்டாகும். புத்திரகளுக்குத் துன்பம் நேரும்.

இதுவுமது

29. கும்பமே நோயும் தரித்திர விரணம்
கொடுத்திடும் கோபமே மீனம்
அம்புவிப் பேறு நீசர்சன் மானம்
ஆகிய ரோகமே காலில்
வெம்பிய பிணிபோம் சௌக்கிய இலாபம்
விளங்கிடும் என்றனர் விருந்தே
வம்புகொள் முலையாய்! துர்த்தானம் இல்லா
மதிதிசைக் குப்பலன் வகுத்தே.

(இ-ள்) கும்ப இராசியில் சந்திரன இருக்க, சந்திர திசை நடக்கில், வறுமை தோன்றும்; காயங்கள் உண்டாகும்; கோபம் உண்டாகும். மீன இராசியில் சந்திரன் இருக்க, சந்திரன் திசை நடக்கில், பூமிச் சேர்க்கை உண்டாகும். நீசர்கள் சேர்க்கை ஏற்படும். காலில் நோய் தோன்றும். தீய வீடுகளிலன்றி நல்ல வீடுகளில் சந்திரன் சந்திரன் இருந்து, சந்திரன் திசை நடக்கில், நோய்கள் நீங்கி சுகம் உண்டாகும். சௌகரியங்களும் இலாபங்களும் கிடைக்கும்.

செவ்வாய்த் திசைப் பலன்

30. நிலமகன் பகைத்தோர் வீட்டினில் இருந்தால்
நெடும்பகை ஆயுத விரணம்
குலம்பயில் தனம்போம் மித்திரர் வீடேல்
கூறுவர் மித்திரவி ரோதம்
நலம்பெறும் மங்களன் களத்திர விரோதம்
நாடிய தந்தநோ யாகும்
பலனின்றி விடுமே தாகநோய் இளைப்பும்
பகர்ந்தசஞ் சாரமும் வருமே.

(இ-ள்) செவ்வாய் பகைவீட்டில் இருக்க, செவ்வாய் திசை நடக்கில், ஆயுதத்தால் காயம் உண்டாகும். செவ்வாய் நட்பு வீட்டில் இருக்க, செவ்வாய் திசை நடக்கில், நண்பர்களுடன் பகை ஏற்படும். களத்திர விரோதம் உண்டாகும். பல் நோய் ஏற்படுவதோடு, தாகமும் இளைப்பும் ஏற்படும்; அலைச்சலால் வருந்த நேரிடும்.

இதுவுமது

31. எண்ணிய உச்சம் இராச வல்லபமாம்
எய்திய பூபதி வரத்து
தண்ணிலக் கனமே உச்சநாட் குறைந்து
நற்பலன் பெறுவனே கோணம்

புண்ணிய தானம் சனபரி வாரம்
பூபலன் யாவையும் பொருந்தும்
கண்ணிசேர் குழலாய்! மித்துரு வீடு
காணில்நிட் சேபமே காணும்.

(இ.ள்) மலர்களால் தொடுக்கப்பட்ட கண்ணியைக் கூந்தலில் சூடியிருப்பவளே ! செவ்வாய் உச்ச வீட்டில் இருக்க, செவ்வாய் திசையில் இராச வல்லமை உடையவனாக விளங்குவான். இலக்கனத்தில் நிற்க நற்பலன் பெறுவான். திரிகோணத் தானங்களில் இருக்க, பல கோயில்களுக்கும் சென்று புண்ணிய நீராடுவான். உற்றார் உறவினர் சூழ இருப்பான். பூமி இலாபம் கிடைக்கும். செவ்வாய் நட்பு வீட்டில் இருக்க, செவ்வாய் திசை நடக்கில், புதையல் கிடைக்கும்.

பன்னிரு இராசிகளில் செவ்வாய் நிற்க, செவ்வாய் திசைப் பலன்கள்

32. எரிதகர் சேரில் பைத்திய ரோகம்
எய்திடும் அக்கினி மந்தம்
விரியும்ஆ யாசம் கீர்த்தியுற் சாகம்
விடையினில் ரோகசோ கமுமாம்
தெரிவுறும் பிறர்க்குத் தந்திரம் வியங்கோள்
சிறந்திடும் வேதியர் சாபம்
வரிவிழி மயிலே! வருமென முன்னோர்
வழுத்தினர் உலகெலா மகிழ.

(இ.ள்) செவ்வரியோடிய விழிகளையும் மயிலின் சாயலையும் கொண்ட பெண்ணே ! செவ்வாய் மேட இராசியில் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், மனவியாதி, அக்கினி மந்தம், ஆயாசம் முதலானவை தோன்றும் என்றாலும் புகழும், உற்சாகமும் உண்டாகும். இடப இராசியில் செவ்வாய் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், நோயும் துக்கமும் ஒரு சேர

உண்டாகும். அந்தணர்களுடைய சாபம் கிட்டும் என்று இந்த உலகமெல்லாம் மகிழும்படியாக சோதிடக் கலையில் வல்ல நம் முன்னோர்கள் கூறியுள்ளனர் என்பதை அறிவாயாக.

இதுவுமது

33. வஞ்சியே யாழில் பரதேச வாசம்
வர்த்திக்கும் வித்தியாவி நோதம்
அஞ்சிய செலவு சனங்கள்வி ரோதம்
அழகிய சம்பத்து லாபம்
மஞ்சியல் கடகம் யாத்திரை விரோதம்
மறப்பொடு புத்திர நாசம்
கொஞ்சிய மடவார்! உபாதியாம் இளைப்பும்
கொண்டிடு கிலேசமும் கூடும்.

(இ.ள்) மிதுன இராசியில் செவ்வாய் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், அன்னிய தேசங்களில் சென்று தங்க நேரிடும். விநோத வித்தைகளில் ஆர்வம் செல்லும். செலவு அதிகமாகும். உறவினர்களின் விரோதம் உண்டாகும். தன இலாபம் உண்டாகும். கடக இராசியில் செவ்வாய் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், யாத்திரை செல்ல நேரிடும்; விரோதங்கள் உண்டாகும்; மறதி ஏற்படும். புத்திரருக்கு அழிவு உண்டாகும்; பெண்களால் தொல்லை ஏற்படும். இளைப்பு நோய் ஏற்படுவதோடு மனத்துயரம் அதிகமாகும்.

இதுவுமது

34. கூடிய சேய்மந் திரியுட னாகில்
குதப்பிணி குதிரையும் வரத்து
நீடிய கீர்த்தி தேகஉட் டணமாம்
நெருங்கிய மந்திர வயிரம்

நாடிய கடக நீசத்தி லாகில்
நடந்தகா ணான்கினில் இருக்கில்
தேடிய சிங்கம் தனமது சேதம்
செலவிடும் ஆயுத விரணம்.

(இ.ள்) செவ்வாய் குருவுடன் கூடியிருக்க, செவ்வாய் திசை நடக்கில், குதத்தில் நோய் உண்டாகும். குதிரை கிடைக்கும். (வாகன யோகம் உண்டாகும்), புகழ் பெருகும்; வைரம் கிட்டும். கடகத்தில் செவ்வாய் திசை நடக்கில் உடல் உஷ்ணமாகும். மந்திரத்தில் ஈடுபாடு உண்டாகும். வைரம் கிட்டும். சிம்ம இராசியில் செவ்வாய் இருக்க, செவ்வாய் திசை நடக்கில், செல்வம் விரயமாகும். வீண் செலவுகள் ஏற்படும்; ஆயுதங்களால் காயம் உண்டாகும்.

இதுவுமது

35. கன்னியில் சுபமாம் பரவுப சாரம்
களத்திர புத்திர லாபம்
துன்னிய பூமி பலிதம்வ ராது
துலைகடை தீர்த்தயாத் திரைபோம்
பின்னியல் போதே திரும்பிவா கனம்போம்
பேசிய மித்திரர் கலகம்
முன்னியல் பான தரித்திரம் நாளும்
முடியுமென் றுரைத்தனர் முன்னோர்.

(இ.ள்) கன்னி இராசியில் செவ்வாய் இருக்க, செவ்வாய் திசை நடக்கில், சுபமாகும். உதவிகள் கிடைக்கும்; மனைவி, புத்திரர் இலாபம் உண்டாகும். ஆனால் பூமியில் விளைச்சல் குறையும். துலாம் இராசியில் செவ்வாய் இருக்க, செவ்வாய் திசை நடக்கில், புண்ணிய தீர்த்தமாட யாத்திரை மேற்கொள்வர். திசையின் பின்பகுதியில் வாகனம்

தொலைந்து போகும். நட்புப் பாராட்டிய நண்பர்கள் கலகம் செய்வார்கள். ஆனால் முன்னிருந்த வறுமை நீங்கிப் போகும் என்று சோதிடக் கலையில் வல்லவரான நம் முன்னோர் கூறியுள்ளனர்.

இதுவுமது

36. விருட்சிகம் வித்தை தானியம் தனங்கள்
விரும்பும்வே ளாண்மைகள் கிணறு
திருப்பெறல் வருமே தனுசினில் மறையோர்
தேடிய பொன்னையே கொள்வன்
மருக்கமர் குழலி! இராசசன் மானம்
வளர்கின்ற சம்பத்துக் குடைமை
நெருங்கிய மகரம் உச்சமுன் விளம்பும்
நெறியிலே பலன்களை நிகழ்த்தே.

(இ.ள்) விருச்சிக இராசியில் செவ்வாய் இருந்து, செவ்வாய் திசை நடக்கில் வித்தை சிறக்கும்; தனம் பெருகும்; தானிய விளைச்சல் அதிகமாகும்; வேளாண்மை சிறப்புற நடக்கும். தனுசு இராசியில் செவ்வாய் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், அந்தணர்கள் தேடி வைத்த பொருளை அபகரிப்பான். மகர இராசியில் செவ்வாய் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், அரசனால் கௌரவிக்கப்படுவான். செல்வம் பெருகும். பாக்கியங்கள் அனைத்தும் உண்டாகும். செவ்வாய் திசையில் இறுதியில் தனம் வரும். நண்பர்களாலும் உற்றோராலும் பயம் உண்டாகும்.

இதுவுமது

37. மகரமந் தியத்தில் தனம்வரு மல்லால்
வரும்பெரும் புவியினால் பயமாம்
பகருவ தின்ன நட்புமால் உற்றோர்
பயங்கும்ப மதிற்கள்வ ராலே

தகருமே செல்வம் கடன்பகை யாதல்
தரித்திரம் மீனத்தில் ரோகம்
சிகரமா முலையாய்! தேசசஞ் சாரம்
தேகத்தில் விரணவா தையுமே.

(இ.ள்) செவ்வாய், கும்ப இராசியில் இருந்து, செவ்வாய் திசை நடக்கில், கள்வர்களால் செல்வம் கொள்ளை போகும். கடன் மற்றும் பகையால் வறுமை தோன்றும். செவ்வாய், மீன இராசியில் இருந்து செவ்வாய் திசை நடக்கில் நோய் உண்டாகும். பிற தேசங்களுக்குச் சென்று அலைய நேரிடும். காயத்தினால் துன்பம் உண்டாகும் என்பதை மலை முகட்டினை ஒத்த தனங்களை உடைய பெண்ணே அறிவாயாக.

இராகு, கேதுவின் திசைப் பலன்கள்

38. எட்டிரு மூன்றீ ராறினில் தானே
இயம்புவன் துர்பலன் கோபம்
நட்டகேந் திரங்கள் நற்பலன் இராகு
நடந்திடும் பலனையே நவில
தொட்டவன் இருந்த ராசிக்கு நாதன்
துலங்கி பலனதாங் கேதில்
திட்டமே சொல்ல என்றனன் விடனூர்
சிறந்திடு முனிவரன் றானே.

(இ.ள்) எட்டு, ஆறு, பன்னிரண்டில் இராகு அல்லது கேது நிற்க, அவர்களின் திசைகளில் தீய பலன்கள் உண்டாகும். கோபம் உண்டாகும். கேந்திரங் களில் இவர்கள் நின்று, இவர்கள் திசை நடக்கில் நற்பலன்களாகும். இராகு கேந்திரத்தில் எந்த இராசியில் நிற்கின்றதோ அந்த இராசிநாதனுக்குரிய பலனைக்

கொடுக்கும். இதைப்போலவே கேதுவும் செய்யும் என்று விடனூரில் சிறந்து விளங்கிய முனிவர் சொன்னார்.

குருதிசைப் பலன்கள்

39. பொன்னவன் ஆட்சியில் அரசர்தன் மகிழ்ச்சிப்
புகல்கின்ற காரிய சித்தி
பின்னவன் பகைத்தோர் வீடெனில் விரோதம்
பேசிடு மிகும்அப வாதம்
நன்னயம் நீங்கி நித்திரை மறையும்
நாட்டிய சுரமுடன் இளைப்பும்
இன்னமும் சிரத்தே வேதனை எரிவும்
இருந்திடும் வீடழி வாமே.

(இ.ள்) குரு நட்பு வீட்டில் இருக்க, குரு திசை நடக்கில், அரசரால் மகிழ்ச்சி ஏற்படும். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். குரு பகை வீட்டில் இருக்க, குரு திசை நடக்கில், அனைவரிடமும் விரோதம் உண்டாகும். வீண்பேச்சும், தூக்கம் கெடுதலும் ஏற்படும்; சுரம், இளைப்பு, தலை வேதனை எரிவு போன்றவை ஏற்படும்; வீடு அழியும்.

இதுவுமது

40. வருதிரி கோணம் சம்பத்துச் சாகம்
வளர்ந்திடும் புத்திர லாபம்
மருவுகேந் திரங்கள் பூமகள் இலாபம்
வருந்தெய்வ பத்தியு மாகும்
பொருநகர் ஞானம் சற்குரு நேயம்
போற்றுமன் னவர்தனம் பெறுவன்
திருவுரு மாதர் புத்திரர் மகிழ்ச்சி
சேருமென் றுரைத்தனர் தெரிந்தே.

(இ.ள்) குரு, ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய திரிகோண வீடுகளில் இருக்க, குரு திசை நடக்கில் செல்வம் பெருகும். புத்திர இலாபம் உண்டாகும். குரு, ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திர வீடுகளில் இருக்க, குருதிசை நடக்கில் பூமி இலாபம் உண்டாகும். தெய்வ பக்தி மிகும். குரு மேட இராசியில் இருக்க, குரு திசை நடக்கில், ஞானம் பெருகும். குரு பக்தி மிகும். மன்னவர்களிடமிருந்து செல்வம் கிடைக்கும். பெண்களாலும், புத்திரர்களாலும் மனமகிழ்ச்சி உண்டாகும்.

பன்னிரு இராசிகளில் குரு நிற்க, குரு திசைப் பலன்கள்

41. விடைபகை வளரும் நித்தமுந் சாக
மேவுமே வெகுதனலாபம்
தடையிலா மிதுனம் களத்திர தோடம்
தாமம்வே ளாண்மையும் வளரும்
கொடையுடை யவனாம் குலங்கள்வர்த் திக்கும்
கொடுத்திடும் பயம்அங்க வீனம்
இடைபிடி யனமே கடகம்தன் குலத்திற்
எய்தும்ஆ சாரத்தை வளர்க்கும்.

(இ.ள்) இடப இராசியில் குரு இருக்க, குரு திசை நடக்கில், பகை வளரும்; தினமும் உற்சாகம் ஏற்படும். மிகுதியான தன இலாபம் கிட்டும். மிதுன இராசியில் குரு இருக்க குரு திசை நடக்கில் களத்திர தோடம் உண்டாகும். தர்மம் வளரும். வேளாண்மை சிறக்கும். கொடையுடையவனாக விளங்குவான். குலம் பெருகும். பயத்தைக் கொடுக்கும். அங்கஈனத்தை ஏற்படுத்தும். கடக இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், ஆசாரத்தை வளர்க்கும்.

இதுவுமது

42. மன்னவ ராலே சகலபோ கமுமே
வர்த்திக்கும் வித்துவத னாலே
இன்னதல உச்சம் இராச்சியம் தனங்கள்
எய்திடும் இறையவ னாவன்
சொன்னதோர்போகம் இல்லையே யமைச்சர்
தோன்றிய உச்சத்துக் கடையில்
அன்னமே! நீச மங்கையர் நட்பு
ஆம்பிதா தாய்துக்க மேவும்.

(இ.ள்) கடக இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், அரசரால் மதிக்கப்படுவர். சுக வாழ்க்கை உண்டாகும். வித்துவான்களாலே போற்றப்படுவர். பரம உச்ச பாகையில் அமைந்த குரு திசையில் தன் இனத்தைச் சார்ந்தோருக்குத் தலைவனாக விளங்குவான். ஆனால் குருதிசையின் பிற்பகுதியில் சுகமின்றிக் கீழ்மையான பெண்களின் தொடர்பு ஏற்படும். தாய் தந்தையரால் துக்கம் உண்டாகும்.

இதுவுமது

43. அணிகலம் விற்கும் கவடுகள் பேசு
மதியெனின் மன்னரான மகிழ்ச்சி
தணிவிலா மகவும் களத்திர முண்டாம்
தருமங்கள் புரிதொழி லிலனாம்
பணிபெறு கன்னி தாழ்ந்தபெண் சிநேகம்
பகர்தன லாபமேல் வருகும்
துணிவுடன் எறிந்த தனம்வரும் துலையில்
தூர்த்தனாம் களத்திர கோபம்.

(இ.ள்) கடக இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், அணிகலன்களை விற்க நேரிடும். சிம்ம இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், மன்னரால் மகிழ்ச்சி உண்டாகும். நல்ல களத்திரமும் உண்டாகும். நல்ல புத்திரர்கள் தோன்றுவர். தர்மங்களைச் செய்து

மகிழ்ந்திருப்பான். கன்னி இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், தாழ்ந்த பெண்களின் நட்பு உண்டாகும். தன இலாபம் பெருகும். செல்வம் வந்து சேரும். துலாம் இராசியில் குரு இருக்க, குரு திசை நடக்கில், மன சஞ்சலமும் துயரங்களும் உண்டாகும். களத்திரத்தினால் கோபம் உண்டாகும்.

இதுவுமது

44. விரணநோய் கோற்கே போசன பீடை
விரும்பிய வணிகரே யுறவு
முரண்மிகு தேளில் தேவதா பத்தி
முழுகுவன் தேசங்கள் பார்ப்பன்
கரணமே வென்றோன் றுரவியுச் சாகி
காணியாம் மூலத்ரி கோணம்
சரணமா மறையோர் தனைப்பணி யரசர்
சாற்றிய சுகமெலாந் தருமே.

(இ.ள்) காயங்கள், நோய் போன்றவையோடு நல்ல உணவு இன்றி வருந்துவர். இருப்பினும் வணிகர்களுடன் நல்லுறவு உண்டாகும். விருச்சிக இராசியில் குரு இருக்க குரு திசை நடக்கில், தெய்வ பக்தி மிகும். புண்ணிய தீர்த்தங்களாடி பல நாடுகளுக்கும் சென்று வருவான். ஐம்புலன்களை வென்ற துறவியாவான். மூலதிரிகோணத்தில் குரு இருக்க, குரு திசை நடக்கில் மறையோரைப் பணிந்து போற்றுவான். அரசனால் பாக்கியங்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றுச் சுகமாக வாழ்வான்.

இதுவுமது

45. சிலைதன பதியாம் புத்திரவி ருத்தியாம்
சிறந்திடும் மண்டல பதியாம்
கலைதெரி வல்லன் குருபத்தி உடையன்
கருதும்வியா பாரத்தில் வல்லன்

உலவுறு மகர நோயது துக்கம்
ஓங்கிய தரித்திரம் வளரும்
மலைவுகொள் துயரம் யாத்திரை கெடுதி
மன்னரால் ஆயுத விரணம்.

(இ.ள்) தனுசு இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், புத்திர விருத்தி உண்டாகும். மண்டலத்தை ஆள்பவனாக விலங்குவான்; கலைகளில் வல்லவனாகத் திகழ்வான். குரு பக்தி உடையவனாக இருப்பான்; நினைத்த வியாபாரத்தைச் சிறப்புறச் செய்து முடிப்பவனாக விளங்குவான். மகர இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில் நோய் கொண்டவனாக இருப்பான். துக்கம் உண்டாகும். வறுமையுடையவனாக இருப்பான். பயணங்களால் துன்பம் உண்டாகும். அரசாங்கத்தால் ஆயுத காயம் ஏற்படும்.

இதுவுமது

46. சொல்லது நீசம் தூஷிக்கப் படுவன்
துணிவுள விராசதண் டனையாம்
நல்லஊண் அறியான் கூலிசெய் துண்பன்
நாரியர் நீசரை அணைவான்
மெல்லமான் கடையே லகமுடைத் துண்பன்
வேடர்பொன் பெறுவனே விரும்பி
அல்லிசேண் மரம்விற் றுண்பதும் அன்றி
ஆடுமேய்த் துண்பதும் அவனே.

(இ.ள்) மேலும் மகர இராசிக்குச் குரு நீசன் என்பதால் பலருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவான். இராச தண்டனையைப் பெறுவான். நல்ல உணவு இன்றி, சேவகம் செய்து உண்பான். தாழ்வான பெண்களைச் சேர்வான். சிறிய வேலைகளைச் செய்து

வாழ்வான். வேட்டையாடி பொருள் பெறுவான். மரம் விற்றும், ஆடு, மாடுகளை மேய்த்தும் வாழ்க்கையை ஓட்டுவான்.

இதுவுமது

47. இன்னமான் கடையில் தரித்திரம் என்னும்
இன்பம்பின் வாகன மெய்துஞ்
சொன்னதோர் கும்பம் சௌரியஞ் சோரம்
துலங்கபி மானியா பாரி
அன்னமீ னத்தில் கலைகள்சாற் றிடுவான்
ஆனதோர் சௌக்கியம் வீரம்
பொன்னவன் திசையில் இளமுலை யாளே!
பூசுரர் தமையென்றும் போற்றும்.

(இ.ள்) மேலும் தரித்திரம் உள்ளவளாக விளங்குவான். திசையின் கடைசியில் சுகம் பெறுவான். வாகன யோகம் பெறுவான். கும்ப இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், நன்மைகள் உண்டாகும். திருடர்களால் பயம் உண்டாகும். நன்மதிப்பைப் பெறுவான். வியாபாரம் சிறக்கும். இளமையான தனங்களை கொண்ட பெண்ணே! இவற்றை அறிவாயாக. மீன இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், கலைகளில் வல்லவனாக விளங்குவான். அனைத்துப் பாக்கியங்களும் உண்டாகும். வீரனாக் விளங்குவான். பலராலும் போற்றப்படுவான்.

இதுவுமது

48. கண்டஇப் பலன்கள் சுபத்தான மாகில்
கருதுதுர்த் தானங்கள் நடுவே
அண்டிடப் பலன்போம் கேந்திர கோணத்
ததிபதி யாகிலே இளைக்கும்

விண்டகேந் திரத்தே இருந்திடச் சுபமாம்
விளங்கிடா துறைந்திடில் நீசம்
வண்டமர் குழலாய்! மூலத்ரி கோணம்
வந்திடில் நற்பலன் வருமே.

(இ.ள்) குரு சுபமான இடத்தில் இருந்து, குருதிசை நடக்கில், சுபமான பலன்கள் நடக்கும். குரு தீய இடங்களில் இருந்து, குருதிசை நடக்கில், தீய பலன்கள் நடக்கும். குரு கேந்திர கோணங்களுக்கு அதிபதியாக இருப்பின், இளைப்பான் கேந்திரத்தில் நிற்க சுபமாகும். தீய இடங்களில் இருப்பின், தாழ்வான பலன்களே கிடைக்கும். மூலத்ரிகோண இராசியில் குரு இருக்க, குருதிசை நடக்கில், நல்ல பலன்கள் கிடைக்கும்.

சனி திசைப் பலன்கள்

49. காரிநட் பிருந்த திசைசெப்ப நல்ல
கருமங்கள் பூமகள் நோக்கம்
சீரிய கீர்த்தி சிநேகமாம் மறைந்த
திசைபிறர் மாதினைப் புணர்வன்
பாரியர் காமி பாரியைப் புணர்வன்
பண்ணுமே விரோதங்கள் பலவும்
வீரிய உச்சம் சுகம்சுபம் அல்லால்
விளங்குசே னாபதி இவனாம்.

(இ.ள்) சனி நட்புடன் இருக்க, சனி திசையில் நல்ல செயல்கள் நிறைவேறும். வேளாண்மையால் இலாபம் கிட்டும். புகழ் உண்டாகும். பலருடைய நட்பு கிடைக்கும். சனி மறைய, சனி திசையில் பிறருடைய மனைவியரோடு சேருவான்; காமம் நிறைந்தவனாக விளங்குவான். விரோதமான செயல்கள் பலவற்றையும் செய்வான். சனி உச்ச இராசியில் இருக்க, சனி திசையில் எல்லா பாக்கியங்களை பெறுவான். சேனாதிபதியாக விளங்குவான்.

இதுவுமது

50. காணதி உச்சம் வெகுபிர தாபி
கருதிய சனபரி பாலன்
பேணவே உச்சக் கடையில்வியா பாரி
பேசிய தலம்பல பெறுவன்
பூணணி மைந்த ருண்டுமே டத்திற்
பொருந்திட அமைச்சர்நட் புண்டாம்
கோணவே அழலை வழிசன விரோதி
கொண்டிடும் வாதரோ கமுமே.

(இ.ள்) சனி அதி உச்சனாக இருந்து, சனி திசை நடக்கில், பலராலும் போற்றக் கூடியவனாக விளங்குவான். மக்களைக் காக்கக் கூடியவனாக இருப்பான். திசையின் கடைசியில் சிறந்த வியாபாரியாகப் பல இடங்களையும் பெறுவான். புத்திரர்கள் தோன்றுவார்கள். மேட இராசியில் சனி இருந்து, சனி திசை நடக்கில் அமைச்சரின் நட்பு உண்டாகும். அழலை, வாதரோகம் முதலான நோய்கள் உண்டாகும். பந்துசன விரோதம் ஏற்படும்.

பன்னிரு இராசிகளில் சனி நிற்க, சனி திசைப் பலன்கள்

51. நீசமாம் பாகத் தேகதோய பொன்போல
நிகழ்மறை வேதியர் பகையாம்
வாசமா நீசக் கடையினிற் தேக
வருத்தமும் தவமும்மல் லாதே
நாசமாம் தலங்கள் இளைப்புநோய் வந்தே
நடுங்குவர் என்றுமுன் நவின்றார்
காசமாம் உச்சங் காண்தின் பலன்கள்
கருத்துணர் திடமறிந் துரையே!

(இ.ள்) மேட இராசியில் சனி நீசமடைவதால், சனி திசையில் மத்தியில் வியாதிகளுடன், அந்தணர்களின் பகையும் உண்டாகும். திசையின் கடைசியில் உடல் நோவும். அழிவுகளும் ஏற்படும். இளைப்பு நோய் ஏற்பட்டு வருந்துவர் என்று சோதிடக் கலையில் வல்லவர்களாகிய நம் முன்னோர் ஏற்படுத்தியுள்ளனர். அதி உச்சத்தின் பலன்களைக் கருத்தறிந்து இடமறிந்து உரைப்பாயாக.

இதுவுமது

52. விடைதனிற் பெரியோர் சங்கதி விசேடம்
விளங்கிய மானங்கள் வீரம்
தடையிலாச் செயங்கள் அரசர்சன் மானம்
நாட்டிகம் பெறுவனே மிதுனம்
கொடைபுரை இல்லான் புத்திரர் உண்டாம்
கோதையர் திருடவே கொடுப்பன்
கடைவிழி காதில் நோய்வரு மேகம்
கலந்திடத் தனியனாம் காணே.

(இ.ள்) இடப இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில், பெரியோரால் போற்றப்படுவான். பலவித சிறப்புக்களைப் பெறுவான். தடையில்லாத வெற்றிகளைடைவான். வீரத்தோடு விளங்குவான். மன்னரிடமிருந்து பல பரிசுகளைப் பெற்று உயர்வான். மிதுன இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில், பிறருக்குப் பொருள் எதனையும் வழங்காதவனாக இருப்பான்; புத்திரர்கள் தோன்றுவர்; பெண்களால் பொருளை இழப்பான். விழி நோய், காது நோய், மேக நோய் போன்றவற்றால் துன்புறுவான்.

இதுவுமது

53. கடகத்தில் இலாபங் கடற்பொரு ளெய்தும்
காரிய விசாரிவல் லவனாம்
நடமிடு சிநேகம் அநேகரோ கங்கள்
நாடிய புத்திர நாசம்
விடமிடும் கண்ணாய் ! பந்துவே விரோதம்
மேதினி பிறந்திடும் கன்னி
தொடர்ந்தரும் வியாதி சுபம்விவ சாயம்
தோன்றிடும் இராசவல் லபமே.

(இ.ள்) *கடக இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில், கடல் வாணிபத்தால் இலாபம் உண்டாகும். காரியங்களை நிறைவேற்றுவதில் வல்லவனாக விளங்குவான். பெண்களின் தொடர்பினால் நோய்களை அடைவான். புத்திர நாசம் ஏற்படும். கண்ணில் நோய் ஏற்படும். உறவினர்களுடன் பகை உண்டாகும். கன்னி இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில், விவசாயத்தால் இலாபம் உண்டாகும். அரசமரியாதை ஏற்படும். சுகம் பெறுவர்.*

இதுவுமது

54. துலைதவங் தருமம் போக பாக்கியமும்
தோன்றிடும் விருட்சிகம் காட்டி
அலைவதீ தன்றிக் களவுசெய் துண்பன்
அருங்கவி நீசரால் எய்தும்
சிலைசுகம் காமக் களத்திர சுகமாம்
சிறந்திடும் அடிமைகள் பெறுவன்
கலைதன் இலாபம் மித்திரர் மகிழ்ச்சி
களத்திர போகமுண் டாமே.

(இ.ள்) *துலா இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில் எல்லா பாக்கியங்களும் உண்டாகும்; சுகம் ஓங்கிடும்; தருமச் செயல்களில் ஈடுபட்டு மகிழ்வர்.*

விருச்சிக இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில் காட்டில் அலைவன். களவுத் தொழிலில் ஈடுபட்டு உணவு உண்பன். கீழ்மையானவர்களோடு தொடர்பு கொள்வான். தனுசு இராசியில் சனி, சனிதிசை நடக்கில் சுகம் ஓங்கிடும்; களத்திரத்தால் மகிழ்ச்சி உண்டாகும். நல்ல வேலையாட்கள் அமைவர். மகர இராசியில் சனி இருந்து, சனிதிசை நடக்கில், செல்வம் பெருகும்; நண்பர்களால் மகிழ்ச்சி ஏற்படும்; களத்திரத்தால் சுகம் உண்டாகும்.

இதுவுமது

55. சாடியில் சுகமாம் மூலத்திர கோணம்
தராபதி திருக்கணோக் குண்டாம்
கூடிய தனம்யா பாரிமா னங்கள்
கொடுப்பது மீனத்துச் சாகம்
நாடிய புரங்கட் கதிபனு மாவன்
நாடும்உச் சாகம்இ லாபம்
தேடிதுர்த் தானம் தள்ளிஇப் பலனைச்
செப்புக என்றனர் தெளிந்தோர்.

(இ.ள்) கும்ப இராசியில் சனி இருந்து, சனி திசை நடக்கில், சனிக்கு அது மூலதிரிகோண வீடாதலின் மிகுந்த சுகம் உண்டாகும். செல்வம் பெருகும்; வியாபாரம் பெருகும். மீன இராசியில் சனி இருந்து, சனிதிசை இருந்து, சனிதிசை நடக்கில், உற்சாகத்துடன் விளங்குவான். பல ஊர்களுக்கும் அதிபதியாவான்; அனைத்திலும் இலாபம் கிட்டும். தீயதானங்களின் பலனை விட்டுவிட்டு இந்தப் பலனைச் சொல்ல வேண்டுமென்று சோதிடக்கலையில் தெளிந்த அறிவு பெற்றவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

புதன்திசைப் பலன்கள்

56. மதிமகன் நட்பில் வித்தைகள் தனமும்
வளர்ந்திடும் மன்னரால் மகிழ்ச்சி
புதியசத் துருவேல் பங்கமு ரோகம்
புத்திர களத்திர துக்கம்
அதிகவெம் பவங்கள் ஆயுத விரணம்
அல்லது புத்தியே நாசம்
விதிபெறு மரபி லாபத் துக்கம்
விழிவலி சுரங்களும் வருமே.

(இ.ள்) புதன் நட்பு வீட்டில் இருக்க, புதன் திசை நடக்கில், வித்தைகள் சிறக்கும்; செல்வம் பெருகும்; அரசரால் நன்மைகள் உண்டாகும்; புதன் பகை வீட்டில் இருக்க, புதன் திசை நடக்கில், குறைபாடும் நோயும் தோன்றிடும்; களத்திரம், புத்திரர்களால் துக்கம் ஏற்படும். மனத்துயரங்கள் ஏற்படும்; ஆயுதங்களால் காயங்கள் உண்டாகும். இல்லாவிடில் அறிவில் மயக்கம் ஏற்படும். கண் வலிகளும் சுரங்களும் வரும். இலாபமும் துக்கமும் இத்திசையில் கலந்து வரும்.

பன்னிரு இராசிகளில் புதன் நிற்க, புதன் திசைப் பலன்கள்

57. திரிகோண புந்தி சோதர வின்பம்
சிறந்திடும் எக்கலை புரிதல்
புரியும் வஞ்சனைகள் மேடத்தில் வீரம்
புகலய லகத்தில் சஞ்சாரம்
கரிவுசே யின்பம் வெகுதனச் சேதம்
கரவிடை யன்னைவி ரோதம்
வரிவிழி மடவாய்! குலசிரேட் டமும்பொன்
வருமக விர்த்திக்கு மாதே.

(இ.ள்) திரிகோணத்தில் புதன் இருக்க, புதன்திசை நடக்கில், சகோதரர்களால் சந்தோஷம் உண்டாகும்.

எந்தக் கலையில் ஈடுபட்டாலும் சிறப்புடன் விளங்குவான். வஞ்சனைகள் புரிவான். மேட இராசியில் புதன் இருக்க, புதன்திசை நடக்கில், தைரியம் உண்டாகும். இடப இராசியில் புதன் இருக்க, புதனதிசை நடக்கில், குலச் சிறப்புண்டாகும். பொன் பொருள் சேரும். புத்திரர் தோன்றுவர் என்பதை செவ்வரி படர்ந்த விழிகளையுடைய மடப்பம் பொருந்திய பெண்ணே அறிவாயாக.

இதுவுமது

58. புந்தியான் சேர வத்திரா பரணம்
புத்திர ரநேகமே யாகும்
முந்திபங் கதிலே சிரேஷ்டனு மாகி
மோகியாங் களத்திர பலனாஞ்
சிந்திசந்தான விருத்தியாங் கோட்கள்
சேர்ந்தவர் தானுறும் பலனாம்
பிந்திய கடக மற்பசம்பத்து
பெரும்பகை யொக்கலுங் கவரே.

(இ.ள்) மிதுன இராசியில் புதன் இருக்க, புதன்திசை நடக்கில், பட்டுப்பீதாம்பரம் முதலான உயர்ந்த ஆடைகள் கிடைக்கும். புத்திரர்கள் பிறப்பார்கள். திசையின் முதல் பகுதியில் பெண்களிடத்தே மோகம் கொள்வான்; களத்திரத்தால் மகிழ்ச்சி உண்டாகும். புத்திரர்கள் தோன்றுவர். கடக இராசியில் புதன் இருக்க, புதன்திசையில், செல்வம் சிறிதளவு சேரும். பெரும் பகை உண்டாகும்.

இதுவுமது

59. சிங்கத்து ஞானி இராசபூ டணணே
சிறந்திடு மேலுப காரி
மங்கையுச் சத்தே உன்னித யோகம்
வத்திரா பரணமும் வருமே

துங்கனன் முனிவர் ஊர்வசம் பெறுவன்
றோன்றிய புத்திரர் வளரும்
தங்குமோ ருச்சக் கடைபுத்தி வித்தை
தருமக வுடையதுண் டாமே.

(இ.ள்) சிம்ம இராசியில் புதன் இருக்க, புதன் திசை நடக்கில் ஞானியாக விளங்குவான்; அரசாங்கத்தால் போற்றப்படுபவனாக இருப்பான். அனைவருக்கும் உதவுக்கூடிய உயர்ந்த பண்புள்ள வனாகத் திகழ்வான். கன்னி இராசியில் உச்சத்தில் புதன் இருக்க, புதன் திசை நடக்கில், உன்னதமான நிலையை அடைவான். பட்டுப் பீதாம்பரம் முதலிய உயர்ந்த ஆடைகள் பெறுவான். அதிக நிலம் உடையவனாக விளங்குவான். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். புதன் திசையின் கடைசியில் வித்தையில் சிறந்து விளங்கும் புத்திரர்களால் பெரும் மகிழ்ச்சி ஏற்படும்.

இதுவுமது

60. இன்னமும் கீர்த்தி தருமமும் பெறுவன்
ஏந்திய மூலத்ரி கோணம்
சொன்னமுற் படியாம் அரசர்கள் போற்றத்
துலங்கிய தருமமே புரிவன்
வன்னமாந் துலையில் சாற்றுமா ரோக்கிய
மங்கையர் பலரையே புணர்வன்
அன்னமே தேளின் அற்பலா பமதாம்
அடிமையும் தருமமும் போமே.

(இ.ள்) மேலும் எல்லோராலும் புகழப்படுவான். தான தர்மங்கள் செய்து சிறக்க வாழ்வான். மூலதிரிகோணத்தில் விளங்கும் புதனால், அரசர்கள்

போற்றும் வகையில் சிறந்து விளங்குவான். தர்மங்கள் புரிவான். அன்னத்தை ஒத்த நடையுடைய பெண்ணே! துலாம் இராசியில் புதன் இருக்க, புதன் திசையில் பல பெண்களோடு உறவு கொள்வான். விருச்சிக இராசியில் புதன் இருக்க, புதன் திசையில் குறைந்த இலாபங்களை உடையவனாக இருப்பான். ஏவலாட்கள் அவனை விட்டு விலகுவர். தர்மம் செய்யான்.

இதுவுமது

61. காண்டீப மாகிற் றானியம் வரத்து
கருதுவன் மரத்திரற் பசுவே
வேண்டிய மகரம் கடன்தனச் செலவு
விரும்பியே காட்டினில் இருப்பான்
வேண்டிய கும்பம் காரியம் கெடுதல்
விளம்பவ மானமே ரோகம்
தாண்டிய மீனம் சவுக்கியம் சித்து
தனமுடன் தானியம் வருமே.

(இ-ள்) தனுசு இராசியில் புதன் இருக்க, புதன் திசையில், அதிக தானியம் விளையும். பசுக்கள் பெருகும். புத்திரர்களால் வருத்தம் தோன்றும். மகர இராசியில் புதன் இருக்க, புதன் திசையில், கடன் ஏற்படும். பொருள் செலவு மிகுதியாகும். மறைந்து வாழ நேரிடும். கும்ப இராசியில் புதன் இருக்க, புதன் திசையில், எடுத்த காரியங்கள் அனைத்திலும் தோல்வியே கிட்டும்; அவமானம் அடைய நேரிடும். நோய்கள் வந்து வாட்டும். மீன இராசியில் புதன் இருக்க, புதன் திசையில், அனைத்து சௌகர்யங்களும் உண்டாகும். செல்வம் பெருகும். தானியம் பெருகி விளையும்.

சுக்கிர திசைப் பலன்கள்

62. சுங்கனட் பிருந்த திசைவரும் காலம்
சொல்லதி காரம்வே ளாண்மை
தங்கவாழ் வோர்கள் நாயகன் தருமம்
தடாகங்கள் காணுப காரி
மங்கிய பகையிற் களத்திர நாசம்
வாழ்வது குடிசிலில் நீசம்
பொங்குசம் பத்து சுகமுமுற் பாதி
பொன்றிடு நாசம் பிற்பாதி.

(இ.ள்) சுக்கிரன் நட்போடு விளங்க, சுக்கிர திசையில் அதிகார வாழ்க்கை உண்டாகும்; வேளாண்மையால் இலாபம் வரும்; மற்றவர்க ளெல்லாம் தலைவனாகப் போற்றக் கூடிய சிறந்த குணங்களைக் கொண்டு விளங்குவான். கிணறு, ஏரிகள் இவைகளை நிறுவுவான். நாடி வந்தோர்க்கு உதவும் நற்பண்புடையவனாக விளங்குவான். சுக்கிரன் பகையுடன் இருக்க, சுக்கிர திசையில் பகை ஏற்படும். மனைவிக்கு மாரகம் நிகழும். பணக்கஷ்டம் ஏற்பட்டு குடிசையில் வாழ வேண்டிய அவல நிலையும் கீழ்மை நிலையும் ஏற்படும். திசையின் முற்பாதியில் செலவும் பெருகும். சுகம் பெருகும். திசையின் பிற்பகுதியில் அனைத்தும் நாசமாகும்.

பன்னிரு இராசிகளில் சுக்கிரன் நிற்க, சுக்கிர திசைப் பலன்கள்

63. மறைவிலா நீசம் தனம்புத்ர லாபம்
வருந்தகர் களத்திர வின்பம்
குறைவரு மகவும் மானஈ னமுமாம்
கூடிய யோகத்திற் கிலேசம்

நிறைபெரு விடையில் வெகுதன லாபம்
நேர்ந்தவே ளாண்மையே பலிக்கும்
இறையருள் பெறவே கலைகளை அறிவன்
ஈவதி ராசகன் னியரே.

(இ.ள்) சுக்கிரன் நீச இராசியில் இருக்கும் பொழுது, சுக்கிர திசையில் செல்வம் பெருகும்; புத்திர இலாபம் உண்டாகும். மேட இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிரன் திசையில் களத்திரத்தால் இன்பம் உண்டாகும். புத்திர தோடம் ஏற்படும்; மனக்கவலை உண்டாகும். இடையே சில யோகங்கள் கிடைக்கும். இடப இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிரன் திசையில் செல்வம் பெருகும்;. வேளாண்மையில் விளைச்சல் அதிகமாகக் கிடைக்கும். தெய்வ அருள் பெற்றுக் கலைகளில் சிறந்து விளங்குவான்.

இதுவுமது

64. தண்டுறை போதில் காரிய சித்தி
தழைத்தவுற் சாகவான் தனவான்
பண்டுசொல் கடகம் களத்திர தருமம்
பணிவிடைத் தொழிலினா லுண்பன்
மிண்டுசேய் சிங்கம் பிரபல மாதா
வெகுமதி மன்னர்கோ பத்தைக்
கண்டுசென் றிடுவன் பரதேசம் வித்தை
கல்வியிற் சீவன மாமே.

(இ.ள்) மிதுன இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசையில், எடுத்த காரியங்களெல்லாம் வெற்றி கிடைக்கும். மனதில் உற்சாகம் நிலவும். பொருட்செல்வம் மிகும். கடக இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசையில், மனைவிக்கு மாரகம் நிகழும். அடிமைத் தொழில் செய்து உண்பான். சிம்ம இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசையில், அன்னையால் புகழ்

உண்டாகும். அரசினர் சீற்றத்தால் பயம் ஏற்படும். வெளி தேசங்களுக்குச் செல்ல நேரிடும். கல்வி, தொழிலினால் பொருள் பெற்று உண்பன்.

இதுவுமது

65. கன்னியில் விசாரம் களத்திர போகம்
காணுமே அக்கினி வாதை
தண்ணிகர் கோபி பிரபல விரோதம்
தன்நவர் தனங்களே நாசம்
உன்னிய காமி மூலத்ரி கோணம்
ஓங்கிய தனம்பசு உண்டாம்
மின்னிய கன்னி வெறுத்திட வேண்டும்
வேண்டிய சம்பத்து வருமே.

(இ.ள்) கன்னி இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசையில், பெரும் அச்சம் தோன்றும். பெண்களிடம் தொடர்பு உண்டாகும்; தீயினால் துன்பமுண்டாகும். கோபம் மிகுதியாகும்; பெரிய பகை ஒன்று உண்டாகும். உற்றார் உறவினர்களின் செல்வங்களுக்குக் கேடு உண்டாகும். காமம் நிறைந்தவனாக விளங்குவான். மூலதிரிகோண வீடாகிய துலாம் இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசையில், செல்வம் ஓங்கும்; பசுக்கள் பெருகும்; பெண்களுடன் தொடர்பு ஏற்படும். வேண்டிய அளவு பொருள் இலாபம் கிடைக்கும்.

இதுவுமது

66. விருட்சிகந் தனமாம் சஞ்சாரம் உண்டாம்
மேவிய தனுசுசத் துருவாம்
தருமுத்தி யோக மகரத்திற் கிலேசம்
சத்ருபீ டையும்விவ சாயம்

வருங்கும்ப ஞானி தண்ட நாயகனாய்
வருத்தங்கள் பலருக்கும் புரிவன்
பொருங்கயன் முன்னிற் சமபோக மாகப்
புகலுறும் சவுக்கிய மாமே.

(இ.ள்) விருச்சிக இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசை நடக்கில், செல்வம் பெருகும்; அலைச்சல் உண்டாகும். தனுசு இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசையில், பகைவர்களால் துன்பம் உண்டாகும். நல்ல பதவி கிடைக்கும். மகர இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசை நடக்கில், மனக்கவலை ஏற்படும்; பகைவர்களால் துன்புற நேரிடும்; விவசாயத்திலும் பொருள் நஷ்டம் ஏற்படும். கும்ப இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசை நடக்கில், அறிவு பெறுவன்; ஆயினும் தண்டநாயகனாக விளங்கி, பலருக்கும் வருத்தத்தைத் தரக்கூடிய விளங்குவான்.

இதுவுமது

67. காட்டிய மீனம் பின்வரும் பாதி
காவல னாவன்ஈ தன்றித்
தீட்டிய யோக வான்சம வானாம்
சேர்வனே மடந்தையர் பலரை
நாட்டிய கருமம் கூபநற் றடாகம்
நடத்துவன கடற்றுறை லாபம்
பூட்டிய பணியாற் புனைமுலை மடவாய்!
புகரெனிற் புகல்வரிப் பலனே.

(இ.ள்) மீன இராசியில் சுக்கிரன் இருக்க, சுக்கிர திசை நடக்கில், திசையின் முற்பகுதியில் இல்லற இன்பம் மிகும்; அனைத்துச் சௌகரியங்களும் கிடைக்கப் பெறுவான். சுக்கிரதிசையின் பிற்பகுதியில் யோகவானாக விளங்குவான். பல பெண்களுடன் உறவு

கொள்வான். நற்காரியங்களைச் செய்வான். குளம், ஏரி முதலான நீர் நிலைகளை வெட்டுவான். கடல் வாணிகத்தினால் இலாபம் கிடைக்கும். அணிகள் அணியப் பெற்ற தனங்களை உடைய பெண்ணே ! சுக்கிரதிசையைக் குறித்து சோதிட வல்லவர்கள் இவற்றை எடுத்துரைத்துள்ளார்கள்.

சர்வார்த்த சிந்தாமணி திசைவிளக்கம்
முற்றிற்று

பாடல் முதற்குறிப்பு அகராதி

	பாடல் எண்.		பாடல் எண்.
அட்டமத்ததிபன்	12	குலம்புரி தொழிலில்	26
அட்டமத் திருந்தாற்	21	கூடிய சேய்மந்	34
அணிகலம் விற்கும்	43	கேந்திரம் துக்கம்	18
அன்னவன் திசைமேல்	4	கொடியவர் நான்கில்	7
ஆறினுக் குடையோன்	10	சத்தமத் துடையோன்	11
ஆறினை உடையோன்	20	சந்திரன் உச்ச	24
இலக்கனத் துடையோன்	1	சாடியிற் சுகமாம்	55
இன்னமான் கடையில்	47	சிங்கத்து ஞானி	59
இன்னமும் கீர்த்தி	60	சிலைதனில் தனமாம்	23
உச்சமே மூன்றில்	6	சிலைதன பதியாம்	45
உண்டிடும் கோளும்	9	சுங்கனட் பிருந்த	62
எட்டிரு மூன்றீ	38	சொல்லது நீசம்	46
எண்ணிய உச்ச	31	சொல்லுநல் லிடமாய்	39
எண்ணொரு நான்கில்	8	தடம்குளம் காண்பன்	13
எரிதகர் சேரில்	32	தண்டுறை போதிற்	64
ஒன்பதுக் குடையோன்	14	தண்டுறை மதியின்	27
கடகத்திற் இலாபம்	17	திரிகோண புந்து	57
கண்டலக் கனத்தோன்	2	துலைதவம் தருமம்	54
கண்டவிப் பலன்கள்	48	துலைவரு மதியேல்	45
கன்னியில் விசாரம்	65	நிலமகன் பகைத்தேர்	30
கன்னியிற் சுபமாம்	35	நீசமாம் பாகம்	51
காட்டும்ஈ ரைந்து	16	புந்தியான் சேர	58
காட்டிய மீனம்	67	பொன்னவன் ஆட்சி	39
காண்டிய மாகிற்	61	மகரமந் தியத்தில்	37
கானதி யுச்சம்	50	மதிமகன் நட்பிற்	56
காரிநட் பிருந்த	49	மறைவிலா நீச	63
கும்பமே நோயும்	29		

	பாடல் எண்.
மன்னவ ராலே	42
மனத்தினில் துக்கம்	25
மூன்றினுக் குடையோன்	5
மேடமே கதிரேற்	22
மேவிலக் கனத்தே	19
வஞ்சி:யே யாழிற்	33
வருதிரி கோணம்	40

	பாடல் எண்
வல்லவீ ரைந்து	15
வாக்கெனும் இரண்டு	3
விடைதனில் பெரியோர்	52
விடைபகை வளரும்	41
விரணநோய் கோற்ரே	44
விருட்சிகம் தனமாம்	66
விருட்சிகம் வித்தை க்ஷி	36
விருட்சிகம் வித்தை க்ஷி	36

துணை நூல்

சோதிடச் சில்லரைக் கோவை,

குப்புசாமி நாயுடு(பதிப்பு)

பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை,

முதற் பதிப்பு - 1921

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால் அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்.

THANJAVUR MAHARAJA
SERFOJI'S
MUSEUM